இப்போது! சாப்பிட்டவுடன்

கோல்கேட் டென்டல் க்ரீமால் பல் துலக்குவதானது

பல் சிதைவைத் தவிர்க்க உதவுகிறது

இதுவே பத்திரமும் உறுதியுமான வழி என்பது ருசுவாகிவிட்டது.

பிரபல பல் வைத்தியர்களின் மேற்பார்வையில் ஒரு தொகுதி காலேஜ் மாணவர்கள் சாப்பாட்டிற்குப் பின் 'கோல்கேட்' உபயோகித்துப் பல் துலக்கினர்—மற்றொரு தொகுதியினர் வழக்கப்படி பல் துலக்கினர். 'கோல்கேட்' உபயோகித்தோருக்குப் பற்களில் ஓட்டை விழுவது வேகமாகக் குறைந்தது. மற்றவர்களுக்கோ புதிய புதிய ஓட்டைகள் அதிகரித்தது. 'கோல்கேட்' எல்லாவித பல் சிதைவையும் தடுக்கும் என்று ஜம்பம் கூறவில்லை. ஆனால் 'கோல்கேட்' உபயோகித்தால் பல் சிதைவை நிறுத்த உதவுகிறது என்பது நிரூபிக்கப் பட்டிருக்கிறது.



எப்போதும் கோல்கேட் *உபயோகியுங்கள்

அதன்மூலம் உங்கள் பற்களை துலக்குவதோடு கூடவே வாயை துர்க்கந்தத்தை அகற்றி பல் சிதைவைத்தடுங்கள்!

*சாப்பிட்டவுடன்

கோல்கேட் வாலன் டூத் பிரஷை வாங்குங்கள்



வாலன் குஞ்சங்கள் உங்கள் ஈறுகளை பாதுகாப்பது போல் அமைக்கப்பெற்றுள்ளன.

சூலியோ டி. டி. டி. கூந்தல் தைலம்

தலையில் ஏற்படும் கிருமிகளை அறவே ஒழிக்கிறது



நறுமணத்துடன் பிசுக்கற்ற வகையில் உபயோகத்திற்கு உகந்தவாறு, கிருமிகளைக் கொல்லு மளவுக்கு டி. டி. டி. யைக் கலந்து முறைப்படி சூலியோ கூந்தல் தைலம் தயாரிக்கப்பட்டுள்ளது.



சூலியோவை ஒருமுறை உபயோகித்தவுடனே பேனும் அதைச் சார்ந்த முட்டைகளும் அறவே மடிகின்றன. மற்றுமொருமுறை உபயோகிப்பதனால் தலையிலேற்படும் கிருமிகள் மீண்டும் அணுகாமல் பாதுகாக்கிறது. அழகிய கூந்தலுக்கு எவ்வித ஹானியும் சூலியோ விளைவிக்காது.



SULEO D.D.T. *Hair Emulsion*

தலையிலேற்படும் சகல கிருமிகளையும் அறவே அகற்றுகிறது





வியாபார விவரங்களுக்கு:

ஜியாப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

REGD. No. M 4392





L. 141-50 TM


கல்கி




KALKI மே. 21, 1950 4 அணா



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras



அரித்து. எரிந்து கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது



நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து இனி யாரும் — எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும் உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அசயமாக வைத்துக் கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதரக் களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக, மிருதுவாகப் பட்டுப்போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சல், ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள், தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத்ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக்கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R.K. கூறுகிறார்: "பன்னிரண்டு வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித்தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்ட என் நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழுவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.

ஒருநாள் இரவு தூக்கத்துக்குப் பிறகும், ஊர் ஜனங்களின் கோபம் தணியவில்லை. போலீஸ்காரர்களை மிக்க உற்சாகத்துடன் வரவேற்று உதவினர். அந்தப் போலீஸ்காரர்களும், மாதுவும் அவன் தோழர்களும் நிகழ்த்திய அட்டகாசங்களைத் தங்கள் கண்களாலேயே ஒரு முறை பார்த்து விட்டு மாதுவைத் தேடத் தலைப்பட்டனர். மாதுவைத் தேடிக் கண்டுபிடிப்பதில் ஊர் ஜனங்கள் அத்தனை பேரும் முனைந்தனர்.

மாதுவைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அவனுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி எங்கெல்லாமோ அலைந்தார்கள். அலைந்ததுதான் மிச்சமாயிற்றே ஒழிய அவன் அகப்படவில்லை. ஆகவே அஸ்தமிக்கும் வேளையில் இன்னும் தேடுவதில் பயனில்லை என்று திரும்பி விட்டனர். திரும்பி வரும்போது போலீஸ்காரர்கள் இந்த 'மாது தேடும் படல'த்தை மறுபடியும் நாளை ஆரம்பிக்க வேண்டும் என்று தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். ஆனால் பிச்சை முத்து, மாது அப்படி ஓடி ஒளிந்து கொள்ளக் கூடியவனல்ல; அவன் எப்போதும் அர்த்தமின்றி ஊர் சுற்றுவதைப் போல், அப்போதும் நல்ல நரிக்காட்டை விட்டு வெளியூர் எங்கேயாகிலும் போயிருப்பான் என்று நம்பினான். ஆகவே போலீஸ்காரர்கள் கூறியதற்கு "நாளை ஒன்றும் தேட வேண்டாம்; அவன் தானாகவே வருகிறானா என்று பார்ப்போம்" என்று பதில் கூறினான்.

பிச்சை முத்து சொல்லி முடித்தானோ இல்லையோ ஒரு பெரும் குரல் வந்தது. அது ராமன் அம்பலக்காரனுடைய குரல்தான். "அதோ! அங்கே இருக்கிறான்! ஆச்சரியத்திலும் ஆச்சரியம், அவனேதான்!" என்று கூவினான்.

ஆம்; சந்தேகமின்றி மாதுவேதான். ஊர்க் கோவிலின் படிகளில், மேல்படியில் அமைதியாகச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். என்ன விசித்திரம் பாருங்கள். ஊர் வாசலில் அவன் உட்கார்ந்திருக்க அவனைத் தேடிச் செடியிலும், புதரிலும் காட்டிலும் மைல் கணக்காக அலைந்திருக்கிறார்கள்!

மாதுவைக் கண்டவுடன் அவனைப் பிடிக்க ஓடினார்கள். மாதுவோ அசைந்து கொடுக்க வில்லை; அவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. போலீஸ்காரர்கள் அவன் கையைப் பற்றி ஊருக்குள் அழைத்து வந்தார்கள். அவனை ஒரு பெருங்கூட்டம் பின் தொடர்ந்தது.

நல்ல நரிக்காட்டு, ஆண்-பெண் யாவரும் மாதுவைப் போலீஸாரிடம் ஒப்படைத்த பிறகு தங்கள் காரியம் முடிந்தது என்று சும்மா இருந்திருக்க வேண்டும். மாதுவுக்கும் இவர்கள் தன்னைப் போலீஸாரிடம் ஒப்படைத்ததில் கொஞ்சமும் கோபம் கொள்ளவில்லை.

மாதுவுக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். ஆகவே அவர்கள் இதைவிட நல்ல முறையில் நடந்து கொள்வார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவனை அவர்கள் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டதையும், கத்தியதையும், கேலி செய்ததையும், பல்லைக் காட்டியதையும் தான் அவன் எதிர்த்தான். அது அவனுக்குப் பிடிக்கவே இல்லை. அவர்கள் அப்படி நடந்து கொள்ள அவன் என்ன குரங்கா? இந்தக் கும்பலில் பிச்சை முத்துவும் சேர்ந்து கொண்டு, அவனைப் பல்லைக் காட்டிக் கேலிசெய்ததைப் பார்த்தபோது மாது அவர்களுடைய இரக்கமற்ற நன்றி கெட்ட தன்மையின் எல்லையை உணர்ந்தான்.

இத்துடன் முடிந்ததா? அதை விடக் கேவலமான நடத்தையை அவன் பார்க்க வேண்டிய விதியிருந்தது. ஆம், அது மலையாத்தாளின் வாய் மொழியாக வந்தது.

மாதுவைப் பிடித்துச் சென்ற கோஷ்டி ஊர்க் கோடியை அடைந்ததும் மலையாத்தாள் தன் கணவனுக்கு "அவனைச் சும்மா அழைத்துப் போக வேண்டாம் என்று சொல்லுங்கள் அவன் ஏமாற்றித் தப்பி ஓடி விடுவான். விலங்கை மாட்டச் சொல்லுங்கள்" என்று கூறினாள்!

இதைக் கேட்ட கூட்டத்திலிருந்த ஒருவன் "ஆமாம், கையைக் கட்டவில்லையென்றால் பையன் ஓடி விடுவான். பிறகு அவனைப் பிடிப்பதென்பது முடியாத காரியமாகப் போய்விடும்" என்று சொன்னான்.

ராமன் அம்பலக்காரனுடைய மகன், "ஆமாம், ஆமாம்! நீ தானே கஷ்டப்பட்டுப் பிடித்தாய்? ஏன் ஐயா, பேச வருகிறாய்? அவனாகப் போனால் போகிறது என்று பிடிபட்டான். இல்லையானால், அவனைப் பிடித்தே இருக்க முடியாதே!" என்றான்.

பிச்சை முத்து தன் மனைவியின் கட்டளையைச் சிரமேற் கொண்டு போலீஸ்காரர்களிடம் போய் "பையனுக்கு விசித்திர சக்திகள் எல்லாம் உண்டு; அதனால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் ஜாக்கிரதையாக இருந்ததாகாது; தப்பி ஓடினாலும் ஓடி விடுவான்; ஆகவே, அவன் கைக்கு விலங்குகளை மாட்டி விடுங்கள்" என்றான்.

போலீஸ்காரர்களும் மாதுவின் கைக்கு விலங்கு மாட்டினார்கள். (தொடரும்)

காத்திருந்து அவர்கள் சொல்லிய விலைக்கு வாங்கிப் போனார்கள். ஆகவே, அவர்கள் எதிர்பார்த்ததை விடச் சீக்கிரமாகவே கூடைகள் காலியாகி விட்டன. மிச்ச முள்ள பொழுதைத் தங்களுக்கு வேண்டிய மற்றப் பொருள்கள் வாங்குவதில் செல விட்டார்கள்.


சூரியஸ்தமனமாகி, மூன்று மணி நேரம் கழித்துத்தான் பிச்சை முத்துவும் அவன் மனைவி மலையாத்தாளும் வீட்டுக்குத் திரும்பினர். அவர்களுக்குச் சொந்தமாகவே ஒரு இரட்டை மாட்டு வண்டியிருந்ததால், எல்லாரையும் விட முன்னதாகவே வீட்டுக்குத் திரும்பினர்.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அவர்களை ஒரே அடியாய்க் கோபமூட்டும் காட்சியொன்றைக் கண்டார்கள். வண்டி மாடுகளின் கழுத்திலிருந்த சலங்கைச் சத்தம் கேட்டுவிட்டு வீட்டுக்கு உள்ளேயிருந்து ஒரு சிறு உருவம் வெளியே வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு நரிக் கூட்டம் வந்தது. அப்பொழுதிருந்த நில வொளியில் பிச்சைமுத்துவும் மலையாத் தாளும் அந்தக் குற்றவாளி யார் என்று கண்டுகொள்ள முடிந்தது. ஆம், அதே மாதுதான். அவனைக் கண்டதும் வசை மாரிப் பொழிந்துகொண்டே வீட்டுக்குள் நுழைந்தான். அங்கே எல்லா சாமான் களும் சிதறிக் கிடப்பதைப் பார்த்தான். பிச்சைமுத்து கூடப் பையனின் இந்தச் செயலைக் கண்டு திடுக்கிட்டான். வாஸ் தவம், அவன் மாதுவுக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறான் என்பது நினைவுக்கு வரத்தான் செய்தது. என்ன இருந்தாலும் ஒருவனுடைய நன்றி யுணர்ச்சிக்கு ஒரு வரம்பு கிடையாதா? பானைகள் உடைந்திருப்பதையும் தானியங்கள் சிதறிக் கிடப்பதையும் அவனுடைய கோழிகளையும், வாத்துக்களையும் திருடிக் கொண்டு போயிருப்பதையும் பார்த்ததும் அவன் பொறுமை எல்லை கடந்து விட்டது. ஆம். இனிப் பொறுத் துச் சாத்தியமில்லை—என்று எண்ணினான்.

மற்ற ஊர்வாசிகளும், தங்கள் வீடு களும் உடைக்கப்பட்டுச் சூறையாடப்பட் டிருப்பதைப் பார்த்தார்கள். அவர்கள் எல்லோரும் வீட்டு வாசலில் கும்பலாகக் கூடி விட்டார்கள். நாட்டாண்மைக் காரன் பிச்சைமுத்து அவர்களுக்குத் தான் கண்ட காட்சியைக் கூறினான். இவ்விதம், அன்று நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றிப் பேசப்பேச, மாதுவிடம் அவர்கள் கண்ட தெய்வ சக்திகள் எல்லாம் மறையத் தொடங்கின. நரிகளுடன் வாழ்ந்து, நரி களுடன் தங்கள் வீடுகளில் புகுந்து கொள்ளையிடும் சிறுவனை அயோக்கியத் திருட்டுப் பயல் என்றுதான் சொல்ல வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். இப்படிப்பட்ட திருட்டுப் பயலையும் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தோமே என்று நினைத்தபோது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆகவே, இந்தத் தடவை அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்; அதற்கான காலமும் வந்து விட்டது என்று எண்ணினார்கள்.

ஊர் ஜனங்கள் எல்லோரும் கூடி அவனைப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டியதுதான் என்று முடிவு கட்டினர். பிச்சைமுத்துவே தன் பைத்தியக்கார மனைவியின் பேச்சில் சிக்குண்டு தான் மாதுவுக்கு எவ்வளவு கடமைப்பட்டவன் என்பதை மறந்து, போலீஸுக்கு மாது வின்மேல் குற்றம் சாட்டிக் கடிதம் எழுதினான். அந்தக் கடிதம், ஐந்து மைல் தூரத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. போலீஸ் காரர்கள் மறுநாள் காலையில்தான் வந்தார்கள். முதலில் சப் இன்ஸ்பெக்டர் இந்த விஷயத்தைச் சற்று அலட்சியமாகத் தான் கருதுவதாக இருந்தார். ஆனால், இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டவர் களில், நாட்டாண்மைக்காரன் பிச்சை முத்துவின் கையெழுத்தும் இருப்பதைப் பார்க்கவே, உடனே இரண்டு போலீஸ் காரர்களை அனுப்பி வைத்தார்.

நல்ல காரணம்!



கோழி (கோபத்துடன்):— இரை தேட வா, வா என்று நூறு தரம் கூப்பிடுகிறேன். நீ அந்தப் புஸ்தகத்தைப் போய்ப் புரட்டிக் கொண்டிருக்கிறாயே?

கோழிக் குஞ்சு:—கோபிக்கக் காதே, அப்பா! இன்றைக்கு எனக்கு இரை கிடைக்குமா, கிடைக்காதா என்று எனது 'கிரக பலனை'ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!



டன. ஆனால் பெரும்பான்மையான பத்திரிகைகள் அவருடைய அபிப்பிராயங்களை ஆவலுடன் வரவேற்றன. அவருடைய பிரமாதமான திட்டத்தை 'ஏழு காலம்' தலைப்புகள் கொடுத்துக் கண்ணைக் கவரும்படி வெளியிட்டன. பத்திரிகைகள் எப்படி வரவேற்றன என்பதற்கு, பத்திரிகைகள் கொடுத்த சில தலைப்புகளைப் பார்த்தாலே தெரியும். உதாரணமாக "விவசாயத்தில் ஒரு புது முறை" "விசித்திரம் ஆயினும் காரிய சாத்தியமான திட்டம்" "காட்டு நரிகளை வீட்டுப் பிராணியாக்குதல்" "ஒரு பிரசித்தி பெற்ற விவசாய ஆராய்ச்சியாளர் நரிகளின் உபயோகங்களைப் பற்றி எழுதுகிறார்" "நரிகள் எவ்வளவு உபயோகமானவை என்பது உங்களுக்குத் தெரியுமா?" "கட்டுக்கதையைவிட விசித்திரமான உண்மை!" "நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள்" — இவையெல்லாம் திரு தாமோதரன் அவர்களை ஆதரித்த பத்திரிகைகளின் சில தலைப்புகள். "சென்னைக் காற்று" என்ற ஒரு பத்திரிகை, கட்டுரையின் போக்கைப் புரிந்து கொள்ளாமல், "விவசாயத்தைப் பற்றிய ஒரு ஹாஸ்யக் கட்டுரை" என்ற குறிப்புடன் வெளியிட்டது. ஆனால் திருவாளர் தாமோதரன் பத்திரிகைகள் தம்மைப் பற்றி என்ன நினைத்தன என்பதைப் பற்றிச் சற்றும் பொருட்படுத்தவில்லை. தமது கருத்துக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய விளம்பரம் கிடைத்து விட்டதல்லவா; அதுவே போதும் என்று திருப்தி அடைந்தார்.

10. மாது பிடிபட்டான்!

சந்தைநாள் வந்தால், நல்ல நரிக்காடு ஜன சூன்யமாகப் போய்விடும். இந்த வாரச் சந்தை நல்ல நரிக்காட்டிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள 'பெரிய ஏரி' என்ற இடத்தில் நடந்தது. ஆம், சந்தையில் நல்ல நரிக்காட்டுக் கத்தரிக்காய்க்கு நல்ல கிராக்கி உண்டு. நல்ல நரிக்காட்டுக் கத்தரிக்காய் சிறிதாக இருந்தாலும் ருசியாக இருக்கும் என்று பெயர் பெற்றிருந்தது.

பிச்சைமுத்து தம்பதிகள், ராமன் தம்பதிகள், ஏன் ஒரு கையகலம் நிலமிருந்து கத்தரிக்காய் போட்டவர்கள் எல்லாம் விற்பனைக்குச் சந்தைக்குக் கொண்டு போவார்கள். இந்த வாரம் கோழி கூவுவதற்கு முன்னமே, தலையில் சுமக்க முடியாத சுமையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டார்கள். எனினும் சந்தைக்குப் போய்ச் சேரும்போது நன்றாக விடிந்து விட்டது. இருந்தாலும், அவர்கள் வருந்த நேரவில்லை. ஏனெனில் வெகு தூரத்திலிருந்து வந்த மக்கள் எல்லாம் நல்ல நரிக்காட்டுக் கத்தரிக்காய்க்காகக்

அவர்களில் ஒருவர் சற்று உரத்தக் குரலில், "அப்பாவி மனுஷன் எப்படித்தான் இந்தக் கருத்து இவர் மூளைக்குள் நுழைந்ததோ?" என்றார்.

"அவர் ஒரு முழுப் பயித்தியம், ஸார்!" என்றார் கமிஷன் தலைவர்.

"பயித்தியமானாலும், அவர் உளறலில் காரண காரிய தொடர்பு பரிபூரணமாக இருக்கிறதே!" என்று வியந்தார் இன்னொரு அங்கத்தினர்.

"இவ்வூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு இவரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்" என்றார் மற்றொருவர்.

இப்படித் தம்மைப் பற்றி அவதூறு பேசிக் கொண்டிருந்தவர்கள்மீது அளவு கடந்த கோபம் கொண்டு பல்லை நறநற வென்று கடித்தார் திரு தாமோதரனார். அத்துடன் தமது புத்தி நல்ல நிலையி லிருப்பதாகவும், அவர்கள்தான் புத்தி சுவாதீன மிழந்த பயித்தியக்காரர்கள் என்றும் பலமாகக் கண்டித்துக் கூறி யிருப்பார். ஆனால் இரண்டு விஷயங்கள் அவரை அவ்விதம் கூற விடாமல் தடுத்தன.

முதற்காரணம், இவர்களைக் கண்டிக்க முற்படுவது அசட்டுத்தனம் என்று உணரும் அளவுக்கு அவர் புத்திசாலியாக இருந்தார். மேலும் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒருவன் வந்தவர் போனவர் களிடமெல்லாம் தான் புத்தி சுவாதீன முள்ளவன் என்றும், அதை நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும், இப்படித் தன்னை, விரோதிகள் சூழ்ச்சி செய்து பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் பயித்தி யம் என்று சொல்லி அடைத்து விட்ட தாகவும் கூறிக் கொண்டிருந்தான். அந்த மனிதன் பேசியதை யெல்லாம் கேட்டு விட்டு, ஆஸ்பத்திரியைப் பார்த்து விட் டுப் போக வந்தவர்கள், "ஆகா! இந்தப் பயித்தியம் எவ்வளவு நன்றாகப் பேசு கிறான். இவன் பேச்சைக் கேட்கும் எவ ருமே, இவன் புத்தி சுவாதீன முள்ளவன் என்றுதான் நினைப்பார்கள்!" என்று பேசிக்கொண்டு போனது அவர் நினை வுக்கு வந்தது. ஆகவே, அந்த மனிதனின் கதியே தனக்கும் இந்த விசாரணைக் குழு வினரால் ஏற்பட்டு விடுமோ என்று பயந்தார்.

தாமோதரன் அவர்களுக்குத் தமது திட்டம் எவ்வளவு காரிய சாத்திய மானது, தர்க்க ரீதியானது என்பதைப் பேசி அவர்களைத் திகைக்க வைக்கும் திறமை யுண்டு. நமது கால்நடைச் செல் வம், எவ்வளவு சீரழிந்து வருகிறது. ஆகவே, விவசாயத்துக்கு நரிகளை, கால் நடைக்குப் பதிலாகப் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என்பதைச் சாங்கோபாங்க மாக விரித்துரைக்க முடியும். இவ்விஷ யங்களில் புள்ளி விவரங்களுடன் யாரும் மறுக்க முடியாதபடி பேசக்கூடும். ஆனால், அந்த விசாரணைக் குழுவினர் இவ்வளவும் கேட்டுவிட்டு "எவ்வளவு பகுத்தறிவுடன் பேசுகிறார்! வாஸ்தவம்! எல்லாப் பயித்தியங்களுமே, பயித்தியமாவதற்குக் காரணம் அளவுக்கு மீறிய பகுத்தறிவே அல்லவா?" என்று கூறி யிருப்பார்கள்.

இவ்விதம் தாமோதரம் பிள்ளை தமக் குள் நினைத்து, விசாரணைக் குழுவினருக் குப் பதில் சொல்லாம லிருந்தார். எனி னும் இதற்கு வேறொரு காரணமுமிருந் தது. திரு தாமோதரம் பிள்ளை அந்த விசாரணைக் குழுவினரைக் கோபத்துடன் பார்த்து நின்று கொண்டிருந்த பாவனை யைப் பார்த்த ஜில்லா மாஜிஸ்டிரேட், பயந்து போய், தாமோதரம் பிள்ளையை அப்படியே அந்த ஹாலிலிருந்து வெளியே அழைத்துச் சென்று விட்டார். அப்படிப் போகும்போதும் திருவாளர் தாமோதரன் அந்த விசாரணைக் குழுவின ருக்கு, வணங்கி வணக்கம் செலுத்தி விட் டுப் போனார். அந்தச் செய்கை ஒன்றே, அந்தக் குழுவினருக்கு, தாமோதரனாரைப் பற்றித் தாங்கள் கொண்ட அபிப்பிராயம் எவ்வளவு தவறு என்பதை வலியுறுத்தி யிருக்க வேண்டும்.

• • •

மோத்தத்தில் திருவாளர் தாமோ தரனார் இவ்வித கேலி, பரிகாசம் ஆகிய வற்றால் உள்ளம் சோர்ந்து போகக் கூடிய மனிதக் கூட்டத்தினைச் சேர்ந்தவரல்ல என்பது சீக்கிரத்திலேயே தெரிந்து விட்டது. அவருடைய உற்சாகத்தை எது வுமே குறைக்காது என்பது தெரிந்தது. அவருடைய அபிப்பிராயத்தை மக்கள் அங்கீகரிக்கவில்லை என்பது தெரியத் தெரிய, அவருக்குத் தம்முடைய அபிப் பிராயத்தில் அதிக உறுதி ஏற்பட்டு வந்தது. நரிகளை மனித சமுதாயத்துக்கு நிச்சயமாகப் பயன் படுத்தலாம் என்று திடமாக நம்பினார். இதன் விளைவாக மூன்றாவது பலன் ஏற்பட்டது என்று அவர் எழுதி வைத்துள்ள டைரியிலிருந்து தெரிய வருகிறது.

அதாவது மாகாணத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளுக்கும் கட்டுரை எழுதத் தொடங்கினார். ஒன்றிரண்டு குறுகிய நோக்குள்ள பத்திரிகாலயங்கள், "தங்களு டைய கருத்துக்கள் மகிழ்ச்சி உண்டாக்கு வனவாக இருக்கின்றன" என்ற ஆறுதல் மொழிகளுடன் உடனே திரும்பி விட்



நரிக்காட்டு ராஜா

எஸ். கோபாலன்

மொழிபெயர்ப்பு: எஸ்.வி.எஸ்.

திருவாளர் தாமோதரன் அவர்களின் நல்ல நரிக்காட்டு விஜயம் தோல்வியடைந்த சில நாட்களுக்குள் சென்னை சர்க்கார் விவசாயக் கம்ஷன் ஒன்று ஏற்படுத்தினர். விவசாய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் உத்தேசத்துடன் ஒரு திட்டம் தயாரிக்கத்தான் ஏற்படுத்தப்பட்டது. அந்த விவசாயக் கமிஷன் சென்னை மாகாணம் பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து, விவசாயிகளின் நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. இந்தக் கமிஷன் பல நகரங்களில் பயனுள்ள சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுக் கடைசியில் எட்டுக் கோட்டைக்கு வந்து சேர்ந்தது.

இந்த மாதிரி விசாரணைக் குழுக்கள் வந்தால், திருவாளர் தாமோதரன் அந்தக் குழுவினரைச் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்தை நழுவ விடுவது இடையாது. அந்த வழக்கத்துக்கு விரோதமின்றி இந்தத் தடவையும் அக்குழுவினரைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து கொண்டார். ஆகவே, விசாரணைக் குழுவினர் எட்டுக் கோட்டைக்கு வந்ததும், திருவாளர் தாமோதரன் அவர்களுக்கு அழைப்பு அனுப்பினர். பாவம், தாமோதரன் மிகவும் நல்லவர். இந்த அழைப்பைப் பெற்றவுடன் அவருக் குண்டான மகிழ்ச்சி சொல்லி முடியாது. நேரே அவர்கள் எதிரில் போய் நின்று சரியாக இரண்டு மணி நேரம் பேசினார். ஆம், நரிகளை விவசாயத்துக்குப் பயன் படுத்திக் கொள்ளக்கூடிய அரிய சுவாரஸ்யமான முறையை, நீண்ட வியாசமாக எழுதி உற்சாகமாக வாசித்துக் காண்பித்தார்.

இதைக் கேட்ட விசாரணைக் குழுவினர் அப்படியே பிரமித்துப் போயிருப்பார்கள் என்று சந்தேகமின்றி நம்பினார். ஆகவே, இந்த வெற்றிகரமான நீண்ட வாசிப்புக்குப் பிறகு, அந்த விசாரணைக் குழுவினர் முகவிலாசத்தைப் பார்க்கத் தமது மூக்குக் கண்ணாடியை எடுத்தார். ஆகா! என்ன ஏமாற்றம்! அவர்கள் ஒருவரை யொருவர் ஒரு அவநம்பிக்கை தொனிக்கும் பார்வை பார்த்துக் கொண்டதைத் திருவாளர் தாமோதரம் கவனித்தார். அவருக்கு ஓரே கோபம் உண்டாகி விட்டது அவர்கள்மேல்.

ஆமாம், அந்தக் குழுவினருக்கு ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டது. அதாவது தாமோதரனாரின் திட்டம், காரிய சாத்தியமான திட்டமா என்பதில் அவநம்பிக்கை ஏற்படவில்லை; அவர் புத்தி சுவாதீனத்திலிருக்கிறாரா என்றே அவநம்பிக்கைகொள்ள ஆரம்பித்தனர். தமது திட்டத்தைப் பற்றி அவநம்பிக்கை கொண்டால், அவர் அதைப் பொருட்படுத்தமாட்டார். ஆனால் அவருடைய புத்திசுவாதீனத்தில் அவநம்பிக்கை கொண்டதுதான் அவருக்குக் கோப மூட்டியது. அவர்களுடைய செய்கை ஒரு பொதுஜன ஊழியருக்கு இழைக்கப்பட்ட அவமானமாகவும், நீண்ட காலைய அனுபவம் வாய்ந்த விவசாய ஆராய்ச்சியாளருக்கு இழைக்கப் பட்ட வெட்கக்கேடான அநியாயமாகவும் தோன்றியது.

விசாரணைக் குழுவினர் தாமோதரனாரின் புத்தி சுவாதீனத்தில் அவநம்பிக்கை கொண்டனர் என்பது பின் வரும் சம்பாஷணையிலிருந்தே நன்றாகத் தெரியும்.

பாப்பா:—என்ன விஷயம் அப்பா! உங்கள் முகம் திடீரென்று மாறிப் போயிடுத்து? அவர் தானே தந்தி படித்திருக்கிறீர்? தொடர் கதையைப் படித்துக் கொண்டே வருகிறபோது சரியான கட்டத்திலே நின்றுபோனால் படிக்கிறவர்கள் முகம் படும் பாடல்லவா உங்கள் முகம் படுகிறது!

சங்கரய்யர்:—எல்லாம் அந்த 'அவர்'தான் அடித்திருக்கிறார்! திடீரென்று நேற்று மாப்பிள்ளையை டில்லியிலிருந்து பம்பாய்க்கு மாற்றி உத்தரவு போட்டு விட்டார்களாம்! 'பாப்பா இப்போ புறப்பட வேண்டாம்! பம்பாய்க்குப்போய் வீடுகிடைத்ததும் எழுதுகிறேன்' என்று தந்தி கொடுத்திருக்கிறார்!

ரமணி:—அட, ஆண்டவனே! குறைந்த பக்ஷம் இன்னும் இரண்டாயிரம் கடிதமாவது எழுதுவார் வீடு கிடைக்காததைப் பற்றி!

சங்கரய்யர்:—உங்க அத்திம்பேர் சமர்த்தைப் பற்றியும் அக்காவின் அதிருஷ்டத்தைப் பற்றியும் அப்புறம் பேசிக்கொண்டு நிற்கலாம். முதலில் சாமான்களையெல்லாம் கீழே இறக்கு.

ரமணி:—வேண்டாமப்பா! ரயில்வே பார்சல் டெலிவரி போல ஒவ்வொருத்தர் வீட்டு வாசலாகப் போய் வண்டியிலிருந்தே சாமான்களை இறக்கி விடுகிறேன்!


பார்வதி:—இப்போது நம்ப வீட்டுத் தொடர் கதைதான் திடீர்க் கட்டத்திலே நின்றுபோச்சு!

பாப்பா:—வீடு கிடைத்தும் விமோசனம் கிடைக்கவில்லை!

[போகிறார்கள்]

சேர்த்துக் கொள்ளுங்கள்





...எருமைக் கன்றுக்குட்டியை...

ரமணி:— அப்பா! ரயில்வேயிலே உனக்குத் தெரிந்த உத்தியோகஸ்தர் ஒருவர் இருக்கார் என்பாயே! அவரிடம் சொல்லி ஒரு பிரத்தியேக 'கூட்ஸ் ஸ்பெஷ'லுக்கு ஏற்பாடு பண்ணுவதுதானே!

[போகிறார்கள்]

3

[சனிக்கிழமை மாலை. சங்கரய்யர் வீட்டு வாசலில் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிப் புறப்படத் தயாராக நிற்கின்றனர்.]

சங்கரய்யர்:— பாப்பா! சாமான்களெல்லாம் சரிபார்த்து வண்டியில் ஏற்றியாச்சா?

ரமணி :—எல்லாம் சரிபார்த்தாச்சு! மொத்தம் இருபத்திரண்டு உருப்படி.

சங்கரய்யர்:—நான் சலவைக் கணக்கைக் கேட்கவில்லையடா! ரயிலுக்குப் போக வேண்டிய சாமான்கள் எத்தனை என்று கேட்டேன்.

ரமணி :—நானும் அதைத் தான் சொன்னேன். மொத்தம் இருப்பத்திரண்டு. நம் சாமான் ஒன்பது. உங்கள் சிநேகிதர்கள் அனுப்புவது பதிமூன்று.

சங்கரய்யர் :—ஒவ்வொரு சாமானும் நன்றாய்க் கட்டப்பட்டிருக்கிறதா?

ரமணி :—நான் கட்டியிருக்கிற கட்டு, அவிழ்க்க ஐந்து நாளாகும்!

பார்வதி :—(உள்ளிருந்து வந்து கொண்டே) அடடா! மறந்தே போய்விட்டேன். சங்கரி மாமியோட ஊறுகாய் ஜாடியை எடுத்து வைக்க விட்டுப் போச்சு. ஆகமொத்தம் சாமான் இருபத்துமூன்று.

சங்கரய்யர் :- நாசமற்றுப் போச்சு! வேறே யாரும் தவிருஞ்சாத மூட்டை டில்லிக்கு அனுப்புகிறாளா, பாரு! இரண்டையும் சேர்த்து வழியிலே காலி பண்ணலாம்!

பார்வதி :—இப்போது கோபம் வந்து என்ன பிரயோஜனம்? அவாளெல்லாம் சாமானைத் தலையிலே வைத்துக் கட்டும் போதே கொண்டு வராதே என்று சொல்லியிருக்கவேண்டும். அதற்குத் தைரியமில்லை.

ரமணி :—ஏதோ நம்ம பாப்பா சந்தோஷமாகக் குடித்தனம் பண்ண வீடு அகப்பட்டது மகா பெரிய அதிர்ஷ்டம். அதை அவன் அனுபவிக்கப் போகிற போது, நண்பர்களோட சிறு வேண்டுகோள்களை மறந்து அவர்கள் கோபத்திற்கு அவன் ஆளாக வேண்டாமே என்ற மனோதத்துவ யோசனையின் பேரில்தான், அப்பா ஆரம்ப முதலே இந்த விவகாரத்தில் அசடாக இருந்து விட்டார்!

சங்கரய்யர் :—சரி, சரி! பாப்பா! அம்மாவை நமஸ்காரம் பண்ணிவிட்டுக் குங்குமத்தை இட்டுக்கொண்டு வந்து வண்டியில் ஏறிக்கொள். ரயிலுக்கு நேரமாகிறது!

பார்வதி :—சமர்த்தாகப் போய்விட்டு வாடியம்மா! ரயிலிலே ஜாக்கிரதையாகக் கடைசி வண்டியில் ஏறிக் கொள்.

ரமணி :—அம்மாவுக்கு இன்னும் கல்கத்தா மெயில் ஞாபகம் போகவில்லை போலிருக்கிறதே!

சங்கரய்யர் :—சரி! சரி! வண்டி புறப்படட்டும்!

பார்வதி:—எய் வண்டிக்காரா! கொஞ்சம் நிறுத்தி ஓட்டடாப்பா! தெருக் கோடியிலே வந்து கொண்டிருக்கிற தந்திச் சேவகன் குண்டுராவ் இந்த வீட்டைத் தாண்டிப் போன பிறகு வண்டி புறப்படட்டும். பாப்பா! இறங்கி வந்து ஒரு தம்ளர் தீர்த்தம் குடித்து விட்டுப் போ!

ரமணி :—வேண்டாம்! வேண்டாம்! போகிறபோது அந்தக் குதிரைக்குத் தண்ணீர்த் தொட்டியிலே ஜலம் காட்டினால் போச்சு! சகுனத்தை மாற்றிவிடும்!

சங்கரய்யர் :—இந்தக் குண்டு ராவுக்கு இந்த ஒரு தெருத்தான் தெரியும்! எந்தப் பகுதிக்குப் போக வேண்டுமானாலும் சுற்றிச் சுற்றி இந்தத் தெருவழியாகத்தான் வருவான்!

[குண்டு ராவ் நேரே சங்கரய்யர் வீட்டு வாசலுக்கு வந்து சைக்கிளிலிருந்து இறங்குகிறான்.]

குண்டுராவ் :—சங்கரய்யருக்கு ஒரு டெலிகிராம் வந்திருக்கு, சார்!

சங்கரய்யர் :—(தந்திக் கவரைக் கையில் வாங்கிக் கொண்டே) பாப்பா எந்த ரயிலுக்குப் புறப்படுகிறான் என்று கேட்டு ஒரு வேளை மாப்பிள்ளை தந்தி அடித்திருப்பார்!

[தந்தியைப் பிரித்துப் படிக்கிறார்.]

2

[இரண்டு நாட்களுக்குப் பிறகு மாலை வேளை.]

பாப்பா :—அம்மா! இதென்ன மூட்டை இங்கே வைத்திருக்கிறது?

பார்வதி :—அதுவா! அடுத்தத் தெரு காமாக்ஷியம்மாள் கொண்டு வந்து வைத்திருக்கிறாள். அப்பளாமும் கருவடாமும்! அவளோடே பொணுக்கு மச்சினன் பிள்ளை டில்லியிலே இருக்கானாம். அவன் பெண்டாட்டிக்குக் காமாக்ஷி கையாலே இட்ட அப்பளாம் என்றால் உயிராம்!

பாப்பா:— இந்த மூட்டையை டில்லியிலே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்று நம்ம உயிரை வாங்குகிறாளாக்கும்.

ரமணி :—இது என்ன பிரமாதம்! அம்மா உனக்காகக் கட்டுகிற மூட்டைகளைப் பார்த்தால் இது எல்லாம் கொசு மாதிரி! அம்மி, உரல் எல்லாவற்றிற்கும் கூட லேபிள் ஒட்டியாய் விட்டது!

பாப்பா :— (பயத்துடன்) நிஜமாகவா அம்மா?

பார்வதி :—ஆமாம்! அங்கே போனால் அவைகளுக்கெல்லாம் திண்டாடுவாயா?

பாப்பா :— அந்தக் காலத்து ராஜ குமாரிகள் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஒரு பட்டாளம் பின் தொடர பவனி போகிற மாதிரி நினைத்துக் கொண்டுவிட்டாயா?... ஒரு படுக்கை. இரண்டு டிரங்குகள்... ஒரு பாத்திரப் பெட்டி...இதற்கு மேல் இம்மிகூட கொண்டுபோக மாட்டேன்.

ரமணி :—அக்கா! அதெல்லாம் நடக்காத காரியம்! நீ புறப்படுகிறபோது பார்க்க வேண்டும். பெரிய சர்க்கஸ் கம்பெனி ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு முகாம் போவது போலிருக்கும்!

பாப்பா :—அம்மா இது என்ன ஜாடி? புதிசாக இருக்கே?

பார்வதி :—எதிர் வீட்டு மங்களம் மாமி புடலங்காய் ஊறுகாய் போட்டுக்கொண்டு வந்து வைத்திருக்கிறாள்!

பாப்பா :—எமக்கா?

பார்வதி :—அந்த மாமியோடே மருமான் டில்லியிலே இருக்கானாம். அவனுக்குக் கொடுக்கத்தான்!

பாப்பா :—ஜாடியைப் பார்த்தால் புடலங்காய்களை முழுசாகவே ஊறுகாய் போட்டு வைத்திருப்பாள் போலிருக்கிறதே!

ரமணி:—அக்கா! எனக்கு ஒரு யோசனை தோணுகிறது! தமுக்கு அடிக்கிறவனைக் கூப்பிட்டு ஊர் முழுதும் தமுக்குப் போடச் சொல்லுவோம். 'ஸ்ரீமதி பாப்பா சனிக்கிழமை மாலை வண்டியில் டில்லிக்குப் புறப்படுகிறாள். சனிக்கிழமை காலை பத்து மணி வரை டில்லிக்குச் சாமான் அனுப்ப விரும்புகிறவர்கள் சாமான்கள் கொண்டு வந்து கொடுக்கலாம். இலவசமாகக் கொண்டுபோய் பட்டுவாடா செய்யப்படும்' என்று அச்சடித்த நோட்டீஸாவதும் இப்படி தமுக்கடிக்க முடியாவிட்டால் வினியோகிக்கச் செய்யலாம்.

பாப்பா :—சரிதான்! திடீரென்று ஒருவர் வருவார், 'சங்கரய்யர்வாள், இந்த எருமைக் கன்றுக்குட்டியை டில்லியில் இருக்கும் என் பெண்ணிடம் சேர்த்துவிடச் சொல்லுங்கள்' என்பார்! காளிதாஸனின் சகுந்தலையைக் கண்வ ரிஷியின் மான்கள் வழியனுப்பினவாம். இந்தப் பாப்பாவை எருமைக் கன்றுக்குட்டி தாத்திக்கொண்டே வரும்.

ரமணி :—யார் கண்டா? ஒருவேளை யானைக்குட்டி கூடச் சர்க்காருக்குப் பரிசு அளிக்கும்படி உன்னிடம் கொடுத்தனுப்புவார்கள்.

[சங்கரய்யர் வருகிறார்.]


சங்கரய்யர் :—பாப்பா! இந்த யானையை வாங்கிப் பத்திரமாக வைத்துக்கொள்.

பாப்பா :—(மிரள மிரள விழித்துக் கொண்டு) என்ன? யானையா?

சங்கரய்யர் :—பயப்படாதே! நிஜ யானையில்லை. கார்த்திகை விளக்கு! வெங்கல யானை மேல் அகல் வைத்திருக்குமே, அதுதான்!

பாப்பா:-(சிரித்துக்கொண்டே) குறைந்த பக்ஷம் ஒரு டன் கனமாவது இருக்கும்!

சங்கரய்யர்:—என்ன பண்ணுகிறது? சிநேகிதர்களின் வேண்டுகோளைத் தட்ட முடிகிறதில்லை. எல்லோரும் வேண்டியவர்கள்! நீ என்ன, தினமா டில்லிக்குப் போகிறாய்?



அம்மிக்கும், கல்உரலுக்கும் லேபிள் ஒட்டி

சிரமம் லபிக்கும் என்று சொல்லி யிருப்பார்!

[சங்கரய்யர் உள்ளே வந்தவர் ரேழியில் நின்று பேச்சைக் கவனித்து விட்டு வருகிறார்.]

சங்கரய்யர்:—என்ன பார்வதி! என்னிடம் முட்டிக் கொண்டேன்; இடித்துக் கொண்டேன் என்கிறாயே! நான் என்ன நிலைப்படியா? வாசற்படியா?

பார்வதி:—வாசற்படி, கதவு முதலியவைகளுக்குக் கூடக் கொஞ்சம் உணர்ச்சி இருக்கும், உங்களுக்குத்தான் மனசு கல்லாகப் போய் விட்டது. பாப்பா எத்தனை நாளைக்குத்தான் இப்படி உருகித் தவிப்பாள்?



ரமணி:—அவள் என்ன ஐஸ் கட்டியா?

சங்கரய்யர்:—போடி அசடே! 'என் மாப்பிள்ளை டில்லியிலே இருக்கிறான்' என்று சொல்லிக்கொள்ள உனக்குப் பெருமையாக இல்லையா? நீ சொன்னபடி அந்தத் தொக்கியூர் கணேசய்யர் பிள்ளைக்குப் பாப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தால்......

ரமணி:—'உன் மாப்பிள்ளை மேய்க்கும் மாடு வேளைக்கு எத்தனை படி பால் கொடுக்கும்?' என்று அம்மாவைக் கேட்பார்கள்! இருந்திருந்து 'ரயில் என்றால் சிவலைக் காளை மாதிரி இருக்குமா மயிலைக்காளை மாதிரி இருக்குமா?' என்று கேட்கிற வரிலே போய் அக்காவைத் தள்ளச் சொன்னாளே இந்த அசட்டு அம்மா.

சங்கரய்யர்:— அப்படிச் சொல்லடா சிக்கக்குட்டி! பாப்பா டில்லிக்குப் போனால் மிட்டாய்க்காரனைச் சுற்றிப் பறக்கும் காக்காய்கள் மாதிரி ஐரோப்பியர் சுற்றுவதைப் பார்க்கலாமே! டில்லி வாசம் என்றால் அதற்கு மதிப்பே தனிதான்!

பார்வதி:—'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்பது போல்தானிருக்கிறது உங்கள் பேச்சு! உங்கள் பாப்பா டில்லிக்குப் போனாலல்லவா சாக்காயையோ குருடனையோ பார்க்க? போதுமே, உங்கள் பெருமை! மாப்பிள்ளைக்கு டில்லியிலே வேலை என்றதும் முகத்தி லடித்தாற்போல் பெண் இங்கேதானே யிருக்கிறாள் என்று எல்லோரும் கேட்கிறார்கள்.

[பாப்பா சந்தோஷம் ததும்ப பின் கட்டிலிருந்து வருகிறாள்.]

பாப்பா:—அப்பா! ஒரு சந்தோஷ சமாசாரம்! 'அவர்' எழுதி யிருக்கிறார்.

சங்கரய்யர்:—(சுவாரஸ்யமில்லாமல்) மாப்பிள்ளை ஒரு மாசம் லீவிலே வரப் போகிறேன்னு எழுதியிருக்கிறானா?

பாப்பா:—(முகம் சிணுங்கி) உங்களுக்கே என்பாடு கேலியாகப் போய்விட்டது போலிருக்கிறது ......அவர் ஒன்றும் இங்கே வரக் காத்திருக்கவில்லை ......போன தடவையே நீங்கள் எப்போ அவரை அனுப்ப ஸ்டேஷனுக்குப் போகவில்லையோ அப்புறம் இங்கே வர அவருக்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது?

ரமணி:—அக்கா! அக்கா! கோபித்துக் கொள்ளாதே!...அத்திம்பேர் ஐந்து ரூபாய் சம்பளம் உயர்ந்திருக்கு என்று எழுதியிருக்கிறாரா?...அம்மா! அதைக் கொண்டு இன்று இரவு ஒரு விருந்து தயார்செய்துவிடு!

பாப்பா:—போடா வாயாடி! உங்கள் இடக்குப் பேச்சிலிருந்தும் கேலிப் பேச்சிலிருந்தும் எனக்கு விமோசனம் கிட்டி விட்டது! அவருக்கு டில்லியிலே வீடு கிடைத்துவிட்டதாம்! அவர் கூட வேலை பார்க்கிற நண்பர் தம் குடும்பத்துடன் அடுத்த ஞாயிற்றுக்கிழமை பட்டணத்திலேயிருந்து டில்லிக்குப் போகிறாராம்! அவர்களுடன் என்னையும் வரச்சொல்லி எழுதியிருக்கிறார்!

ரமணி:—(கையைக் கிள்ளிக்கொண்டு) உஸ்...கை வலிக்கிறது! நிஜம்தான். சொப்பனமில்லை!...அக்கா, சரியாக வாசித்துப் பார்த்தாயா? கவரில் நம் வீட்டு விலாசம் தெளிவாக யிருக்கிறதா?

சங்கரய்யர்:—டேய்! சும்மா இருடா!... பேஷ்! பாப்பா! நல்ல சமாசாரம்தான்!... ஏய் பார்வதி! இடையே அதிக நாளில்லை. குழந்தைக்கு வேணுங்கிறதை யெல்லாம் இப்போதே முதல் தயார் பண்ண ஆரம்பி!

பார்வதி:—பகவானுக்கு இப்போதுதான் கண் திறந்து பார்க்க மனது வந்தது போலிருக்கு!...குழந்தை புருஷன் வீட்டுக்குப் போகவில்லையே என்கிற ஏக்கத்திலே துரும்பா இளைச்சுப் போனாள்!

ரமணி:—நீ அடுத்த தடவை பார்க்கிற போது ஆனைக்குட்டியாக இருப்பாள்!

[போகிறார்கள்.]

வீடு கிடைத்தது?

கோமதி சுவாமிநாதன்

[சங்கரய்யரின் வீடு. மாலை வேளை. வாசலில் நின்று கொண்டிருக்கும் சங்கரய்யர் பெண் பாப்பாவிடம் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறான். பாப்பா உள்ளே போகிறாள். பாப்பாவின் தாயார் பார்வதி, தம்பி ரமணி எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

பார்வதி:— பாப்பா! என்ன கடிதம்? யார் எழுதி யிருக்கிறார்கள்?

பாப்பா :— (ஸ்வாரஸ்யமில்லாமல்) எல்லாம் 'அவர்'தான் எழுதி யிருக்கிறார்.

[கடிதத்தைப் பிரித்துக்கொண்டே பின் கட்டிற்குப் போகிறாள்.]

ரமணி :—வரவர அக்காவுக்கு அத்திம்பேர் கடிதங்களில் ஸ்வாரஸ்யம் தட்டுப் படுவதாகவே காணோம்! மூன்றும் வருஷம் கல்யாணமான புதிதிலெல்லாம் என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளித் தபால்காரன் ஆபீசை விட்டுக் கிளம்புவதற்கு முன்பே போய் அத்திம்பேர் காகிதத்தை அவசரமாய் வாங்கிக்கொண்டு வரச்சொல்லுவாள்!

பார்வதி :— உனக்கும் நிறைய சாக்லெட், பெப்பர்மிண்ட் எல்லாவற்றிற்கும் தட்டு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ரமணி :—இப்போ தெல்லாம், தபால்காரன் கையிலே கொண்டு வந்து கொடுக்கும் கடிதங்களைக் கூடப் பிரித்துப் பார்க்க அவளுக்கு உற்சாகம் ஏற்படுவதில்லை. ஒருவேளை அத்திம்பேர், அக்கா அதிகமாகப் பௌடர் போட்டுக் கொள்வதைக் கண்டித்து எழுதி வருகிறாரோ என்னவோ?

பார்வதி:—போடா அரட்டை! பாவம்! அவள் மனது நொந்து போய்க் கிடக்கிறாள். ஒரு மனுஷ்யன் தவறாமல் 'வீடு கிடைக்கவில்லை, வீடு கிடைக்க வில்லை' என்று எழுதிக் கொண்டே வந்தால் அந்தப் பெண்ணுக்கு எப்படி யிருக்கும்?

ரமணி :—டில்லியிலே வேலை பார்க்கும் அகத்துக்காரராக வேண்டுமானால் 'டெலி விஷன்'தான் வைத்துக்கொள்ள வேண்டும்! ஒருவேளை அத்திம்பேர் ரங்கராஜன் சிட்டயர் ஆனபிறகு வேண்டுமானால் இந்தப் பக்கம் வந்து அக்காவுடன் தனிக் குடித்தனம் நடத்தலாம்!

பார்வதி :—சஷ்டியப்த பூர்த்திக்குப் பிறகா? சதாபிஷேகத்துக்குப் பிறகா? நான் உங்க அப்பாவிடம் அப்போதே முட்டிக்கொண்டேன். டில்லி, பம்பாய் என்று வேலை தேடிக்கொண்டு போகும் பிள்ளைகள் பூர்வ ஜன்மங்களிலே, ஹஸ்தினாபுரத்திலேயோ பஞ்சவடியிலேயோ தத்தம் மனைவிகளுடன் குலாவிக் கொண்டு அதிதியாக வந்த துர்வாசரையோ விசுவாமித்திரரையோ அவமதித்திருக்க வேண்டும்!

ரமணி :—அப்புறம்?

பார்வதி :—உடனே அந்த ரிஷி அவர்களைப் பார்த்து, "ஹே, கிருஹஸ்தர்காள்! நீங்கள் வரும் ஜன்மங்களில் இந்தப் பிரதேசங்களில் வசித்தால் கல்யாணமாகியும் பிரம்மச்சாரியாகவே இருக்கக் கடவீர்கள்" என்று சபித்து விட்டிருப்பார்!


பிடி சாபம்!

ரமணி :—பேஷ்! பேஷ்! அம்மாவின் கற்பனை அபாரம்! ... சாப விமோசனம்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா அந்த ரிஷி?

பார்வதி:—சொல்லி யிருந்தாலும் சொல்லி யிருப்பார்! குறைந்தபட்சம் இரண்டாயிரம் கடிதங்களிலாவது மனைவிக்கு 'வீடு கிடைக்கவில்லை' 'வீடு கிடைக்கவில்லை' என்று எழுதினால் மறுபடியும் கிரஹஸ்தா



தனியே என்றான்; இங்கே திரும்பித் தனியாய் வந்திருக்கிறாயே, காரணம் என்ன என்றான்; மழையின் நீர் வழங்கு கண்ணான்: மழைபோல கண்ணீர் வடித்து நின்ற கும்பகர்ணன்—சொன்னான்.]

இப்படியெல்லாம் கண்ணீர் வடித்துப் பரிவோடு பேசிய கும்பகர்ணனுக்கு ஒரு விதமான கோபம்கூட வருகிறது.

"சாமான்யமாக நீதி இன்னது என்று தெரிவதில்லை, தர்மத்தின் நிலையும் தெரிவதில்லை; அறிவின் தெளிவும் கிடைப்பதில்லை; ஆனால் எப்படியோ கடவுள் அருளால் அத்தனை பேறும் உனக்குக் கிடைத்திருக்கிறது. பிரம்ம தேவனது அருளால் அழியாப் புகழும் உனக்கு ஏற்பட்டிருக்கிறது."

'நீதியும், தருமம்நின் ற
நிலைமையும், புலமைதா னும்,
ஆதியங் கடவுளா லே
அருந்தவம் ஆற்றிப்பெற் றாய்!
வேதியர் தேவன்சொல் லால்
விளிவிலா ஆயுள்பெற் றாய்!
சாதியின் புன்மைஇன் னும்
தவிர்ந்திலை போலும்தக் கோய்.'

[ஆதியங் கடவுளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்றாய்: ஆதி மூர்த்தியாகிய சிவபெருமானிடம் அருந்தவம் செய்து பெற்றாய் சாமான்யமாகப் பெறக்கூடியதல்ல; வேதியர் தேவன் சொல்லால்: சந்திர வக்கிரானது அதி தேவதையான பிரம்மாவின் அருள் வாக்கினால்; விளிவிலா ஆயுள் பெற்றாய்: முடிவில்லாத ஆயுள் அதாவது புகழ் பெற்றாய்; எல்லாம் இருந்தும் — சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும்: இந்த அரக்க வகுப்பின் கீழான தன்மை இன்னும் உன்னை விட்டுப் போகவில்லை.]

தம்பி மேல் உண்டான இரக்கத்தினால் கோபமே வருகிறது அண்ணனுக்கு. "ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்கிறான்.

"உன்னுடைய கல்வி என்ன, சாதனங்கள் என்ன! ஒன்றும் பிரயோசனப்படவில்லையே. அரக்க குலத்து வாசனை உன்னை விட்டுப் போகவில்லையே" என்று பரிவு கலந்த ஆங்காரத்தோடு கண்டித்துப் பேசுகிறான் கும்பகர்ணன்.

கம்பர் தரும் காட்சி

294. ஜாதிக்குணம் இன்னும் போகவில்லையே!

கும்பகர்ணன் யுத்தகளத்தில் தோன்றியபோது, ராவணன் தானோ என்று முதலில் சந்தேகித்தான் ராமன்.

விபீஷணன் இனம் சொன்ன பிறகு ராவணனுடைய தம்பி என்று தெரிந்து கொண்டான்.

கும்பகர்ணனது குணநிசயங்களைப் பற்றி மேலும் சொல்லுகிறான் விபீஷணன்.

"தகாத காரியத்தைச் செய்தாய் நீ என்று ஆதியில் இருந்தே ராவணனிடம் கும்பகர்ணன் சொல்லித்தான் வந்தான். மந்திர சபை கூட்டிய போதும் அங்கேயும் அப்படியே சொன்னான். தான் சொன்ன சொல்லை ராவணன் கேட்கவில்லை. கேட்கவும் மாட்டான் என்று தெரிந்ததும் அண்ணன் காரியத்தில் பிரவேசியாமல் ஒதுங்கி இருந்து விட்டான். ஒதுங்கியிருந்த காரணத்தால் கும்பகர்ணனைப் பற்றித் தூங்குமூஞ்சி, கோழை என்றெல்லாம் ராவணன் அட்டகாசம் செய்து பக்கத்தில் இருந்தவர்களோடு ஏளனமாய்ப் பேசி வந்தான். உண்மையில் கும்பகர்ணன் மகா வீரன். எத்தனையோ யுத்தங்களில் சூலாயுதங் கொண்டு போர்புரிந்து வென்று வந்தவன். நல்ல குணம் படைத்தவன், அண்ணனிடமும் என்னிடமும் மிக்க வாஞ்சை கொண்டவன்" என்பதாக ராமனிடம் விபீஷணன் சொன்னான்.

அதன்மேல் ராமன் சொல்லுகிறான்:

"அப்படி வீரனையும் நற்குணம் படைத்தவனையும் இருப்பவனை ஏன் கொல்ல வேண்டும்? அவசியமே இல்லை. நீ போய் அவனை நம் பக்கம் வந்து விடும்படியாகச் சொல்லு. அவனும் வந்துவிடத் தானே செய்வான். பிறகு எல்லாம் நல்ல காரியமாய் முடியும்" என்றான் ராமன்.


விபீஷணனும் ராமனது வார்த்தைக்கு இணங்கி கும்பகர்ணனிடம் சென்று அவனைப் பணிகிறான்.

அப்படிப் பணிந்த தம்பியைக் கும்பகர்ணன் உச்சி முகந்து அன்பாரத் தழுவிச் சொல்லுகிறான்:

முந்திவந்(து) இறைஞ்சினானை
　முகந்துயிர் மூழ்கப்புல்லி,—
'உய்ந்தனை ஒருவன்போனாய்
　எனமனம் உவக்கின்றேன், என்
சிந்தனை முழுதும்சிந்தத்
　தெளிவிலார் போலமீள
வந்ததென் தனியே' என்றான்
　மழையின்நீர் வழங்குகண்ணான்.

[முந்தி வந்து இறைஞ்சினானை: முன்னிலையில் வந்து வணங்கின விபீஷணனை; முகந்து உயிர் மூழ்கப் புல்லி: ஆசையோடு உச்சி முகந்து தன் உயிர் தம்பியின் உடலோடு கலந்து விட்டது 'என்று சொல்லும்படியாக ஆலிங்கனம் செய்து; உய்ந்தனை ஒருவன் போனாய் என: சகோதரர்களில் உயிர் பிழைத்து நீயாவது ஒருவன் ராமனுடன் சேர்ந்தாய் என்று; மனம் உவக்கின்றேன்: மனசு நிம்மதி அடைந்துகொண்டிருக்கிறது; இந்த நிலையில், என் சிந்தனை முழுதும் சிந்த: என் எண்ணமெல்லாம் தகர்ந்து போகும்படி; தெளிவிலார் போல: யோசனை இல்லாதவர்கள் போல; மீள வந்தது என்

மாறுதல் கிடையாது!



"என்னப்பா! இந்தத் தடவையாவது உன் பழம் தித்திக்குமா?"

"என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? நம்ம பழம் எப்பொழுதும் ஒரே மாதிரியாய்த்தானிருக்கும்."

காலக்ஷேபம்

ஒரு மாதம்தானு?

" இந்த வீட்டிலே சமையலுக்கு ஓர் ஆள் வேண்டும் என்று கேள்விப் பட்டேன்!"

" ஆமாம், நாங்கள் ஒரு ஆளைத் தீர்மானம் பண்ணி வேலைக்கு வைத்துக் கொண்டு விட்டோமே!"

"ஓகோ! அப்படியானல் இந்த மாசம் போகட்டும்; நான் அடுத்த மாசம் வந்து உங்களைப் பார்க்கிறேன்!"

★

தெரிந்த விஷயம்!

கணவன்:—இதோ பார்த்தாயா? இந்தப் புத்தகத்திலே தினம் மூன்று மணி நேரம் தூங்கினுல் போதும் என்று போட்டிருக்கிறது.

மனைவி:—இது நம்ம பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு எப்படியோ தெரிந்திருக்கிறதே!

★

வட்டி எங்கே?

ஒரு சமயம் ஒரு சாஙகாரின் பணப்பை ரயிலில் கெட்டுப் போய் விட்டது. அதை ஒருவர் எடுத்து வைத்திருந்து பத்திரிகையில் விளம்பரம் செய்தார். ஒரு மாதம் கழித்து விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அந்த சாவ்கார் அவரிடம் வந்து பணப் பையை வாங்கிக் கொண்டு இரண்டு மூன்று தரம் எண்ணிப் பார்த்தார்.

அவர் (கோபத்துடன்):—என்ன ஐயா, உம்முடைய பணம் சரியாய்த் தானே இருக்கிறது? ஏதாவது குறைகிறதா, என்ன?

சாவ்கார்:—முதல் சரியாய்த்தான் இருக்கிறது. ஒரு மாத வட்டிதான் குறைகிறது!

★

அதற்கும் ஒரு 'செக்!'

பாங்கிக் காஷியர்:—உங்கள் கணக்குக்கு மேல் இருபது ரூபாய் வாங்கியிருக்கிறீர்கள், ஸார்!

மற்றவர்:—அடடா, எனக்குத் தெரியாமற் போய் விட்டதே! அதற்கும் ஒரு 'செக்' கொடுக்கட்டுமா?

நல்ல எஜமான்!

வேலைக்காரன் (நோய் வாய்ப் பட்டுப் படுத்துக் கொண்டிருக்கும் எஜமானைப் பார்த்து):—எஜமான், உங்களைப் பார்க்க டாக்டர் வந்திருக்கிறார்!

எஜமான்:—எனக்கு உடம்பு சரியா யில்லை, யாரையும் பார்க்க முடியாது.

★

நிராயுதபாணி!

" இன்று எங்கள் சங்கத்தில் ஒரு விவாதம் நடத்தப் போகிறோம். வார்த்தைப் போர் பிரமாதமாய் இருக்கும். அவர் அவர்கள் மூளைதான் அவர் அவர்களுக்கு ஆயுதம்!"

" அட பாவமே! நீ நிராயுதபாணியாகப் போகிறாயே!"


★

யோக்யன்தான்!

ஒருவர்:—திருட்டுக் குற்றம் சாட்டப் பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை அடைந்த என் மகனை அவனுடைய நல்ல நடத்தைக்காக இரண்டு மாதம் முன்னதாகவே விடுதலை செய்து விட்டார்கள்!

மற்றவர்:—அப்படியா? உங்கள் மகன் யோக்கியன் என்று எனக்கு அப்பொழுதே தெரியும்!

அட, ராமா!



" என்னப்பா! உங்கள் எசமான் அந்த ஓட்டை ரேடியோவை எப்பொழுது பார்த்தாலும் வைத்துத் தொந்தரவு செய்கிறாரே, நீ எப்படி சகித்துக் கொண்டிருக்கிறாய்?"

" என்னங்க! என்னங்க! என்ன சொல்கிறீர்கள்? இன்னொரு தரம் பலக்கச் சொல்லுங்கள்!"

எழெட்டுத் தினங்களுக்குப் பின் கண்ணப்பனுக்கும் செந்திருவுக்கும் நடக்கவிருந்த திருமணம்தான்!

முற்றத்துக் கட்டிலில் உட்கார்ந்திருந்த சென்னி, "என் செந்திரு, இப்போதான் ஒங்கப்பாரு, பெரியப்பாரு ஒருத்தருமே இல்லையே, இப்போவாவது நீ நடந்ததைச் சொல்லேன்" என்றான். ஆனால் அவள் அங்கு நின்றால்தானே? புதிதாக சேர்ந்த நாணம் அவளை உட்பக்கம் விரட்டியடித்தது!

"அதைக் கேட்பானேன், அம்மா? நானே சொல்றேனே" என்று தொடங்கினான் கண்ணப்பன். "களத்து மேட்டுச் சேருக்குத் தீ வெச்சது கலகக்காரங்களுமில்லே, அதை ஓடிப்போயி அணைச்சது சின்ன மாமனுமில்லே—எல்லாம் செந்திருவின் கைச் சரக்கு!" என்று கூறிக்கொண்டே, "என்ன செந்திரு, அப்படித்தானே?" என்று முடித்துக் கொண்டே பரிகாசமாக நகைத்தான்.

* * *

உண்மையும் அப்படித்தான்! அந்தக் குடும்பத்தின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முடிவாக இந்த வழிதான் செந்திருவுக்குப் புலப்பட்டது. அந்தக் கற்பனை நாடகத்தில் அவள் வெற்றியைக் கண்டு விட்டாள்!

செந்திருவின் வீட்டுப் பண்ணையாட்கள் குறிப்பிட்டபடியே வைக்கோலைக் கொளுத்தியபின் அதை அணைத்து விட்டுச் சென்றனர்.

செந்திருவின் பரபரப்பான செய்தியை நம்பிய மருதை அவசரத்துடன் அந்த இருட்டிலேயே களத்து மேட்டை நோக்கி ஓடினான். நல்ல வேளையாகத் தன் சேருக்குத் தீ வைக்காமல் அண்ணனின் சேருக்கு மட்டும் தீ வைத்துவிட்டுச் சென்ற கலகக்காரர்களைப் பற்றி யறிந்ததும் ஓரளவுக்கு அவனுக்கு ஆனந்தம்தான்! இருந்தும், பண்ணையாட்கள் ஒப்புவித்த பாடங்களில் மயங்கி, அவர்களுக்கு உத்தரவும் போட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான்.

இந்த இடைவேளையில்தான் சாமியப்பனின் வீட்டில் செந்திருவின் நாடகம் நிகழ்ந்து கொண்டிருந்தது!

இந்தச் சம்பவம் நடந்த மறுதினமே சாமியப்பன் தம்பியைக் கண்டு அளவளாவினான்!

* * *

கண்ணப்பனின் மனோரதம் பூர்த்தியாயிற்று. அந்தப் பங்காளிக் காய்ச்சலுக்கு ஒரு முடிவை ஏற்படுத்தி, யார் ஒற்றுமையை ஏற்படுத்துகிறார்களோ—அந்த முறைமைப் பெண்ணுக்குத்தான் மாலையிடுவதாகக் கண்ணப்பன் நிர்மானித்திருந்தான். அவனது இலக்கில் செந்திருதான் வெற்றியடைந்தாள்!

"அத்தை, என்ன இருந்தாலும் செந்திரு புத்திசாலிதான்!" என்றான் கமலம்.

"அப்படின்னு அத்தானுக்குச் செந்திருவைக் கட்டறதுலே ஒனக்குச் சந்தோஷந்தானே?"

"என்ன அத்தை இப்படிக் கேட்கிறே? அவ என் தங்கச்சி!"

இதைச் சொல்லும்பொழுது கமலத்தின் முகத்தில் கர்வமும் பாசமும் சேர்ந்து பிரதிபலித்தன.

"அம்மா, இரண்டும் சரியில்லே!" என்றான் கண்ணப்பன் நகைத்துக் கொண்டே!

அடுத்த நிமிஷம் வண்டியிலிருந்து கலியாணக் கண்டாங்கி மூட்டைகளுடன் இறங்கிய அந்தப் பங்காளிச் சகோதரர்களின் குதூகலம் கிராமத்தையே அல்லவா அதிர அடித்துக் கொண்டிருந்தது!



"என்ன, தம்பி! 'இதோ தருகிறேன்!' என்று ஐந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு போய் ஆறு மாசம் ஆகிவிட்டதே! இப்பொழுது கடன் வாங்கினதாவது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"உங்களிடம் மாத்திரம் வாங்கியிருந்தால் அல்லவா அதைப்பற்றி ஞாபகம் இருக்கப்போகிறது, ஐயா!"



படும் ஓசை கேட்டது. முற்றத்து நில வில் மகளுடன் அளவளாவிக் கொண் டிருந்த சாமியப்பன் பரபரப்புடன் ஓடிக் கதவைத் திறந்தான். செந்திரு நின்று கொண்டிருந்தாள்!

"பெரியப்பா, அப்பாரு ஒங்களைப் புடிச் சுக்கிட்டுத் திட்டுறாங்க! நூறு கலம் நெல்லையும் களத்து மேட்டுலியே சேர் கட்டிப்புட்டு வந்தீங்களே, ஒரு காவலா வது போடவாணும்? யாரோ சர்க்கா ருக்கு எதிரியாக் கிளம்பியிருக்காங்களாம். அவங்க வந்து சேருக்கு நெருப்பு வச்சுட்டு ஓடிட்டாங்களாம்; அப்பாருக்கு இது அரைகுறையாத் தெரிஞ்சதும் ஓடிப்போயி அணைச்சாங்களாம்" என்று மூச்சுவிடா மல் செந்திரு கூறி நிறுத்தினாள்.

சாமியப்பனின் சுவாசமே நின்றுவிடும் போலிருந்தது. பதட்டமடைந்தான்.

"பயப்படாதீங்க பெரியப்பா! ஒரு புடி நெல்லுகூட வீணாகல்லே; அது சரி யாப் பத்தறதுக்குள்ளாரேயே எல்லாத் தையும் அணைச்சுட்டு, எங்க ஆளையும் காவல் போட்டு வந்திருக்காங்க!"

செந்திரு அவனது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

இப்பொழுது அவனது சுவாசம் திரும்பி விட்டது!

"நீ இங்கேயே இரு, கொழந்தை!—வந் துட்டேன்!" என்று கூறிக் கொண்டே சாமியப்பன் கொல்லைப் புறமாக விரைந்தான்.

அங்கே சற்றே தீப்பற்றி அவிக்கப் பெற்றிருந்த சேர்க் களஞ்சியம் மருதை யின் ஆட்களால் காவல் காக்கப்பட்டு வந்ததைக் கண்டபோது அவனது உட லில் சகோதர பாசம் புதிதாகவே ஊற்றெடுத்தது!

4

அன்று சித்திரா பௌர்ணமி. பூரண நிலவொளியில் மருதையின் வீடு கலகலத்துக் கொண்டிருந்தது. காரணம்

முறைமைப் பெண்

துரோணன்

வறண்ட கோடையிலும் ஒருவித குளுமை! சுற்று வட்டாரம் எங்கிலும் பசுமையே காணும். ஆங்காங்கே உள்ள சில வேப்ப மரங்கள் மட்டும் சித்திரை வெய்யிலைப் புறக்கணித்துவிட்டுப் பசுமையுடன் அந்தக் கிராமத்தின் மானத்தைக் காத்து நின்றன.

கொள்ளிடத்துப் படுகையின் ஓரங்களிலிருந்த புளிய மரங்களின் கீழே ஏராளமான பழங்கள் உதிர்ந்து கிடந்தன. கண்ணப்பன் அவைகளைப் பொறுக்கிச் சாக்குக்குள் போட்டுக் கொண்டிருந்தான். பழமையும், புதுமையும் கலந்திருந்த அவனது தோற்றமே அலாதியாகத் தானிருந்தது!

திடீரென்று இந்தக் குரலைக் கேட்டதும் அவன் அசந்து விட்டான். படுகையின் இறக்கத்தில் குடத்துடன் நின்று கொண்டிருந்த கமலத்தைக் கண்டதும் அவன் முகம் வெட்கத்தினால் சிவந்தது.

"அதிருக்கட்டும், கமலம்! பெரிய மாமன் ஊரிலே இல்லையா?" என்றான் கண்ணப்பன்.

"ஊரிலே இல்லாம என்ன? நாளடி வேலை கடுமையா யிருக்குது; களத்து மேட்டுலேருந்து வாரத்துக்கு ஒரொரு நாள் ராத்திரி பத்து மணிகூட ஆவுது!"

அவன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். பின்னர் தாழ்ந்த குரலில், "ஆமா, சின்ன மாமன்தான் ஒரே புடிவாதமா இருக்குதே. ஒங்கப் பாருக்கு நீதான் எடுத்துச் சொல்லக் கூடாதா? அண்ணன் தம்பிக்குள்ளே இந்தமாதிரி சபதம் இருக்கலாமா? யாருக்கு யார் உட்டுப்பூடும், ஊம்......?"

கமலத்தின் முகம் சற்றே கறுத்தது. "அதுக்கு நான்தான் என்னு செய்யறது, அத்தான்? ஒருத்தராவது தணிஞ்சு போனாத் தேவலை — எப்பவோ நடந்த தண்ணி மடைச் சண்டைக்காக இன்னமும் இவங்க முகாலோபனம் செய்வேணுங்கிறாங்க! எங்க பாடுதான்......" என்று சொல்லிக் கொண்டே வந்த கமலம் திரும்பி நாற்புறமும் நோக்கி விட்டுத் தொடர்ந்தாள்:

"எங்க பாடுதான் மோசமாப் போவுது. என் அருமை தெரிந்து என்னை அனுசரிக்கிறதுக்குத் தாய் இல்லே! பாவம், செந்திருவுக்கும் தாய் இல்லே!"

கமலத்தின் முகத்தில் சோகம் நிரம்பி நின்றது. அவள் நகர்ந்தாள்.

அடுத்த கணம் சிந்தனையும் போராட்டமும் கண்ணப்பனின் இதயத்தைப் பிடித்துக்கொண்டு விட்டன. கமலமும் செந்திருவும் மாறி மாறி அவனது கண்களுக்கெதிரில் வந்து கொண்டிருந்தனர்.

2

சோழபுரம் கிராமத்திலேயே இது ஒரு விசித்திரமான குடும்பம்தான்!

அண்ணன் தம்பிகளான சாமியப்பனையும், மருதையையும் வாழ்க்கை நிலையிலும் ஒரேமாதிரியாகச் செய்துவிட்டார் அந்தக் கடவுள்! இரண்டு பேர்களும் சமமான பூஸ்திதி யுடையவர்கள்; இரண்டு பேர்களுக்கும் சம வயதான இரு பெண்கள்! அதுதான் போகட்டும்; அந்த இரண்டு பெண்களில்தான் ஏதாவது வித்தியாசங்களுண்டா? அதுவுமில்லை!

பெரியவன் சாமியப்பன் தன் ஒரே பெண் கமலத்தைக் கண்ணப்பனுர்க்குக் கட்டிக் கொடுப்பதில் பிடிவாதமாக இருந்தான். இளையவன் மருதையோ செந்திருவை முறை தவறாமல் கண்ணப்பனுக்கு முடித்து விடுவதற்கு ஒற்றைக் காலில் நின்றுகொண்டிருந்தான்! பாவம், இவர்க ளிருவருக்குமே கண்ணப்பனைத் தவிர உலகத்தில் வேறு வாலிபர்களே கிடைக்கவில்லை!

அந்தப் பெண்களின் மனோ உலகமும் அப்படித்தான்! கண்ணப்பனுடன் நடத்தப்போகும் வாழ்க்கையைப் பற்றித் தமக்குள் ஆனந்தக் கனவுகள் கண்டு கொண்டிருந்தனர்!

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது!"—இது கிராமியப் பழமொழி. சாமியப்பனுக்கும், மருதைக்குமிடையே அபிப்பிராய பேதங்களை முடித்துவிடும் பணியைத் தவக்கமில்லாமல் அந்தக் கிராமம் ஏற்றுக்கொண்டது. மண்ணியாற்றின் புதுவெள்ளத்தைக் காரணங் காட்டி, தங்கள் விஷ விதையை விதைத்தனர் கிராமத்தார். அது நன்கு முளைத்து இன்று அவர்களுக்குள் பேச்சு வார்த்தைகள் கூட இல்லாத நிலைக்கு வந்து விட்டன. இதன் காரணமாகச் சகோதரர்கள் தங்கள் அருமைப் பெண்களைக் கூடக் கட்டுமானம் செய்தனர்.

இவ்வளவுக்கு மிடையில் கண்ணப்பனும், அவனது தாய் சென்னியும்தான் அந்தரத்தில் நின்றனர்.

"சென்னி! நீயும் ஒன் மகனும் எனக்கு எப்போதும் வேணும். ஆனா, ஒங்க சின்னண்ணன் பேச்சை எடுத்துக்கிட்டு இங்கே வராதே—அவன் சங்காத்தியமே நமக்கு வேணும்!" இது சாமியப்பனின் கண்டிப்பான வார்த்தைகள்.

"சென்னி! மூணு தலைமுறை நடந்தாலும் அண்ணேர்சி உறவை ஒன்னோடேயே வைச்சுக்க! அது இங்கே வேணும். எப்படியோ, நான் நினைச்சிருக்கிறப்போலே இந்தக் குட்டி கண்ணுலத்தைக் கலிய பெருமாள் கோயில்லே கொண்டுபோய் நடத்திப்புடலாம்னு இருக்கிறேன்!"

இது மருதையின் அழுத்தமான வார்த்தைகள். ஒவ்வொரு தடவையும் இவ்வாறு தீர்மானத்துடன் முடிந்தன.

இந்தத் தீராப் பிரச்னைகளைப் பற்றித் தாயாருக்கும், மகனுக்கும் நடக்கும் மனப் போராட்டங்கள் சகஜமாகி விட்டன.

அநேக நாள் சிந்தனைக்குப் பின் கண்ணப்பன் மட்டும் ஒருவாறான முடிவுக்கு வந்தான்.

'சாமியப்பனுக்குத் தன் ஒரே பெண் கமலத்தைக் கண்ணப்பனுக்குக் கட்டி விடுவதில் பிடிவாதம்தான் — இதற்கும் ஓரளவாவது தம்பி மருதையின் தயவு வேண்டுமே?'

இதேபோல்தான் சில நாட்களாக மருதைக்கும் கண்ணப்பனை விட்டுவிடும் யோசனையில்லை. இருந்தும், அண்ணன் சாமியப்பனின் பிடிவாத குணத்திற்கு...?

'அத்தான் நம்மைக் கைவிடுமா? நம்ப முடியவில்லையே!' — இது கமலத்தின் மனோரதம்.

'ஆயிரமிருந்தாலும் அத்தான் நமக்குத் தான் சொந்தம்!' — செந்திரு இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்தாள்.

'யார் வேண்டுமானாலும் எனக்கு மருமகளாகட்டும்— அண்ணன்மார்களின் விரோதம் முதலில் தீரவேண்டும் — இது சென்னியின் கோரிக்கை.

சில தினங்களாக ஒருவருமே உறங்கவில்லை!

* * *

3

போராட்டம்! எல்லோருடைய உள்ளத்திலும் புதுப் பிரச்னைகள்!

அன்றிரவு பத்து நாழிகைகள் இருக்கும். கதவு 'தட தட' வென்று தட்டப்


மகிழ்ச்சிதரும் புதுமையுடையது...
ஹிமாலயா புக்கே
டாய்லட் பௌடரின்
குளுமையான பரிமளம்
நேர்த்தியான ஹிமாலயா புக்கே தான்
எல்லாவிதத்திலும் சிறந்த டாய்லட்
பௌடர். இது வேர்வையை உறிஞ்
சுகிறது, உங்கள் சருமத்திற்கு
மென்மையும் அழகும் அளிக்கி
றது. மேலும் இதன் மகிழ்ச்சி
தரும் மலர்ச்சியளிக்கும்
பரிமளம் வெகு நேரம்
நீடித்து நிற்கிறது.
உங்களை குளுமை
யுடனும் இருக்கச்
செய்கிறது.
CHARMIS
Himalaya Bouquet
TOILET POWDER
இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு.
HBT. 8-172-55 TM

கார அம்மாளின் பெண்தான். தன்னுடைய யோசனையைத் தேவகாந்தா வித்தியாசமில்லாமல் எடுத்துக் கொள்ளுவாளா என்று தயங்கினான். மேலும், தேவகாந்தாவோ தங்கள் வீட்டிலேயே அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளலாமா என்று ஜாடையாகக் கூட அவனைக் கேட்கவில்லை.

இப்படியாக மனதைக் குழப்பிக்கொண்டிருந்த ராமசேது அன்று சாயங்காலம் வீட்டையடைந்தவுடன் தன் மனைவியைப் பார்த்து வழக்கமான கேள்வியைக் கேட்கு முன்பே தேவகாந்தா அவனைப் பார்த்து, "விஷயம் முற்றிவிட்டது! இவர்கள் பட்டணத்திற்குத்தான் வந்திருக்கிறார்களென்று தெரிந்து கொண்டு பூங்குளத்திலிருந்து அந்தப் பையன் வந்திருக்கிறானாம். ஆனால் இவர்கள் எங்கு தங்கியிருக்கிறார்கள் என்று தெரியாமல் சுற்றிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. இவர்களிருக்கும் சத்திரத்தையும் அவன் சுற்றிப் பார்க்க நுழைந்தபோது, நல்லவேளையாக இவர்கள் அவன் கண்ணில் படாமல் வேறு வழியாக இங்கு வந்துவிட்டார்கள். நாளைக்கு வருவதாகச் சொல்லிவிட்டுச் சற்று முன்புதான் போனார்கள். பாவம்! அந்தப் பெண் என்னிடம் மறுபடியும் வேண்டிக் கொண்டதை நினைத்தால் இப்போது கூடக் கண்ணில் ஜலம் வருகிறது!" என்று மூச்சு விடாமல் பேசினாள். மேலும் தொடர்ந்து, அவர்கள் வேலையைப் பற்றித் தெரிந்தவர்களிடம் விசாரித்தீர்களா என்றும் கேட்டாள்.

"எங்கேயும் பிரயோஜனப்படவில்லை" என்று கையை விரித்த ராமசேது, இது தான் தன் எண்ணத்தைத் தெரிவிக்கச் சரியான சமயமென்று நினைத்து, "தேவகாந்தா! ஏன் அவர்களைத் தாற்காலிகமாய் நம் வீட்டிலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது? உன் அம்மாவையும் அவர்களுக்குத் தெரியுமென்கிறாய். இரண்டொரு மாதம் அவர்கள் இங்கிருந்தால் அதற்குள் கட்டாயம் வேலைக்கு வேறு இடம் பார்த்துக் கொடுத்து விடுவேன். உனக்கும் தற்சமயம் உன் பெற்றோர்கள் வருகையால் ஏற்படும் அதிக வேலையும் குறையும். உன் பெற்றோர்கள் ஊருக்குப் போன பிறகு கூட உனக்குப் பொழுது போகக் கொஞ்ச நாள் துணையாகவும் இருப்பார்கள்" என்றான்.

"அப்பாடா! நானே இந்த யோசனையைச் சொல்லலாமென்றிருந்தேன். ஆனால் அதிகப்படிச் செலவு என்று நீங்கள் எங்கே கோபித்துக் கொள்ளப் போகிறீர்களோ வென்றுதான் பேசாமலிருந்து விட்டேன்!" என்று தேவகாந்தா சொன்னபோது ராமசேதுவும் 'அப்பாடா!' என்று மனதிற்குள் ஒரு பெருமூச்சு விட்டான்.

மறுநாள் ராமசேது ஆபீஸுக்குப் போகவில்லை. அதற்கு இரண்டு காரணங்களிருந்தன. ஒன்று தேவகாந்தாவின் பெற்றோர்களை வரவேற்க வேண்டும்; அதைவிட முக்கியமானது, இரண்டு நாளாகத் தன் ஆவலைத் தூண்டிவிட்ட அந்த இருவரையும் யாரென்று தெரிந்து கொள்ள வேண்டும். அவனுடைய மாமனார் சாயங்காலம் நாலரை மணிக்குப் பட்டணம் வந்து சேரும் வண்டியில் வருவதாக எழுதியிருந்தார். அதனால் அந்த அம்மாளும் பெண்ணும் பதினொரு மணிக்கு வழக்கம் போலத் தன் வீட்டிற்கு வந்தவுடனேயே அவர்களை வேலையை ஏற்றுக் கொள்ளும்படிச் சொல்லிவிடலாமென்று ராமசேது நினைத்தான். தன் ஆவலை வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் ராமசேது பதினொரு மணி வரையில் காத்துக் கொண்டிருந்தான். அவர்களைக் காணவில்லை. மணி பன்னிரண்டும் அடித்தாய் விட்டது. அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. கடிகாரம் ஒரு மணியைக் காண்பித்தது. அவனால் பொறுக்க முடியவில்லை. மனைவியைக் கேட்டுவிடலாமாவென்று துடித்தான். ஆனால் ஏனோ அவளைக் கேட்கப் பயந்தான். மணி இரண்டும் அடித்தது. அவனுடைய இருதயம் வெடித்துவிடும் போலாகிவிட்டது. துணிந்து தேவகாந்தாவைக் கேட்டே விட்டான்.

"கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!" என்று கொஞ்சலாக ஆரம்பித்த தேவகாந்தாவை விந்தையுடன் நோக்கினான் ராமசேது. "தினம் தினம்தான் நாவலைக் கேட்டு அலுத்துப் போயிருக்கிறீர்களே! அதனால் நானே ஏன் ஒரு கற்பனைக் கதையை உங்களுக்குச் சொல்லக் கூடாதென்று நினைத்தேன். நாவலைவிட இந்தக் கற்பனை நிஜம் போலத் தோன்றவில்லையா? எப்படியிருந்தாலும் சமையலுக்கு ஆள் நமக்குத் தேவையில்லை. நான் என் அம்மாவுடன் இப்போது ஊருக்குப் போனால் திரும்பி வர ஒரு வருஷமாவது பிடிக்காதா?" என்று சொல்லும்போது, தேவகாந்தாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது.


"ஒரு வருஷத்திற்குப் பிறந்தகத்தில் என்ன வேலை?" என்று அறியாமல் கேட்ட ராமசேதுவுக்கு விஷயம் புரிய அதிக நேரமாகவில்லை.


"அவசரப்படாதீர்கள்! பூங்குளம் என்னுடைய பாட்டியின் ஊர் என்பது உங்களுக்குத் தெரியாது. என்னுடைய அம்மாவை அந்த அம்மாளுக்கு நன்றாய்த் தெரியுமாம். என்னையும் கல்யாணத்திற்கு முன்பு பார்த்திருக்கிறார்களாம். ஆனால் எனக்கு அவர்களைப் பார்த்ததாக ஞாபகமில்லை. காலையில் நான் வேலைக்காரனைக் கூப்பிட ஜன்னலருகே போனபோது தெருவில் போய்க் கொண்டிருந்த அந்த அம்மாள் தற்செயலாக என்னைப் பார்த்துவிட்டு அடையாளம் புரிந்து கொண்டு விட்டார்கள்."

"அவர்கள் சொன்னதெல்லாம் உண்மைதானே?" என்று ராமசேது மனைவியைக் கேட்டாலும் மனதிற்குள் அவர்களுடைய திக்கற்ற நிலைமையை எண்ணிக் கஷ்டப்பட்டான்.

"வீணாகச் சொல்லாதீர்கள்! அவர்கள் எங்கேயோ சத்திரத்தில் தங்கியிருக்கிறார்களாம். நாலு நாளைக்கு மேல் அங்கே தங்குவதற்கு அனுமதிக்க மாட்டார்களாம். அதற்குள் உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் சமையல் வேலைக்குச் சிபார்சு செய்யும்படி அந்தப் பெண் என்னை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டது. பாவம்! அதனுடைய அழகுக்குத் தகுந்த அதிர்ஷ்டமில்லை. நாளைக்கு மறுபடியும் இங்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்!" என்று முடித்தாள் தேவகாந்தா.

மிருதுவான சுபாவமுள்ள ராமசேதுவுக்கு இதைக் கேட்டவுடன் மனது மிகவும் இளகி விட்டது. மறு நாள் தனக்குத் தெரிந்த ஐந்தாறு நண்பர்களிடம் இந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தான். ஆனால் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதிலுள்ள கஷ்டத்தை ராமசேது அப்போதுதான் உணர்ந்தான். ஏனென்றால், உதவி தேவையாயிருந்த இரண்டொருவரும் சமையல் செய்யும் அம்மாளுடன் கூட ஒரு பெண்ணும் இருப்பாள் என்று தெரிந்தபோது பின்வாங்கி விட்டார்கள். இதனால் உற்சாகத்தை யிழந்து மனதைக் குழப்பிக் கொண்டிருந்தபோது ராமசேதுவுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அவர்களுக்கு வேறு வேலை தேடிக் கொடுக்கும் வரையில் ஏன் தன்னுடைய வீட்டிலேயே தாற்காலிகமாகத் தன் மனைவிக்கு உதவியாக அவர்களை வைத்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்தான். அவன் அப்படி நினைப்பதற்கு இன்னொரு தனிக் காரணமும் இருந்தது. அவனுடைய மாமனார் தன் மனைவியோடும் குழந்தைகளோடும் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் பட்டணம் வருவதாக எழுதியிருந்தார். வருபவர் வெறுங் கையுடன் வராமல் அவனுக்கு ஒரு வைர மோதிரமும் தேவகாந்தாவுக்கு ஒரு வைர பேஸரியும் வாங்கிக் கொண்டு வரப்போவதாகப் பயமுறுத்தி யிருந்தார். அந்தச் சமயத்தில் தேவகாந்தா கஷ்டப்படாமல் சமையலுக்கு ஒரு ஆளை அமர்த்தியிருந்தால் அது அவனுக்கும் பெருமையாயிருக்கும்; அவளுடைய பெற்றோர்களுக்கும் தங்கள் பெண்ணை மாப்பிள்ளை மேலாக வைத்துக் கொண்டிருக்கிறா ரென்ற எண்ணமும் ஏற்படும் என்று ராமசேது நினைத்தான். ஆனால் தன்னுடைய எண்ணத்தை மனைவியிடம் தெரிவிக்க ராமசேது பயப்பட்டான். அதற்குக் காரணம் சமையற்





"ஸார்! எனக்கு இரட்டைக் குழந்தைகள் குண்டாகவும் புஷ்டியாகவும் பிறந்திருக்கிறது. ஆனால் என்ன பெயர் வைக்கிறது என்று தான் தெரியவில்லை!"

"ஏன், 'அசோக்', 'சாந்தி' என்று பேசாமல் பெயர் வைத்து விட வேண்டியதுதானே! இதற்கு யோசனை என்ன?"

முடியவில்லை. மனதும் ரொம்ப கஷ்டமாயிருக்கிறது" என்றான் தேவகாந்த.

"விஷயத்தைச் சுற்றி வளைக்காமல் சட்டென்று சொல்!" என்று பன்மடங்கு ஆவலுடன் கூவினான் ராமசேது.

"நீங்கள் வெளியில் போன பிறகு ஒரு வயதான ஸ்திரீயும் அவளுடன் ஒரு பெண்ணும் வந்திருந்தார்கள். அடாடா! அந்தப் பெண்ணின் அழகைச் சொல்லி முடியாது! பூரண சந்திரன் போன்ற முகமும், சமுத்திரம் போன்ற கண்களும், தந்தம் போன்ற கைகளும்......"

"ஐயையோ! என்னால் தாங்க முடியவில்லையே! வர்ணனையில்லாமல் விஷயத்தைச் சொல்லேன்!" என்று பிரலாபித்தான் ராமசேது.

"சரி, கோபித்துக் கொள்ளாதீர்கள்! அவர்கள் இரண்டு பேரும் தாயாரும் பெண்ணுமாம். கதியற்ற இருவரும் பூங்குளத்தில் ஒரு பணக்காரர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார்களாம். அதாவது தாயார் சமையல் வேலை செய்வாள். பெண் சுற்று வேலை செய்வதோடு இன்னொரு வேலையையும் செய்துகொண்டிருந்தாளாம். அந்தப் பணக்காரருக்கு ஒரே பெண்ணும். அது அரைப் பைத்தியமாம். அதற்கு இவள் இணை பிரியாத தோழியாக இருந்து சமத்துச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாளாம்! இப்படி இருக்கும்போது பட்டணத்தில் நான்கு வருடங்களாகப் படித்துக் கொண்டிருந்த அந்தப் பணக்காரரின் தங்கையின் பிள்ளை அந்த வீட்டிற்கு வந்தானும். அவனுக்குத் தன் 'சமத்து'ப் பெண்ணைக் கல்யாணம் செய்து விடலாமென்று நினைத்துத்தான் அந்தப் பணக்காரர் தம் மருமகனின் படிப்பின் செலவு பூராவையும் ஏற்றுக் கொண்டிருந்தார்."

"ஆனால் அந்தப் பையன் 'சமத்து'ப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேனென்று சொல்லி விட்டான். அப்படித்தானே?"

"அப்படிச் சொல்லியிருந்தால் மட்டும் தேவலையே! இந்தப் பெண்ணை—அது தான் காலையில் வந்திருந்த பெண்ணைப் பார்த்தவுடனேயே அவளைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதில் ஆக்ஷேபணை ஏதாவது உண்டா என்று அவளுடைய அம்மாளையே கேட்டு விட்டானும். இந்த அம்மாளுக்கு அந்தச் 'சமத்து'ப் பெண்ணை அவனுக்கு நிச்சயம் செய்திருக்கிற விஷயம் தெரியும். ஆகையால் இந்தச் சம்பவம் வீட்டு எஜமானரின் காதில் விழுந்தால் வம்பில் முடியுமென்று நினைத்து இந்த அம்மாள்......"

"அந்தப் பிள்ளையிடம் கண்டிப்பாக இதுமாதிரி அசட்டுத்தனமாக நடந்து கொள்ளாதே என்று சொல்லி விட்டாள். அப்படித்தானே?"

"அப்படிச் சொல்லி யிருந்தால் தேவலையே! நீங்கள் மேலே சொன்னபடி சொல்லிவிட்டு இன்னும் அந்தப் பையனைப் பார்த்துத் தனக்குச் சம்பந்தமில்லாத ஒரு அனாவசியமான கேள்வியையும் கேட்டாள். அதாவது, தன் பெண்ணை அவன் கல்யாணம் செய்து கொண்டால் படிப்புக்காக அவன் மாமா செலவழித்திருந்த நாலாயிரம் ரூபாயை அவனால் எப்படித் திருப்பிக் கொடுக்க முடியு மென்று கேட்டாள். இந்தக் கடைசிக் கேள்வியை மட்டும் வீட்டு எஜமானி கேட்டுக் கொண்டிருந்தாள்."

"உடனே தாயாரையும் பெண்ணையும் வேலையை விட்டுப் போகச் சொல்லி விட்டாள். அப்படித்தானே?"

"அப்படிச் சொல்லி யிருந்தால் தேவலையே! இவர்கள் பூங்குளத்துக்கு நாறு மைல் சுற்று வட்டாரத்திலேயே இருக்கக் கூடாதென்றும், இவர்கள் ஜாகையும் விஷயமும் போகுமிடமும் பையனுக்குத் தெரியக்கூடாதென்றும் சொல்லி விட்டாளாம்."

"அது சரி! தங்கள் கஷ்டங்களைச் சொல்வதற்கு இவ்வளவு பெரிய பட்டணத்தில் எல்லாரையும் விட்டுவிட்டு உன்னை மாத்திரம் அவர்கள் எப்படிப் பொறுக்கி எடுத்தார்கள்?"

கற்பனையும் காரிகையும்

எம்.எஸ்.எம்.

ராமசேது சாயங்காலம் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்போது களைத்துப் போய் வருவதில்லை. ஏனென்றால் அவன் அங்கே செய்யும் வேலையெல்லாம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம்தான். அவன் வீட்டையடையும்போது அவன் மனைவி தேவகாந்தா வாயிற்படியில் நின்று வழிமேல் விழி வைத்துக் கொண்டு நிற்பதில்லை. ஏனென்றால் அவன் தினம் கட்டாயம் சரியாக ஐந்தேகால் மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவது வழக்கம். அவன் வீட்டில் நுழைந்தவுடனே அவன் மனைவி கடச்கடக் காப்பியை அவனிடம் நீட்டுவதில்லை. அதற்குக் காரணம் ராமசேது வீட்டிற்குக் கிளம்பு முன்னரே ஆபீஸிலேயே காப்பி வரவழைத்துச் சாப்பிட்டு விடுவதுதான்!

ஆனால் ராமசேது வீட்டையடைந்தவுடனே தேவகாந்தாவை நோக்கி ஆவலுடன், "என்ன விசேஷம்?" என்று நாள் தவறாமல் கேட்கத் தவறியதில்லை. இது நீங்கள் நினைப்பது போல் சாதாரணமான கேள்வியல்ல. அவன் ஆபீஸுக்குப் போய் விட்டுச் சாயங்காலம் வீடு திரும்பும்வரை தேவகாந்தாவுக்குப் பொழுது போவதற்காகக் கத்தை கத்தையாக நாவல்களை நண்பர்களிடமிருந்து இரவல் வாங்கிப் போட்டிருந்தான். "என்ன விசேஷம்?" என்று ராமசேது கேட்டவுடனே, தான் படித்த நாவலைத் தேவகாந்தா கணவனிடம் விவரிக்க ஆரம்பித்து விடுவாள். இதில் ஒரு தனி அம்சம் என்னவென்றால் அவள் ஒரு நாளும் கதையை முழுதும் அவனிடம் சொன்னது கிடையாது. ஏனென்றால் அவன் வரும் சமயத்தில் அவள் நாவலில் ஒரு பாதியைத்தான் படித்திருப்பாள். மறு பாதியை மறு நாள் மத்தியானத்திற்குள் படித்து முடித்துவிட்டு, உடனே அடுத்த நாவலைப் படிக்க ஆரம்பித்து விடுவாள். அதைச் சாயங்காலம் அவன் வரும் வேளைக்குப் பாதிதான் படித்திருப்பாள்.

இது மாதிரியாக ஒவ்வொரு சாயங்காலமும் முதல் நாள் தேவகாந்தா ஆரம்பித்த கதையின் முடிவையும் இன்னொரு கதையின் ஆரம்பத்தையும்தான் ராமசேதுவினால் கேட்க முடியும்.


ராமசேது 'என்ன விசேஷம்?' என்று கேட்பதின் தனி அர்த்தம், 'நேற்று நடந்த திருட்டில் திருடன் அகப்பட்டு விட்டானா?', 'துப்பறிபவன் மாயக் கொலையைக் கண்டு பிடித்துவிட்டானா?', 'ஜமீன்தார் வீட்டில் விரோதிகள் கொள்ளையடிக்கப் போகும்போது ஒரு துப்பாக்கி வெடி சப்தம் கேட்டதே. அதன் மர்மம் என்ன?'.........ஆகியவைகள்தான்!

அன்று சாயங்காலம் ராமசேது வீட்டையடைந்தவுடனேயே தேவகாந்தா முந்திக்கொண்டு, "இன்றைக்கு நீங்கள் ஆபீஸுக்குப் போனவுடனேயே ஒரு விசேஷம் நடந்தது" என்றாள். அவன் வழக்கமான ஆவலுடன், 'என்ன விசேஷம்?' என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டான்.

"நான் சொல்லப்போவது நேற்று படித்த நாவலின் முடிவு இல்லை. இன்றைக்கு என்னால் நாவலையே படிக்க



டிராமாவில் நடித்தவர்கள் போட்டோ எடுத்துக் கொள்ளுகிறார்கள். விநாயகர் வேஷம் போட்டவர், விநாயகர் முகத்தைக் கழற்றி மடியில் வைத்துக் கொண்டு போட்டோ எடுத்துக் கொள்ளுகிறார்!



டால்டாவில் தயாரித்த ருசிமிக்க ஜவ்வரிசிக்கூழ்

உடலுக்கு "உஷ்ணத்தை" தரும் மாவுசத்து ஜவ்வரிசியில் ஏராளமாய் இருக்கிறது. ஜவ்வரிசி எளிதில் ஜீரணமாகக்கூடியது. தவிர உங்கள் குழந்தைகள் இந்தக்கூழை மிகவும் விரும்புவார்கள் ½ கப் ஜவ்வரிசியை 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். 1 கப் வடிகட்டின கெட்டியான வெல்லப்பாகுடன், சுக்கு, ½ தேக்கரண்டி உப்பு இவைகளை சேர்க்கவும். தெளிவாகும்வரை பாகையும் ஜவ்வரிசியையும் அடுப்பில் வைத்துக்காய்ச்சவும். பாத்திரத்தை குளிர்ந்த தண்ணீரால் கழுவினபின் அதில் கூழை ஊற்றி உறைய வைக்கவும். பிறகு ¼ கப் வெல்லத்துடன் 2 பெரிய ஸ்பூன் டால்டா சேர்த்து கொதிக்கவைக்கவும். அதில் 3 பெரிய ஸ்பூன் தண்ணீர் சேர்க்கவும் அடுப்பிலிருந்து இறக்கி 2 பெரிய ஸ்பூன் அளவு எலுமிச்சஞ்சார் சேர்க்கவும். கூழை பாத்திரத்திலிருந்து அகற்றி பாகை அதன்மேல் ஊற்றி, முந்திரிப்பருப்பு முதலானவைகளை மேலே தூவவும். டால்டாவில் தயாரித்த உணவு சூடாகவோ, ஆறியோ எப்படி இருந்தபோதிலும் ருசிமிக்கதாய் இருக்கும். டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிகநேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

உஷ்ணமான வேளைகளில் அருந்த
ஆரோக்யமளிக்கும் பானங்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



HVM. 122-172 TM

பொறுக்க முடியவில்லை. பிறந்த வீட்டிற்குப் போய் விட்டாள். அவள் சென்ற மறுநாளே அவள் இறந்து விட்டதாக எனக்குத் தந்தி வந்தது ......"

அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. அவன் கண்கள் கலங்கின. அவன் தன்னை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு மறுபடியும் பேசலானான் :

" அவள் போனதிலிருந்து ஒவ்வொரு வேளையும் நான் 'பசி, பசி' என்று துடிக்கிறேன். என் பசிக்குப் பரிந்து ஆகாரம் கொடுக்கும் ஒரு ஜீவன் இந்த உலகத்தில் இல்லை என்பதை இப்பொழுதுதான் நான் உணர்கிறேன். தினசரி ஆகாரத்திற்காக இப்படிச் சிலைகளைக் கையில் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாய் அலைகிறேன். ஆயினும், இவைகளை முக்கால் ரூபாய்க்குக்கூட வாங்குவாரில்லை. பெண் பாவம் பொல்லாதது என்பதை இப்பொழுதுதான் நான் அனுபவிக்கிறேன்; நன்றாக அனுபவிக்கிறேன்."

அவன் கதையைக் கேட்க எனக்குப் பரிதாபமாய் இருந்தது. அவனுக்கு ஏதேனும் சமாதானம் சொல்ல வேண்டுமென்று என் மனம் துடித்தது. ஆனால் எந்த வகையில் அவனைச் சமாதானம் செய்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அதற்குள் அவன் திடீரென்று கனவு கலைந்து விழித்தெழுந்தவன்போல், "நமஸ்காரம்; நான் போக வேண்டும். பசிக்கிறது; ஏதேனும் சாப்பிட வேண்டும். இந்தச் சிலைகளை விலைக்கு எடுத்துக் கொண்டு விட்டீர்களல்லவா? எடுங்கள் பணத்தை! நான் போக வேண்டும்" என்று துடித்தான்.


ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவன் கையில் கொடுத்தேன்.


"ஐந்து ரூபாய்க்கு என்னிடம் சில்லறை ஏது?" என்றான்.

"சில்லறை வேண்டாம்; ஐந்து ரூபாயையும் நீயே எடுத்துக் கொள்!" என்றேன்.

அவன் 'கட கட'வென்று ஒரு பைத்தியக்காரச் சிரிப்புச் சிரித்தான்.

"ஐந்து ரூபாயா! பாதகமில்லை; சந்தோஷம். எனக்கு மூன்று நாளைக்குக் கவலை இல்லை. நீங்கள் கலையின் பெருமைக்காக இந்த ஐந்து ரூபாயைக் கொடுக்கவில்லை. எனக்குத் தெரியும், பசியின் கொடுமைக்காகத்தான் கொடுத்தீர்கள். எல்லாம் சாண் வயிறு. அவ்வளவுதான்; நமஸ்காரம்" என்று சொல்லி மறுபடியும் 'கட கட' வென்று ஒரு பைத்தியக்காரச் சிரிப்புச் சிரித்து விட்டு வெளியே போனான்.





பாவம் பொல்லாதது. அதனால்தான் நான் இப்பொழுது ஒரு சாண் வயிற்றின் பசியைப் போக்க இப்படிச் சிலைகளைக் கையில் சுமந்து கொண்டு வெய்யில், மழை என்று பாராது 'ஜோடி ஒன்றரை ரூபாய்க்காவது விற்காதா?' என்று தெருத் தெருவாய் அலைகிறேன்!"

"ஐயோ பாவம்! அந்தப் பெண் இறந்து விட்டாளா?" என்றேன் நான் பச்சாத்தாபத்துடன்.

"ஆமாம், நான் அவளைக் கொன்று விட்டேன். அவள் இருக்கும் வரையில் நான் இந்த வயிற்றுப் பாட்டைப் பற்றிக் கவலைப் பட்டதே இல்லை. எனக்குப் பசி என்பது எப்படி இருக்கும் என்றே தெரியாது. அவள் என்னை ஆசையோடும் காதலோடும் கல்யாணம் செய்து கொண்டாள். நான் சிலைகள் செய்யும்பொழுதெல்லாம் என் பக்கத்திலேயே உட்கார்ந்து ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பாள். அவளுடைய அழகான முகமும், சிரிப்பும், கலகலப்பான பேச்சும் என் கலையை வளர்த்தன; கைத்திறனைச் சோபிக்கச் செய்தன. ஆயிரக்கணக்கான சிலைகளை அழகழகாகச் செய்து குவித்தேன். உடலில் சோம்பல் தோன்றவில்லை. உள்ளத்தில் அலுப்பு ஏற்படவில்லை. அவள் என்னிடம் கொண்டிருந்த அன்புக்கும், பக்திக்கும், கடமை உணர்ச்சிக்கும் நான் அவளுக்குச் செய்த பிரதி உபகாரம் அவளை அடித்து விரட்டிக் கொலை செய்ததுதான்!"

நான் திகைப்படைந்து அவனையே பார்த்துக்கொண்டு நின்றேன். அவன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டபடியே மறுபடியும் பேசலானான்.

"இப்படிச் சிலைகளைச் செய்து குவித்துக் கொண்டிருக்கத்தான் எனக்குத் தெரிந்தது. இந்த உலகத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. குடும்பத்தையும் பொறுப்பையும் உணர்ந்து கொள்ளவில்லை. வரட்டு மதிப்பில் காதல், அன்பு, கடமை—இவைகளை மறந்து விட்டேன். அவள் இருந்தபோது ஒருவேளையாவது நான் ஆகாரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அது எங்கிருந்தோ எனக்குக் கிடைக்கும். இந்தச் சிலையை எனக்குத் தெரியாமல் உங்களிடம் கொண்டு வந்து அவள் விற்று விட்டதற்காகக் கோபம் கொண்டு அடித்து வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டேன். இப்படி எவ்வளவோ தடவை நான் அவளை அடித்திருக்கிறேன். ஆனால் அன்று என்னுடைய கோபம் அதிகமாகி என்னை மிருகத்திலும் கேவலமாக்கி விட்டது. அன்று அவளால் அதைப்

ணெதிரில் கொண்டு வந்து காட்டியது. அவன் என்னை அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அவன் இரண்டு கைகளிலும் இரண்டு சிலைகளை ஏந்திக்கொண்டு திசை தெரியாத ஏதோ ஒரு உலகிற்கு வந்து விட்டவன்போல் நான்கு புறமும் மிரள மிரள விழித்துக் கொண்டு நின்றான்.

"அப்படி உட்காரு!" என்று சொல்லி அவனுக்கு ஒரு ஆசனத்தைக் காட்டினேன். "இல்லை; நான் உட்காரவில்லை. உங்களுக்குப் பொம்மை வேண்டுமா, வேண்டாமா?" என்றான் கண்டிப்பான குரலில்.

"வேண்டுமப்பா, வேண்டும். அந்தப் பொம்மைகள் என்ன விலை?" என்றேன்.

"இதை இப்படியே ஜோடியாய் வாங்கிக் கொள்கிற தென்றால் ஒன்றரை ரூபாய்; தனியாக ஒன்று மாத்திரம் வேண்டுமென்றால் ஒரு ரூபாய்......!"

"சரிதான், ரொம்ப மலிவாக இருக்கிறதே! ஒன்று ஐம்பது, அறுபது ரூபாயாவது விலை சொல்லுவாய் என்று நினைத்தேன்" என்றேன் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே.

"இதற்கெல்லாம் ஐம்பது, அறுபது கொடுக்க இந்த உலகத்திலே புண்ணியவான்கள் இல்லை" என்றான் அலுத்துக் கொண்டே.

"இந்த உலகத்தில் இருக்க வேண்டாம். வேறு உலகத்திலிருந்து யாராவது வர மாட்டார்களா? கொஞ்சம் காத்திருந்தால் வருவார்கள். அதற்குள் அவசரப் பட்டுக் கொண்டு இந்தக் கலைச் செல்வங்களை மதிப்புக்குறைவாக ஏன் விற்க வேண்டும்?" என்றேன்.

"வேறு உலகத்திலிருந்து ஒருவர் வருவார் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. அப்படியே இருந்தாலும் அதுவரையில் பசிக் கொடுமை தாங்காதே! ஏன் வீண் பேச்சு? உங்களுக்கு இந்தச் சிலைகள் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் என்னை விடுங்கள்!" என்றான்.

"சரி, இவைகளை நான் நீ சொல்லிய விலைக்கே எடுத்துக் கொள்கிறேன். அதோ! அந்த மேஜைமீது கொண்டு போய் வை!" என்று சொல்லி, மேஜையைச் சுட்டிக் காட்டினேன். மேஜைமீது வைத்திருந்த கண்ணனின் சிலையைக் கண்டதும் அவன் நெருப்பை மிதித்தவன் போல், "ஹா!" என்று கதறியபடியே துள்ளிக் குதித்து நின்றான். அவன் தேகம் நடுங்கியது. அவன் கைகள் 'வெடவெட' வென்று நடுங்கியதில் அவன் கைகளில் வைத்திருந்த இரண்டு சிலைகளும் நழுவிக்



கீழே விழுந்து விடும் போலிருந்தன. நான் எழுந்து அவனுக்குச் சமீபமாகப் போய் அவன் கைகளிலிருந்த சிலைகளை வாங்கி மேஜைமீது வைத்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் நடுங்கும் கரங்களைக் குவித்தான். அவன் விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவன் விம்மும் குரலில், "இந்தச் சிலையை அவள்தானே கொண்டு வந்து உங்களிடம் விற்றாள்?" என்றான்.

"ஆம், அவள் உன் மனைவிதானே? அவள் பெயர்...?"

"சாந்தி! ஆமாம், இதற்கு நீங்கள் முப்பது ரூபாய் கொடுத்தீர்களல்லவா?"

"ஏன், முப்பது ரூபாய் இந்தச் சிலைக்கு மிகவும் குறைந்த விலை இல்லையா?" என்றேன்.

"குறைவான விலையா! இல்லை. இப்பொழுது இந்தச் சிலையை முக்கால் ரூபாய்க்குக் கூட யாரும் வாங்க மாட்டேன் என்கிறார்கள். அவளால்தான் இதை முப்பது ரூபாய்க்கு விற்க முடிந்தது. அதற்காக நான் அவளை அடித்துக் கொன்று......"

அவன் நெஞ்சிலிருந்து மேலும் வார்த்தைகள் எழும்பவில்லை. முகம் சிவக்க விம்மினான்.

நான் அவன் வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"என்ன, அவளை அடித்துத் துரத்திக் கொன்று......?"

"ஆமாம், அடித்தேன்; துரத்தினேன்; கடைசியில், கொன்றும் விட்டேன்! எல்லாம் கண் மூடித்தனமான என் கர்வத்தினால் வந்த வினை. என் கலைக்கும் கைத்திறனுக்கும் அளவு மிஞ்சிய மதிப்பு இருப்பதாக நானே எண்ணி அகங்காரம் கொண்டதினால் உலகைச் சரிவர உணர முடியாத குருடனாகி விட்டேன். பெண்

சாண் வயிறு

கி. ரா. கோபாலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அந்தப் பெண்ணுடன் அதற்குமேல் விவாதிப்பது எனக்குச் சங்கடமாகப் பட்டது. அவளை வெறுங்கையுடன் அனுப்புவதைவிட அந்தச் சிலையை வாங்கிக்கொண்டு ஏதேனும் பணம் கொடுத்து அனுப்புவதுதான் எனக்குச் சரியானதாகப் பட்டது. இதனால் ஏதேனும் தகராறு ஏற்படுவதாயினும் சமாளித்துக் கொள்ளலாம் என்று எனக்குத் தைரியம் ஏற்பட்டது. திண்ணையிலிருந்த அந்தச் சிலையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, "இதற்கு என்ன வேண்டும்?" என்று கேட்டேன்.

"நியாயமாக உங்கள் மனதிற்குப் பட்டதைக் கொடுங்கள்" என்றாள். அந்தச் சிலையின் விலையைச் சரியானபடி மதிப்பிடுவது எனக்குச் சிறிது கடினமாகத்தானிருந்தது. என் சக்திக்கு மீறியதாக இருந்தாலும் முப்பது ரூபாய் கொடுக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டு, மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன். பணத்தைக் கையில் வாங்கியதும் அவள் கண்கள் மகிழ்ச்சியினால் அகல விரிந்தன. அவள் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. இதைக் கண்டதும் எனக்கும் ஒரு ஆத்ம திருப்தி ஏற்பட்டது. அவள் நன்றி உணர்ச்சியுடன் "நமஸ்காரம்" என்று சொல்லி, என்னிடம் விடைபெற்றுக் கொண்டாள். அவள் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாதது எனக்கு ஒரு குறையாகப் பட்டது. "உன் பெயர் என்ன அம்மா?" என்றேன்.



"என் பெயரா? சாந்தி!" என்று அவள் சொல்லிவிட்டுப் போனாள். பொருத்தமான பெயர்தான்! ஹிம்சைக்கிடையேதானே சாந்தி ஒளி வீசமுடியும்?

* * *

நாட்களல்ல, மாதங்களல்ல; முழுசாக மூன்று வருடங்கள் ஓடி விட்டன. நானும் ஒவ்வொரு பேட்டையாகக் குடித்தனத்தை மாற்றி, நகரின் தெற்கெல்லையிலிருந்து வடக்கெல்லைக்குக் கடைசியாக வந்து சேர்ந்தேன்.

ஒரு நாள் வீட்டு வாசற்பக்கத்து அறை ஒன்றில் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். வாசற்படிக்கு வெளியே இருந்து "ஐயா!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. "யாரது?" என்றேன் புத்தகத்திலிருந்த என் கவனத்தைத் திருப்பி. ஓர் உருவம் மெதுவாக வாசற்படிக்கு உட்புறம் தலையை நீட்டியது. முதலில் அந்த உருவத்தை நான் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. "யாரது? என்ன வேண்டும்?" என்றேன்.

"பொம்மை வேணுங்களா?" என்றான், அவன் பிச்சை கேட்பது போன்ற தாழ்மையான குரலில்.

அந்தக் குரலை இதற்கு முன் எங்கோ கேட்டது போலிருந்தது. உற்று நோக்கினேன். திடுக்கிட்டேன். அந்த வாலிபச் சிற்பி மாதவனேதான் அவன்!

"இப்படி உள்ளே வா!" என்றேன் நெஞ்சில் எழுந்த பதட்டத்தை அடக்கிக் கொண்டு அவன் உள்ளே வந்தான். இரண்டு கைகளிலும் இரண்டு சிறிய சிலைகள் இருந்தன. ஒன்று புத்தரின் சிலை; மற்றொன்று விவேகானந்தரின் உருவம். அவன் முகத்தை உற்று நோக்கினேன். நான் முன்பு பார்த்த மாதவன் இல்லை அவன்; அவன் உருவமே முற்றிலும் மாறியிருந்தது. அந்த வாலிப வயதில் அவன் உடல் வாடி முதுமை அடைந்தது போலிருந்தது. அழுக்கேறிய கந்தல் உடையும், பஞ்சடைந்து சோகம் நிறைந்த கண்களும் ஒரு வாலிபச் சோம்பேறிப் பிச்சைக்காரனைத்தான் என் கண்

"ஓ, பார்த்தேன்! அது என்ன பிரமாதம்? அதுவும் நம்ம எருமை மாடும் ஒண்ணு. 'எலெக்டிரிக் டிரெயின்' இருக்கு. அடேயப்பா, என்ன வேகம்னு நினைக்கிறே?—மொட்டையாக இருக்கு. இஞ்சின் கிடையாது. கரிப்புகை வருவதும் கிடையாது. 'ஞ்'—ன்னு சத்தம் போட்டுக் கொண்டு புறப்பட ஆரம்பிச்சா அடுத்த நிமிஷம் ஒரு மைல் தூரம் போய் விடும். மனுஷன் மூளையே மூளை!"

"இன்னும் என்னென்ன பார்த்தாய், சொல்லேன்!"

"எத்தனையோ அதிசயங்களையெல்லாம் பார்த்தேன். ஆனால் ஒன்னே ஒண்ணுதான் மனசுலே நிக்குது."

"என்ன அது?"

"அங்கே 'கிடங்குத் தெரு'ன்னு ஒரு தெரு இருக்கு. நாங்க சரக்குக் கொண்டு போன கடைக்கு அந்தத் தெரு வழியாகத்தான் போகணும். மெதுவாக வண்டியை இழுத்துக்கொண்டு போனேன். அங்கே வியாபாரம் ரொம்ப ஜாஸ்தியாய் நடக்குமாம். பெரிய பெரிய கடைகள் அங்கே இருக்கு. வண்டிகள் ஓயாமல் எப்போதும் போவதும் வருவதுமாக இருக்கும். இரண்டு பக்கங்களிலும் உள்ள கடைகளைப் பார்த்துக் கொண்டே போனேன். எதிர்த்தாற்போல ஒரு வண்டி வந்தது. அதில் ஒரு ஆள் உயரம்வரை ஏதோ மூட்டைகள்—ஜவுளிச் சிப்பங்கள் போலிருக்கு—ஏத்தப்பட்டு இருந்தது. அவ்வளவு பாரத்தையும் எந்த மாடு இழுத்துக்குனு வருதோன்னு பார்த்தேன். என்ன அதிசயம்! யார் இழுத்துக்குனு வந்ததுன்னு நினைக்கிறே, தம்பி! ஒரு மனுஷன்! ஆமாம் மனுஷன்!"

"ஆள் ரொம்ப வாட்ட சாட்டமாக இருந்தானோ?"

"அதுதான் கிடையாது. நான் அவனை உத்துப் பார்த்தேன். அவன் ஒரு கிழவன். வயசு அறுபது அறுபத்தஞ்சு இருக்கும். நெஞ்சு எலும்புகளை விரல் விட்டு எண்ணி விடலாம் போலிருந்தது. பெருமூச்சு விட்டுக்கொண்டே ஒவ்வொரு அடியையும் எடுத்து வச்சான். உடம்பெல்லாம் வியர்வை வழிந்தோடிச்சு. தலையில் ஒரு துணியை முண்டாசாகக் கட்டியிருந்தான். இடுப்பில் வேஷ்டின்னு சொல்லத்தக்க ஒரு சின்னம் இருந்தது. மலைபோல சுமை கொண்ட அந்த வண்டியை இழுக்க முடியாமல் அவன் இழுத்துக்குனு வந்தான். தம்பி, நான் அதிசயத்துடன் அவனையே உத்துப் பார்த்துக் கொண்டு இருந்தேன். அது ஒரு மேடு. அந்த மேட்டைக் கடந்து விட்டால் அப்புறம் இழுப்பது கஷ்டம் அல்ல. வண்டி மேட்டைக் கடந்து கீழே இறங்கிச்சு. அப்போது அதன் வேகம் அதிகமாச்சு. கிழவனால் அந்த வேகத்தைச் சமாளிக்க முடியவில்லை. அவன் கை நழுவிச்சு. குப்புற விழுந்தான் அவன். வண்டி அவன் கால்மீது ஏறிக் கவுந்து விட்டது. ஜவுளிச் சிப்பங்களெல்லாம் கீழே விழுந்து உருண்டது.—"

"அடாடா, கேக்கறத்துக்கே கஷ்டமாயிருக்கே!"

"அப்புறம் கேள்! ஒரு கால் மணி நேரம் கழிஞ்சிருக்கும். அந்தக் கிழவன் வேலை செய்யும் கடை முதலாளிக்கு இந்தச் செய்தி எட்டிச்சு. அவர் - அலறி அடிச்சுக்குனு வேகமா ஓடி வந்தார். எதுக்கு? கிழவன் விழுந்து விட்டானே என்பதற்காகவா? இல்லை. வண்டி கவுந்து விட்டதே என்பதற்காகத்தான். அவருக்குக் கிழவன்மேல் மட்டுக்கு மிஞ்சின கோபம் வந்தது. ஆனால் என்ன செய்வது? அவன் கீழே அல்லவா கிடக்கிறான்? ஆகையால் கோபத்தை அடக்கிக் கொண்டு, 'கிழட்டுப் பயல்! அப்போதே நான் வேலை கொடுக்க முடியாதுன்னு சொன்னேன். ஆனால், என்னை விட்டால்தானே? கடைசியில் இப்படிச் செய்துவிட்டான்' அப்படீன்னார். பிறகு வேறொரு கூலிக்காரனைக் கூப்பிட்டு, அந்தச் சிப்பங்களையெல்லாம் ஏத்திவிட்டு, அவரும் போய் விட்டார்; வண்டியும் போய் விட்டது. கிழவன் மாத்திரம் அங்கேயே கிடந்தான் முக்கி முனகிக் கொண்டு—"

"அப்புறம்?"

"அதற்குமேல் அங்கே நிற்க எனக்குப் பிடிக்கவில்லை; என்னை ஓட்டிக்கொண்டு வந்த வண்டிக்கார சுப்பனுக்கும் பிடிக்கவில்லை. அவன் என் முதுகைத் தட்டினான். நானும் புறப்பட்டு விட்டேன்."

"என்ன கன்ராவி! என்ன அநியாயம்!"

"தம்பீ, நம்முடைய நிலைமையைக் கண்டு வருத்தப்பட்டுப் பேசறதுக்காவது 'ஜீவகாருண்ய சங்கம்'னு ஏதோ ஒண்ணு இருக்கு. ஆனால், மனுஷனுடைய நிலைமையைக் கண்டு வருத்தப் படுவதற்கு யார் இருக்கா, தம்பி?"

"வாஸ்தவம்தான் அண்ணே! மனுஷன் இப்படி அநாதையாகப் போய்விட்டானே என்பதை நினைச்சுப் பார்த்தால் மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கு."

"அதோ அங்கே என்ன சத்தம்?"

"வண்டிக்கார சுப்பன் வருகிறான் போல இருக்கு. நிறுத்திக் கொள். பாக்கியை அப்புறம் பேசிக் கொள்வோம்."



தேகம்? ஏற்படுத்த வேண்டியது தான்' அப்பிடீன்னாங்க ஜனங்கள். அப்போது அவர் முகத்தைப் பார்க்கணுமே! — எவ்வளவு சந்தோஷம் உண்டாச்சு அவருக்கு!"

"மகாராஜன்! ரொம்ப நாளைக்கு நன்றாக இருக்கணும்."

"கூட்டம் அத்தோடு முடிந்தது. அன்று முதல் இதுவரை எனக்கு ஒரு அடி-உதைகூடக் கிடையாது. அண்ணே, நமக்கு நல்ல காலம் வந்து விட்டதுபோலத் தோணுது."

"எனக்கும் அப்படித்தான் தோணுது, தம்பீ!"

"நீ ஊரில் இல்லாத போது நடந்த விசேஷம் இதுதான், அண்ணே!"

"இவ்வளவு முக்கியமான விஷயத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே நான்!"

"அதனால் என்ன? — இன்னொரு முறை கூட்டம் கூடாமல் போகிறதா? சுவாமி அன்பானந்தா பேசாமலிருக்கப் போகிறாரா? — அது இருக்கட்டும் — அண்ணே, நீ பட்டணத்துக்குப் போய்விட்டு வந்தாயே, அங்கே என்னென்ன அதிசயம் கண்டாய்? அதைச் சொல்லு!"

"பட்டணத்திலே அதிசயத்துக்குக் குறைவா தம்பீ? — அடேயப்பா! எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரே அதிசயம்தான்."

"அதைத்தான் கொஞ்சம் சொல்லேன்!"

"எதைச் சொல்வது தம்பீ? ஒன்றா இரண்டா? அது ஒரு புது உலகம்! மனுஷன் என்னென்ன காரியங்களைச் சாதிச்சிருக்கான்னு நினைக்கிறே? அம்மம்மா! — அவனால் முடியாதது ஒண்ணுமே இல்லேன்னு சொல்லி விடலாம்."

"ஹைகோர்ட்டுக் கட்டிடம், சென்ட்ரல் ஸ்டேஷன் — இதையெல்லாம் பார்த்தாயா?"

"ஓ, பார்த்தேன். அது மாத்திரமா? இன்னும் எவ்வளவோ பெரிய பெரிய கட்டிடங்களையெல்லாம் பார்த்தேன். அண்ணாந்து பார்த்தால் கழுத்தை வலிக்கக் கூடிய அவ்வளவு பெரிய கட்டிடங்கள்! — ஒவ்வொண்ணும் ஒவ்வொரு மாதிரி!"

"'டிராம் வண்டி'ன்னு ஒண்ணு இருக்காமே, அதைப் பார்த்தியா?"

"எவ்வளவு உத்தமமான குணம்! — அப்புறம் தம்பி?"

"சுவாமி அன்பானந்தா பேசுவதைக் கேட்டேன். விளக்கு வெளிச்சத்திலே அவரைப் பார்க்கும்போது ஏதோ ஒரு தெய்வமே மனுஷ உருவமெடுத்து வந்து பேசுவது போல இருந்தது. நீண்ட தாடி அவருடைய முகத்துக்கு ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. தலைமயிர் அடர்த்தியாக வளர்ந்து தோள்ப் பட்டையில் படிந்திருந்தது. கொஞ்ச நேரம் அவரைப் பார்த்தபடியே இருந்தேன்."

"என்ன பேசினார்? அதைச் சொல்லு, தம்பி!"

"அவசரப்படாதே! நமக்காக உழைக்க முன் வந்திருக்கும் அந்த மகானைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? மனுஷனைப் போல நன்றி கெட்டவர்களாகவா நாம் இருப்பது?"

"சொல்லு! சொல்லு!"

"கொஞ்ச நேரம் அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேனா?—அப்புறம் அவர் பேச்சைக் கேட்டேன். வாயில்லாத ஜீவன்களுக்கு மனுஷங்க செய்யிற அநியாயங்களை யெல்லாம் அவர் எடுத்துச் சொல்லிக் கொண்டே போனார். ஒவ்வொரு வார்த்தையிலும் எவ்வளவு வேதனை, எவ்வளவு வருத்தம் கலந்திருந்ததுன்னு நினைக்கிறே?"

"அடடா, அவ்வளவு அருமையான பேச்சைக் கேட்கக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கல்லையே!"

"அவர் பேசியதை யெல்லாம் அப்படியே உனக்குச் சொல்லணும்னு எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு. ஆனால் இப்போது நினைக்கப் பார்த்தால் ஞாபகமே இல்லை. ஒன்னே ஒன்னு மாத்திரம் மனசிலே அப்படியே நிக்குது. அண்ணே!"

"என்ன அது?"


"'சாகும் வரை மாட்டை வண்டியில் பூட்டி அதை வேலை வாங்குகிறோம். கிழப் பருவத்தை அடைந்துவிட்டது என்பதற்காக அதன் மீது நாம் துளியாவது இரக்கம் காட்டுகிறோமா? அல்லது அதன் மீது ஏற்றும் பாரத்தைத் தான் குறைக்கிறோமா?—இது அநியாயம் இல்லையா?—நாளை ஆண்டவன் இதைப் பற்றி விசாரிக்கும் போது நமக்குச் சரியான தண்டனை கொடுப்பார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்'-அப்படீன்னார்."

"ஆஹா! ஹா! எவ்வளவு அற்புதமாக இருக்கு!"

"கூட்டத்திலே ஒரு சத்தம் இருக்கணுமே!—கிடையவே கிடையாது. எல்லோரும் வாயைப் பிளந்தது பிளந்தபடி கேட்டுக்கொண்டே இருந்தாங்க. கண்ணீர் விட்டு அவங்க அழாதது தான் பாக்கி! ...கல்லையும் விடக் கடினமான மனுஷன் மனசைக் கூட சுவாமி அன்பானந்தா மாற்றிவிட்டார்—"

"ஒரு மகாபுருஷன் போலிருக்கு."

"ஒரு மணி நேரம் வரை பேசி, எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்ட பிறகு அவர் கூட்டத்தைப் பார்த்து, 'மகாஜனங்களே, இந்த ஊரில் ஜீவகாருண்ய சங்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியந்தானே?' அப்படீன்னு கேட்டார். 'ஆஹா, அதற்கென்ன சங்



அறுவை மனிதன்

சபரி

"அண்ணே!"

"என்ன தம்பி?"

"நல்ல தூக்கம் போலிருக்கு!"

"ஆமாம், நூறு மைல் பிரயாணம் இல்லையா? கால் கடுத்துப் போச்சு. உடம்பெல்லாம் ஒரே வலி. வந்து படுத்தவன் தான். இப்போதுதான் எழுந்திருச்சேன்—அதுவும் உன் சத்தத்தைக் கேட்டு."

"கொண்டுபோன சரக்கெல்லாம் வித்தாச்சா?"

"அது என்னமோ எனக்குத் தெரியாது. இறக்கவேண்டிய இடத்தில் இறக்கியாச்சு — அவ்வளவுதான் — கொட்டாவி வருது. நீ தூங்கலையா?"

"விடியப்போறதே, இன்னும் என்ன தூக்கம்?"

"ஓ, அவ்வளவு நேரமாச்சா?"

"ஆமாம்."

"தம்பி, ஒரு வாரமாக நான் ஊரில் இல்லையே, ஏதாவது விசேஷம் உண்டா?"

"இருக்கு!"

"என்ன?"

"நான்கைந்து நாளாக எனக்கும் தம்பிக்கும் ஒரு அடி, உதைகூடக் கிடையாது!"

"நிஜமாகவா?"

"ஆமாம்—நீ நம்பவே மாட்டே!"

"அதிசயமா இருக்கே! — காரணம் என்ன?"

"நம்ப ஊரிலே இப்போ புதிசா ஜீவ காருண்ய சங்கம்னு ஒரு சங்கம் ஆரம்பிச்சிருக்காங்களே, உனக்குத் தெரியாதா?"

"தெரியாதே! — ஆரம்பிக்கப் போறதாகச் சொல்லிக்கொண்டு இருந்தாங்க. ஆரம்பிச்சாச்சா?— பேஷ்!—ஹ்ஹ்ம்!"

"ஆரம்பிச்சு ஒரு பொதுக்கூட்டம் கூடப் போட்டுவிட்டாங்க."

"அடடே!—ஹ்ஹ்ம்......யார் இதற்கெல்லாம் முன்னால் நின்று வேலை செய்வது?"

"தெற்கே யிருந்து யாரோ ஒரு சாமியார் வந்திருக்கிறார். அவர் பேர் அன்பானந்தாவாம். ஊருக்கும் போய் ஜீவ காருண்ய சங்கம் ஏற்படுத்துவதுதான் அவர் வேலையாம்—அடாடா, அன்றைக்கு அவர் எவ்வளவு அருமையாகப் பேசினார்னு நினைக்கிறே!......"

"நீ அவர் பேச்சைக் கேட்டியா?"

"ஆமாம், — அந்தக் கூட்டத்துக்கே நான் போயிருந்தேனே!"

"சபாஷ்! — அப்படியா?— தம்பி, எங்கே, அதெல்லாம் கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்!"

"நீ பட்டணத்துக்குப் போய் இரண்டு மூன்று நாளைக்குப் பிறகுதான் அது ஆரம்பமாச்சு. எப்படியாவது அந்தப் பக்கம் போய் அந்தக் கூட்டத்தைப் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையாக இருந்தது. எப்படிப் போவதுன்னு யோசித்தேன். நல்ல வேளையாக என் கழுத்தில் கட்டியிருந்த கயிறு இரண்டொரு இடங்களில் நைந்திருந்தது. நாலைந்து தடவை கழுத்தை பலமாக இப்படியும் அப்படியுமாகக் குலுக்கினேன். கயிறு படீரென்று அறுந்துபோச்சு. அவ்வளவுதான். பிடிச்சேன் ஓட்டம்!"

"அந்தச் சங்கத்தை எங்கே ஏற்படுத்தியிருக்காங்க?"

"குதிரை வண்டி குப்புசாமி தெருவில் ஒரு பெரிய மாடிவீடு இல்லே?—அங்கேதான்."

"முருகப் படையாச்சி வீடா?"

"ஆமாம்!"

"எதிர்த்தாற்போல ஒரு பெரிய மைதானம்கூட இருக்குமே?"

"ஆமாம் — அங்கேதான் கூட்டம் நடந்தது."

"எத்தனை மணிக்கு?"

"கிட்டத்தட்ட இரவு மணி ஏழு இருக்கும். கூட்டம் பெரிய கூட்டம். பெட்ரோமாக்ஸ் விளக்கு கம்பத்திலே கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது. கொஞ்ச தூரத்துக்கு அப்பால் நின்னு பார்த்தேன். சுவாமி அன்பானந்தாதான் பேசிக்கொண்டிருந்தார். ஆள் எப்படி இருந்தார்னு நினைக்கிறே? அடாடா! அந்த முகத்தில்தான் என்ன சாந்தம்! எவ்வளவு அமைதி! பார்த்தவுடனேயே பய பக்தியுடன் கும்பிடணும் போலத் தோணுச்சு."

"என்ன வயசு இருக்கும் அவருக்கு?"

"நாற்பத்தஞ்சு வயசுக்குக் குறையாது. பெரிய பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவராம். கலியாணமே செய்துக்கலையாம். ஜீவகாருண்யப் பிரசாரம் செய்வதற்காகக் கொஞ்ச வயசிலேயே சன்னியாசியாகப் புறப்பட்டு விட்டாராம்."

கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறேன், என்னைத் தடுக்காதே! என்னைத் தடுக்காதே! புரிந்ததா?" என்றான்.

சுவேதாங்கனுடைய கண்களில் நீர் முட்டியது. அவன் பீஜகுப்தனுக்கெதிரே தன் இரு கைகளையும் கூப்பி, "ஸ்வாமி! என்னை மன்னிக்க வேண்டும். நான் அறியாமற் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். நான் எனக்குள்ள அதிகாரத்தையும் உரிமையையும் மீறி அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொள்ள முற்பட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். ஸ்வாமி! தங்கள் இதயம் மிகவும் விசாலமானது; கருணை நிறைந்தது. சகல விதத்திலும் தனிச் சிறப்பு வாய்ந்த தாங்கள் என்னைக் கட்டாயம் மன்னித்தருளத்தான் வேண்டும்" என்று சொல்லியவாறே தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான்.

"சுவேதாங்கா! உன் பேச்சைக் கேட்டால் எனக்குப் பித்தம் தலைக்கேறிவிடும் போலிருக்கிறது. போ! என்னைப் பித்தனாக்கி விடாதே! போ! போய்விடு! இங்கிருந்து உடனே போய்விடு! நான் உன் காலடிகளில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் முன் நில்லாதே! போய்விடு! உடனே போய்விடு!" என்று பீஜகுப்தன் உரக்கக் கூச்சலிட்டான்.

சுவேதாங்கன் அங்கிருந்து மெதுவாக வெளியேறி விட்டான்.

"அட விதியே!" என்று சொல்லி ஓங்கித் தன் இரு கைகளாலும் பீஜகுப்தன் தன் தலையில் அடித்துக் கொண்டான். அதற்குப் பிறகு அவன் தனக்குத்தானே மனதுக்குள்ளாக, "முடியாது! சுவேதாங்கா! முடியாது! முடியவே முடியாது! நான் கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறேன். கட்டாயம் கல்யாணம் செய்து கொள்ளத் தான் போகிறேன். இன்ப வாழ்வு வாழ எனக்கு மட்டும் உரிமை கிடையாதா?" என்று முணுமுணுத்தான்.

அடுத்த கணமே பீஜகுப்தன் எழுந்து நின்றான். "இப்பொழுதே நான் புறப்பட்டுப் போகிறேன். பீஜகுப்தனுடைய சொல்லுக்கு மாறு சொல் சொல்ல யாருக்குத் தான் துணிவு உண்டாகும்? என் முடிவுக்கு இடையூறாக நிற்க இந்த உலகத்தில் ஆளே கிடையாது. நான் யசோதரனையே மணந்து கொள்ளுவது என்று முடிவாகத் தீர்மானித்து விட்டேன். நான் தீர்மானித்தது தீர்மானித்ததுதான். இனி என் தீர்மானத்தை அசைக்க யாராலும் ஆகாது. முடியாது என்றால் முடியாததுதான்!" என்று தனக்குத் தானே ஏதேதோ பேசிக் கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் காவலாளனைக் கூப்பிட்டு ரதத்தைப் பூட்டிக் கொண்டுவந்து வாசலில் நிறுத்துமாறு உத்தரவிட்டான்.

(தொடரும்)

கைத் தவறு!



ஆயிரம் தேள்கள் ஊசி குத்தக் கூட இடம் இல்லாமல் உடல் முழுவதும் கொட்டி விட்டது போல அவன் துடியாய்த் துடித்தான். சில விநாடிகள் அவன் தன் நினைவு இழந்து கல்லாய்ச் சமைந்த கண்களுடன் சுவே தாங்கனையே பார்த்தவாறு நின்றான். அவனுக்கு தன் புத்தியே பேதலித்துப் போய் விட்டது போலத் தோன்றியது. ஆகவே அவனுக்குத் தன்னைச் சமாளித்துக் கொள்ளச் சிறிது நேரம் பிடித்தது.

"என்ன சொன்னாய்? யசோதராவைப் பாணிக்கிரஹணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தானே? அதற்கு என் உதவி எதற்காக வேண்டும்?" என்றான் பீஜகுப்தன்.

"எஜமானரே இவ்விஷயத்தை மிருத்யுஞ்ஜயரிடத்தில் பிரஸ்தாபித்தால் நலமாயிருக்கும்!" என்றான் சுவேதாங்கன்.



"சுவேதாங்கா! யசோதராவை மணந்து கொள்ளுமாறு மிருத்யுஞ்ஜயர் என்னைக் கேட்டுக் கொண்டார் என்ற விஷயம் உனக்குத் தெரியாததல்ல. ஆனால் அச்சமயம் சித்திரலேகாவின் காரணமாக அவருடைய வேண்டுகோளை நான் நிராகரித்து விட்டேன் என்பதையும் நீ நன்கு அறிவாய். அதற்குப் பின் சித்திரலேகா என்னை வெறுத்து உதறித் தள்ளிவிட்டு என் வாழ்க்கையைப் பாழ் படுத்தி விட்டுப் போய் விட்டாள் என்பதும் உனக்கு நன்கு தெரிந்ததே. அது மட்டும் அல்ல; இப்பொழுது சிறிது காலமாக யசோதரா என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அதிலே இடமும் பெறத் தொடங்கியிருக்கிறாள் என்னும் விஷயமும் நான் சொல்லி உனக்குத் தெரியவேண்டியதில்லை" என்றான் பீஜகுப்தன்.

"எல்லாம் எனக்குத் தெரியும், ஸ்வாமி! இருந்தாலும் தங்கள் உள்ளத்தில் யசோதராவை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழும் என்று நான் கனவிலும் கருதவில்லை" என்றான் சுவேதாங்கன்.

"சுவேதாங்கா, முடியாது! நீ சொல்லும் காரியத்தைச் செய்ய என்னால் இயலாது. ஏனென்றால் நான் யசோதராவை மனமாரக் காதலிக்கிறேன். அவளை என் உள்ளக் கோயிலிலிருந்து அகற்றுவது இனி சிரம சாத்தியமான காரியம். நேற்றிரவு தான் நான் யசோதராவையே மணந்து கொள்ளுவது என்று முடிவு செய்தேன். என்னால் இனி என் முடிவை மாற்றிக் கொள்ள முடியவே முடியாது" என்றான். அதைச் சொல்லும் பொழுது அவனுடைய தொண்டை கரகரத்தது. அவனுடைய முகம் வருத்தத்தினால் வாட்டமுற்றது. பேச்சில் காம்பீர்யத்தை வரவழைத்துக் கொள்ள முயற்சித்ததன் காரணமாக அவனுடைய குரல் கனத்தது. "சுவேதாங்கா! நீ என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? நான் பட்ட இவ்வளவு கஷ்டம் போதாதா? துன்பம் போதாதா? துயரம் போதாதா? வேதனை போதாதா? குழப்பம் போதாதா? இன்னுமா நான் இவற்றை யெல்லாம் அநுபவிக்க வேண்டும்? நான் என் வாழ்க்கை முழுவதையும் வீணாக்கிக் கொண்டு விடவேண்டும், பாழ்படுத்திக் கொண்டு விடவேண்டும் என்று நீ விரும்புகிறாயா? வேண்டாம், சுவேதாங்கா! இனி நான் படமுடியாது. பட்ட துயரம் 'போதும், போதும்' என்றாகி விட்டது. நான் யசோதராவைக் கட்டாயம்

கேட்ட மாத்திரத்திலே அவன் காட்டிய அலட்சிய மனோபாவத்தில், தான் கனவிலும் காண முயற்சிக்காத ஒரு உண்மை ஒளிர்வதைச் சுவேதாங்கன் முதன் முதலாகக் கண்ணுற்றான். அதைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்து விட்டதால் அவனுக்கும் அன்றிரவு முழுதும் தூக்கம் வரவில்லை. அன்றைய இரவை அவனும் கண் மூடாமலேயே கழித்து விட்டான்.

பொழுது புலர்ந்தது. மகிழ்ச்சி ததும்பும் மலர்ந்த முகத்துடன் பீஜகுப்தன் எழுந்தான். யசோதராவை மணந்து கொள்வது பற்றி மிருத்யுஞ்ஜயரிடம் சென்று பேசுவது என்று அவன் தீர்மானமாக முடிவு செய்து விட்டான். அவன் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தான். அவனுக்கே இயல்பான இளநகை வெகு நாட்கள் கழித்து அன்று தான் அவனுடைய முகத்தில் தாண்டவமாடியது. நித்ய கர்மாக்களை முடித்துக் கொண்டு அவன் சிற்றுண்டி அருந்த உட்கார்ந்தான். அப்பொழுது அங்கே சுவேதாங்கனைக் காணோம். உடனே அவன் பணிப் பெண்ணைக் கூப்பிட்டுச் சுவேதாங்கனை அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.



சிறிது நேரத்துக் கெல்லாம் சுவேதாங்கன் அவனருகில் வந்தான். அவனுடைய முகம் களையிழந்து வெளுத்துப் போயிருந்தது. சுவேதாங்கன் ஏதோ ஆழ்ந்த கவலையில் உழன்று கொண்டிருக்கிறான் என்பதை அவனுடைய முகத் தோற்றமே தெளிவாக எடுத்து காட்டியது. பீஜகுப்தன் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு மிகவும் அன்பு தோய்ந்த குரலில், "ஏன், சுவேதாங்கா! உனக்கு உடல் நிலை சரியாக இல்லையா, என்ன?" என்று கேட்டான்.

சுவேதாங்கன் தலை குனிந்தவாறே, "ஸ்வாமி! உடல் நிலை எப்பொழுதும் போலச் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் மன நிலைதான் சரியாக இல்லை" என்றான்.

"ஏன் அப்படி? ஏதாவது விசேஷமுண்டோ?" என்றுகேட்டான் பீஜகுப்தன்.

சுவேதாங்கன் சிறிது நேரம் வரை மௌனம் சாதித்தான். அதற்குப் பின் அவன் தன் தலையை இலேசாக நிமிர்த்தி, "ஸ்வாமி! தாங்கள் என் மீது அத்யந்த அன்பு வைத்திருப்பதோடு மட்டும் அல்ல; அபாரக் கருணையும் காட்டி வருகிறீர்கள். தாங்கள் தான் என் நலனுக்கான காரியத்தைக் கவனித்துச் செய்ய முடியும்" என்று மெதுவாகப் பீடிகை போட்டான்.

அதைக் கேட்ட பீஜகுப்தன் இலேசாக இளநகை புரிந்து, "சுவேதாங்கா! நான் உன்னை என்கூடப் பிறந்த சகோதரனுக்குச் சமமாகப் பாவிக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. எப்பொழுதுமே நான் என்னால் இயன்றதை உனக்காகச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

"ஸ்வாமி! தங்கள் சுபாவத்தை நான் நன்கு அறிவேன். ஆகவே தான் தங்களிடம் என் வேண்டுகோளைச் சொல்லிக் கொள்ள எனக்குத் தைரியம் உண்டாகிறது" என்றான் சுவேதாங்கன்.

"சொல், என்னால் முடிந்தால் கட்டாயம் செய்கிறேன்" என்று சொல்லி உற்சாகப் படுத்தினான் பீஜகுப்தன்.

"ஸ்வாமி! நான் மதிப்புக் குரிய மிருத்யுஞ்ஜயரின் மகள் யசோதராவைப் பாணிக் கிரஹணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று சுவேதாங்கன் மிகவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தன் மனதில் உள்ளதைப் பீஜகுப்தனிடம் சொல்லியே விட்டான்.

அதைக் கேட்டதும் பீஜகுப்தன் துணுக்குற்றான். சேர்ந்தாற் போல் ஆயிரம்

னான். ஆனால் முன்னமொரு தடவை அவன் மிருத்யுஞ்ஜயரிடம் யசோதராவை ஏற்றுக் கொள்ளத் தன்னால் முடியாது என்று சொல்லி மறுத்துவிட்டான் அல்லவா? அப்படியிருக்கையில் இப்பொழுது மிருத்யுஞ்ஜயரிடம் சென்று "யசோதராவை எனக்குத் திருமணம் செய்து வையுங்கள்" என்று எப்படிக் கேட்பது? கேட்டால்தான் நன்றாயிருக்குமா? அப்படியே அவன் போய்க் கேட்டாலும் அது அவனுக்கு மாபெரும் தோல்வியாக அல்லவா முடியும்? அவனுடைய ஆத்மா அம்மாதிரித் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை.

பீஜகுப்தன் மௌரிய சாம்ராஜ்யத்தின் அரச அவையிலே சைன்யத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினனாகப் பதவி வகித்து வந்தான். தன்னுடைய யாத்திரையை முடித்துக் கொண்டு பாடலிபுத்திர நகரத்துக்குத் திரும்பி வந்த பின்னரும் கூட, அவனுடைய மனம் அரசாங்க அலுவல்களிலே சரிவர நாட்டம் கொள்ளவில்லை.

உள்ளத்தில் உண்டாயிருந்த குழப்பத்தின் விளைவாகப் பீஜகுப்தனுக்கு அடிக்கடி ஒரு வித வெறுப்பு உணர்ச்சி ஏற்படத் தொடங்கியிருந்தது. எதைக் கண்டாலும் அவனுக்கு ஒருவித அலுப்பும் சலிப்பும் தட்டின. ஆகவே அவன் வீட்டைவிட்டு வெளிக் கிளம்புவதையே அடியோடு நிறுத்திக் கொண்டான். நகரத்தின் விசாலமான வீதிகளும், அவற்றில் குடியிருக்கும் ஜனக் கும்பலும், அதனால் ஏற்படும் கலகலப்பும் அவனுடைய உள்ளத்துக்கு மகிழ்ச்சி தருவதில்லை. தேர் திருவிழா, வேடிக்கை விளையாட்டுகள் எல்லாம் கூட அவனுக்கு வேம்பாகக் கசந்து விட்டன. எதைக் கண்டாலும் அவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. சதா சர்வ காலமும் சிரித்த முகமாயிருந்த பீஜகுப்தன் ஒரேயடியாகச் 'சிடு மூஞ்சி'யாகி விட்டான்.

போதும் போதாக் குறைக்கு அன்று சுவேதாங்கன் வேறு, கொந்த புண்ணில் கோல் இடுவது போல, அவன் முன்னிலையில் சித்திரலேகாவைப் பற்றிப் பேசி, முன்பே கொதித்துக் கொண்டிருந்த அவனுடைய உள்ளத்தில் இன்னும் அதிகமாகக் கொதிப்பேற்றி விட்டான். ஆகவே இரவு முழுவதும் எவ்வளவோ முயன்று பார்த்தும் கூடப் பீஜகுப்தனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவன் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். ஆயினும் தூக்கம் வந்தால்தானே? அவனுடைய உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் அலைமேல் அலைபோல மோதி எழுந்தன.

சித்திரலேகா சௌக்கியமாக இருக்கிறாள்; சந்தோஷமாகவும் இருக்கிறாள். ஆனால் பீஜகுப்தனோ?—ஒரேயடியாகத் துயரக்கடலில் ஆழ்ந்து கிடக்கிறான். இருவருக்கும் இடையேதான் எவ்வளவு அஜகஜாந்திரமான வேற்றுமை!—எவ்வளவு பிரமை!

பீஜகுப்தன் யோசித்தான், யோசித்தான்; அப்படி யோசித்தான். கடைசியில், "என்ன ஆனாலும் சரி! நமக்குத் தோல்வியே கிட்டினாலும் கூடப் பாதகமில்லை! யசோதராவை மணந்து கொள்ளத்தான் வேண்டும். சப்பிட்டுக் கிடக்கும் நம் வாழ்க்கையை எப்படியாவது சாரமாக்கிக்கொண்டு வாழத்தான் வேண்டும். வெறிச் சென்று கிடக்கும் நம் வாழ்க்கையைக் கலகலப்புள்ளதாக்கிக் கொள்ள ஏதாவது முயற்சி செய்துதான் ஆக வேண்டும்" என்று பீஜகுப்தன் தீர்மானித்தான்.

பீஜகுப்தனுடைய பேச்சில், அவனுடைய முகபாவத்தில், சித்திரலேகாவின் பெயரைக்





முப்பத்துநான்காம் அத்தியாயம்

கடல் குமுறிற்று!

மிருத்யுஞ்ஜயரின் மாளிகையிலிருந்து திரும்பி வந்ததும், சுவேதாங்கன் நேரே பீஜகுப்தன் இருக்கும் இடத்தை அடைந்தான். அப்பொழுது பீஜகுப்தன் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். சுவேதாங்கன் அவன் அருகில் சென்று, "ஸ்வாமி! இன்று யோகி குமாரகிரியின் சிஷ்யன் விசாலதேவனை வழியில் பார்த்தேன். சித்திரலேகா சௌக்கியமாயிருக்கிறாள் என்றும் அவளுக்கு ஒன்றும் குறைவில்லை என்றும் அவன் சொன்னான்" என்றான்.

பீஜகுப்தன் அதற்குச் செவி சாய்க்கவும் இல்லை; பதிலும் சொல்லவில்லை.

சுவேதாங்கன் மறுபடியும், "என் ஸ்வாமி! எஜமானியைப் போய் ஒரு தடவையாவது பார்த்து வரவேண்டாமா?" என்று மிகவும் பயமாகக் கேட்டான்.

"பார்த்துவிட்டு வருவதா? எதற்காக? ஒன்றும் வேண்டாம்! அந்த வீண் வேலையெல்லாம் உனக்கு எதற்கு?" என்று மிகவும் வெடிப்பாகப் பதில் சொன்னான் பீஜகுப்தன்.

சித்திரலேகாவின் பேச்சை எடுத்தாலே பீஜகுப்தனுக்குப் பிடிக்கவில்லை என்பதைக் கண்டான் சுவேதாங்கன். அவனுக்கு என்னவோ போலிருந்தது. இனம் தெரியாத வேதனை ஒன்று மண்டையில் புகுந்து குடைந்து எடுப்பது போலத் தோன்றியது. ஆகவே, அவன் அதற்கு மேல் பீஜகுப்தனுடன் ஒன்றும் பேசக் கொடுக்காமல் வெளியே சென்றுவிட்டான்.

பீஜகுப்தனுக்கு ஏற்பட்டிருந்த மனக் கிலேசம் பாடலிபுத்திரத்துக்குத் திரும்பி வந்த பிறகும் கூடக் குறைந்தபாடில்லை. அதற்கு நேர் மாறாக இன்னும் அதிகரித்து விட்டது. தலைவலி போய்த் திருகுவலி வந்த கதையாக, அவனுடைய உள்ளத்தில் இரு உணர்ச்சிகளுக்கிடையே பெரும் போர் மூண்டது. சித்திரலேகா–யசோதரா இவ்விருவருடைய உருவங்களும் அவன் மனக் கண் முன்னே தோன்றி, அவனை எவ்வழிக்கும் போக விடாமல் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டன. சித்திரலேகா தன்னை விட்டுச் சென்றதிலிருந்து பீஜகுப்தனுக்குத் தன் வாழ்க்கையே சப்பிட்டுப் போய் வெறிச் சென்றாகி விட்டதுபோலத் தோன்றியது. சப்பிட்டுப் போன தன் வாழ்க்கையை அவனால் சகிக்க முடியவில்லை. அவன் தன் சாரமற்ற வாழ்க்கையை எண்ணி எண்ணி வெந்து வெதும்பிக் கொண்டிருந்த காலத்தில், யசோதரா அவனுடைய உள்ளத்தில் குடி புகுந்தாள்; இடமும் பெற்றாள். நாட்கள் செல்லச் செல்ல, யசோதரா கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டாள். அவளிடத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்ட பீஜகுப்தன், கடைசியில் அவளையே ஏற்றுக் கொள்வதென்ற முடிவுக்கு வந்து விட்டான். ஆகவே அவளை மணம் செய்து கொண்டு தன்னுடையவளாக்கிக் கொள்ள விரும்பி

பார்த்தோமே ஞாபகம் இருக்கிறதோ? அதுவே நமக்கு ஆச்சரியமாயிருந்தது! இது என்னடா என்றால் நிஜமாகவே நடக்கிறது! ரொம்ப ஆச்சரியந்தான்!" என்று பாலா ஆச்சரியத்தோடு சொன்னான்.

"ஆமாம், பாலா! அது இருக்கட்டும். இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? மைதானத்தில் நேற்றுக் காலையில் உனக்கு ஒரு பிரம்பு அகப்படவில்லையா? அதை நீ வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்தாயல்லவா? அதனால்தான் இதெல்லாம் நடக்கின்றன என்று நினைக்கிறேன்!"

"பிரம்புக்கும் இந்த அற்புத நிகழ்ச்சிகளுக்கும் என்ன சம்பந்தம், முத்து?"

"சம்பந்தம் இருக்கிறது, பாலா! ஏனென்றால் அது மந்திரப் பிரம்பு என்று தோன்றுகிறது!" என்று சொன்னான் முத்து.

"அப்படியானால் நாம் இரண்டு பேரும் இப்பொழுது வீட்டுக்குப்போய் டிபனும் காப்பியும் சாப்பிட்டு விட்டு மைதானத்துக்குப் போகலாம். பிரம்பை எடுத்துக் கொண்டு போய் அது இருந்த இடத்திலேயே போட்டு விடலாம். என்ன?" என்று கேட்டான் பாலா.

முத்து, "சரி, போகலாம். நீ உன் மூன்று சக்கர சைக்கிளை எடுத்துக் கொண்டுவா. நான் என் சைக்கிளை எடுத்துக் கொண்டு வருகிறேன். நாம் இரண்டு பேரும் மைதானத்துக்குப் போய் சைக்கிள் விட்டு ஆனந்தமாக விளையாடலாம்!" என்றான்.

பாலாவும் "சரி" என்றான்.

இரண்டு பேரும் வீட்டுக்குப் போய் டிபன் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டார்கள். முத்து பிரம்பைக் கொண்டு வந்து பாலாவினிடம் கொடுத்துவிட்டு "பாலா! சைக்கிளை எடுத்துக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

பாலா பிரம்பை வாங்கிக் கொண்டு மூன்று சக்கர சைக்கிளுக்கு அருகில் சென்றான். உடனே அந்த சைக்கிள் தன் இடத்தை விட்டுத் தானே நகர்ந்தது!

(தொடரும்)

இரண்டு விடு கதைகள்

1. சுற்றி வரும் தெருவிலே அத்தை மகன் நிற்கிறான். அத்தையுடைய அழுகுரலை அடக்கி வைக்க முடியவில்லை.

2. திண்டுக்கல்லை இரண்டாய் வெட்டி, திருச்சினாப்பள்ளியை மூன்றாய் மடித்து, வெள்ளைக்காரனை உள்ளே விட்டு, விசையை முடுக்கினால் ரத்தம் வரும்.

இவை என்ன?

இரண்டாவது உத்தரவு

சென்ற உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருக்கையில், அமெரிக்க யுத்த மந்திரிக் காரியாலயத்தில் உபயோக மற்ற தஸ்தாவேஜிகள் நிறையக் குவிந்து இடத்தை வீணாக அடைத்துக் கொண்டிருந்தன.

இந்த தஸ்தாவேஜிகளை அழித்து விடலாமா என்று மேற்படிக் காரியாலயக் குமாஸ்தா மேலதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொண்டார். இது சம்பந்தமாக மேலதிகாரிக்கும் அந்தக் குமாஸ்தாவுக்குமிடையே நீண்ட கடிதப் போக்கு வரத்து நடந்து வந்தது. கடைசியில் மேலதிகாரியிடமிருந்து பதில் வந்தது. "உபயோகமற்ற பழைய தஸ்தாவேஜிகளை அழித்து விடலாம்" என்று அவர் எழுதியிருந்தார்.



குமாஸ்தா உடனே அந்த தஸ்தாவேஜிகளையெல்லாம் எடுத்து ஒரு சேவகனிடம் கொடுத்து அவற்றை நெருப்பிட்டுக் கொளுத்தும்படி கூறிவிட்டார். மறு நாள் மேலதிகாரியிடமிருந்து இன்னொரு பதில் வந்தது. "நான் முன்பு எழுதிய கடிதத்தில் கூறியதுபோல், நீங்கள் அந்த தஸ்தாவேஜிகளைக் கொளுத்தி விடலாம். ஆனால் கொளுத்துவதற்கு முன் பூரா தஸ்தாவேஜிகளுக்கும் நகல்கள் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்" என்று அதில் எழுதப் பட்டிருந்தது!

டிக் குலுக்கி எழுப்பியிருக்கவேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனுக்கு அதிசயமாயிருந்தது.

"என்ன ஆச்சரியம்! எங்கேயாவது படுக்கை தூங்குபவர்களை எழுப்புமோ? நாம் நேற்றைக்கு விளையாட்டாக எல்லாம் தாமாகவே நடக்காதா என்று நினைத்தோம். இன்று என்னடா என்றால் அது நிஜமாகவே நடக்க ஆரம்பித்து விட்டது போல் இருக்கிறதே!" என்று நினைத்துக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தான் முத்து. அவன் தன் படுக்கையைச் சுருட்டலாம் என்று நினைத்து அதைப் பார்த்த போது அது தானாகவே சுருட்டிக் கொண்டது.

வழக்கம் போல் முத்து வாய்க்காலுக்குப் பல் தேய்க்கப் போனான். பல் பொடிடப்பியையும் பிரஷ்ஷையும் அவன் எடுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவை தாமாகவே அவனைத் துரத்திக் கொண்டு வந்தன. பல் தேய்க்கும் சிரமமும் கூட அவனுக்கு இருக்கவில்லை. பிரஷ் அந்த வேலையைத் தானே செய்து விட்டது. முத்துவோடு பல் தேய்க்க வந்திருந்த பாலாவுக்கு இதைப்பார்க்க ஒரே அதிசயமாயிருந்தது.

முத்துவுக்கும் ஆச்சரியமாய்த்தான் இருந்தது.

"முத்து, பாப்பாப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் தான் இந்த மாதிரி அற்புதமான காரியங்களெல்லாம் நடந்ததாகப் போட்டிருக்கும். நம்ப முடியாத சம்பவங்கள், நெஞ்சைக் கலங்க வைக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் சேர்ந்த ஒரு சினிமாப்படம்



பாப்பா மலர்

அதிசயப் பிரயாணம்



சோமாஸ்

1. மந்திரப் பிரம்பு

"எப்போது தான் நாம் இந்த அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளப் போகிறோமோ, தெரியவில்லையே!" என்று முத்து மனதுக்குள் யோசனை செய்துகொண்டே கட்டிலின் மேல் மெத்தையிலே சாய்ந்தான்.

அவனுடைய அறையில் இங்கே ஒன்றும் அங்கே ஒன்றுமாகப் புத்தகங்கள் இறைந்து கிடந்தன. தரையில் பொம்மைகளும் இன்னும் எத்தனையோ விதமான விளையாட்டுச் சாமான்களும் உருண்டு கிடந்தன.

அன்றைக்கு என்னவோ முத்துவுக்கு மிகவும் சோம்பலா யிருந்தது.

"இந்தப் புஸ்தகங்களெல்லாம் நாம் வாசித்தான பிறகு தாமாகவே ஒழுங்காக அடுக்கிக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இப்படிக் கன்னா பின்னாவென்று கிடக்காது அல்லவா?" என்று அவன் மனம் தானாகவே நினைக்க ஆரம்பித்தது.

முத்துவின் மனசில் எண்ணங்கள் சினிமாப் படம் மாதிரி ஓடின. அவன் பார்வை மேஜை மீது அடுக்கி வைக்கப் பட்டிருந்த கடிதங்களை நோக்கிச் சென்றது.

அப்பொழுது அவன் தகப்பனார், "முத்து, கடிதங்களை யெல்லாம் தபால் பெட்டியில் போட்டுவிட்டாயா?" என்று கேட்டார்.

"இதோ போட்டு விடுகிறேன், அப்பா!" என்று முத்துவும் பதில் சொன்னான்.

அவர்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் தான் தபால் ஆபீஸ் இருந்தது. அங்கே போய்க் கடிதங்களைத் தபால் பெட்டியில் போடுவதில் முத்துவுக்கு ஒரு அலாதி உற்சாகம். ஆனால் இன்றைக்கு என்னவோ முத்துவுக்கு அந்த வேலை செய்வதில் உற்சாகமே இல்லை.

அப்பொழுது பக்கத்து வீட்டுப் பெண் பாலா வந்தாள். வரும் போதே "முத்து!" என்று இறைந்து கூப்பிட்டுக் கொண்டே வந்தாள்.

முத்து ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியமா யிருந்தது.

"என்ன முத்து, கண்ணைத் திறந்து கொண்டே தூங்குவதற்குப் பழகிக் கொள்ளுகிறாயோ?" என்று கேட்டுக் கொண்டே கட்டிலில் அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள் பாலா.

முத்து திடுக்கிட்டு அவள் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

"தூங்கவில்லை, பாலா! இப்படி என்னவோ யோசனை செய்து கொண்டே யிருந்தேன். நீ வந்தாய்!"

"என்ன யோசனை, முத்து? கோடை விடுமுறை விட்டாகி விட்டதே, என்ன செய்யலாம் என்று யோசனையா?"

"இல்லை, இல்லை! உன்னை விட்டு விட்டு நான் எந்த ஊருக்கும் போக மாட்டேன். இன்று காலையிலிருந்தே மிகவும் சோம்பலாயிருக்கிறது. இந்த அறை முழுவதும் குப்பையும் கூளமுமாயிருக்கிறது. என் புஸ்தகங்களெல்லாம் மூலைக்கு ஒன்றாக இறைந்து கிடக்கின்றன. அப்பா, தான் எழுதிய கடிதங்களையெல்லாம் கொடுத்துத் தபாலாபீசில் போடச் சொன்னார். புஸ்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும், கடிதங்களைத் தபாலில் போட வேண்டும். இந்த வேலைகளையெல்லாம் செய்ய எனக்கு என்னவோ

இன்றைக்கு உற்சாகமே இல்லை. சோம்பேறித்தனமாயிருக்கிறது. 'அறை தானே பெருக்கிச் சுத்தம் செய்து கொள்ளாதா? கடிதங்களெல்லாம் தாமாகவே தபால் பெட்டியில் விழாதா?' என்று என் மனசு நினைக்க ஆரம்பித்தது. அதுதான் படுத்தபடியே யோசித்துக் கொண்டிருந்தேன்!'' என்றான் முத்து.

பாலா கடகடவென்று சிரித்தான்.

"முத்து, உன் யோசனை பிரமாதம். ஆனால் அதன்படி எல்லாம் நடக்க வேண்டுமே!'' என்றான்.

"முத்து, முத்து! சாப்பிட வா! நாழிகை ஆகவில்லையா?'' என்று முத்துவின் அம்மா உள்ளேயிருந்தபடியே கூப்பிட்டாள்.

முத்து கட்டிலிலிருந்து எழுந்தான்.

"பாலா, நாம் சிரமப் பட்டுப் பிசையாமல் சாதமெல்லாம் தானாகவே பிசைந்து கொண்டு வாய்க்குள்ளே போய்விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்று கேட்டான் முத்து.

பாலா, "சரி, சரி! உன் யோசனை ஒன்றுக்கும் உதவாது. நீ போய்ச் சாப்பிடு. நானும் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். இன்று வெய்யில் ரொம்ப அதிகமாயிருக்கிறது. இங்கேயே விளையாடலாம்!'' என்று சொல்லிவிட்டு, பாலா தன் வீட்டுக்குப் போனான். முத்துவும் சாப்பிடப் போனான்.

பாலாவின் வீட்டுக்குப் பக்கத்தில் தான் முத்துவின் வீடும் இருந்தது. முத்து மிகவும் நல்ல பையன். அவனுக்குப் பத்து வயது இருக்கும். பாலாவுக்கு எட்டு வயது.

முத்துவும் பாலாவும் எப்பொழுதும் இணைபிரியாமல் இருப்பார்கள். அவர்கள் வீட்டுப் பின் புறத்தில் இருந்த அழகிய ரோஜாத் தோட்டத்தில் விளையாடுவதில் பாலாவுக்கும் முத்துவுக்கும் ரொம்பப் பிரியம். அந்தத் தோட்டத்தில் ஆயிரக்கணக்கான ரோஜாப் புஷ்பங்கள் மலர்ந்த முகங்களுடன் பாலாவையும் முத்துவையும் உற்சாகமாக வரவேற்கும்.

ஏதாவது தின்பண்டம் முத்துவின் அம்மா அவனுக்காக வாங்கினால் பாலாவுக்கும் சேர்த்துத் தான் வாங்குவாள். அதே மாதிரிதான் பாலாவின் அம்மாவும் எது வாங்கினாலும் முத்துவுக்கும் சேர்த்தே வாங்குவாள்.


வீட்டில் பாலா இல்லை என்றால் அவனுடைய அம்மா அவனைத் தேடமாட்டாள். ஆனால் முத்துவைத் தேடுவாள். முத்து இருக்கிற இடம் தெரிந்தால், தன்னாலே பாலா இருக்கிற இடமும் தெரிந்து போய் விடுகிறது! இரட்டைக் குழந்தைகள் மாதிரி பாலாவும் முத்துவும் அவ்வளவு ஒற்றுமையாக இருந்தார்கள். அந்த ஊரிலுள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில், ஒற்றுமையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் 'பாலாவையும் முத்துவையும் போல' என்றுதான் சொல்லிக் கொள்வார்கள்.

மறு நாள் காலை பொழுது விடிந்ததும், முத்துவை யாரோ படுக்கையில் உலுக்கினார்கள். முத்து திடுக்கிட்டு எழுந்திருந்தான். நாலாபக்கமும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. படுக்கைதான் தன்னை அப்ப













பக்கத்தில் தெரியும் திராக்ஷைக் குலை தானாகவே நரியின் வாய்க்கு எட்ட வேண்டும். உங்களுடைய மூக்கை இடையில் உள்ள புள்ளி மீது வைத்துப் பார்த்தால் பழம் நரியின் வாயில் சேருவதைக் காணலாம்.

ஜப்பானில் இந்தப் போன்ற நீளமான வால் உள்ள கோழிகளை வளர்க்கிறார்கள். வால் கீழே புரளாமலிருக்கும் பொருட்டுக் கோழி உட்கார உயரமான பந்தல் கட்டி வைத்திருக்கிறார்கள். கோழி நடந்து போகும்போது அதன் வாலை இரண்டு பேர் பின்னேயும் தூக்கிச் செல்வார்கள். இதன் வாலின் நீளம் இருபது அடி ☆☆☆



கீழே உள்ள கட்டத்தில் ஒரு மிருகம் ஒளிந்து கொண்டிருக்கிறது. ஒன்று போட்டிருக்கும் கட்டங்களில் வர்ணம் பூசினால் மிருகம் வெளிப்படும்.





நரிஜோஸ்யர்:- உன் ஜாதகப்படி சீக்கிரத்திலேயே உனக்குக் கடல்பிரயாணம் ஏற்படலாம்......

யானை:- எனக்கென்னமோ நம்பிக்கையில்லே. நேருஜி ஏதாவது மனசு வைத்தால் தான்......" ☆ ☆ ☆ ☆

மேலே உள்ள மரத்தைப் பாருங்கள். இது உலகத்திலேயே மிகப் பழமையானதும், பிரம்மாண்டமானதுமான விருட்சமாகும். தென் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோவில் இது இருக்கிறது. இது பூமியில் முளைத்து ஆறாயிரம் வருஷங்கள் ஆகின்றன. இன்னும் ஆயிரம் வருஷங்களுக்கு மேல் இருக்குமென்று கூறப்படுகிறது. இதன் சுற்றளவு 114 அடி. உயரம் 150 அடி. இந்த மரத்துக்கு 'கிப்ரஸ்' என்று பெயர் ☆☆☆

—பாபு



கட்டிடத்தில் அமைக்கப்பட்ட கடைகால் வழிகளில் ஜலம் ஏராளமாக விழும் போது, பார்ப்பவர்கள் மாட்டு வாய் அல்லது புலிவாயினின்று தான் ஜலம் வருவதாக எண்ணலாம். உண்மையில் வானிலிருந்து பெய்யும் மழைதானே அந்தக்கடைகால் வெள்ளமாகிறது? ஞானிகள் உபதேசிக்கும் மொழிகள் அனைத்தும் ஆண்டவன் பெய்யும் அமுதவெள்ளம். அருள் பெற்ற உபதேசிகளின் வாயிலாக அந்த வெள்ளம் வருகிறது.



குடத்தில் தண்ணீர் மொள்ளும் பொழுது பொள் பொள் என்று சப்தம் உண்டாகிறது. ஆனால் குடத்தில் தண்ணீர் நிறைந்த பின் சப்தம் நின்றுவிடுகிறது. சாஸ்திரம் மட்டும் படித்தவர்கள் வெகுவாகப் பேசுவார்கள்; வாதிப்பார்கள். ஞானம் அடைந்தவர்கள் மௌனமாய்ப் பகவானை அனுபவித்து ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள்.

விருந்துக்கு ஜனங்கள் கூடியபோது முதலில் கலகலவென்று சத்தம் உண்டாகும். எல்லோரும் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் சாப்பிட ஆரம்பித்ததும் சத்தம் அடங்கிப் போகும். பரிமாறத் தொடங்கும்போது, முக்கால் பங்கு இரைச்சல் நின்றுபோகும். பாயஸம் வந்தவுடன் சாப்பாட்டுக் கூடம் நிச்சப்தமாகி விடும். 'உர்' 'உர்' என்று உறிஞ்சும் சத்தம் ஒன்றுதான் கேட்கும். சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் திண்ணையில் படுத்துத் தூங்கியே போவார்கள்.

வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் கடவுளைக் காண்பதற்கு முந்திதான். ஆண்டவனைக் கண்டதும் பேச்செல்லாம் நின்று போய்விடும்.

சந்தைக்கு வெளியிலே பெரிய இரைச்சல் கேட்கும். அது என்ன சத்தம் என்று கேட்டால் "சந்தைக் கூச்சல்" என்போம். ஆனால் சந்தைக்குள்ளே பிரவேசித்து விட்டால் இரைச்சல் காதில் படாது. பண்டத்தின் விலை கேட்பதிலும் வியாபாரம் முடிப்பதிலும் கவனம் செலுத்துகிறோம். இப்படியே தான் பக்தியும். தொலைவில் நிற்கும்போது, வாதங்களின் இரைச்சல் அதிகமாக இருக்கும். பகவானை அண்டிப் பக்கத்தில் நெருங்கியதும் வாதங்களின் சத்தம் அடங்கிப் பகவானிடம் லயித்து விடுவோம்.

பணியாரச் சட்டியில் நெய்யில் அப்பம் பொரியும்போது ரொம்ப சத்தம் உண்டாகும். அப்பம் பக்குவமானதும் சத்தம் அடங்கிப் போகும். பக்தி செய்கிறவர்கள் முதலில் மிகவும் பேசுவார்கள். பிறகு பேச்சு அடங்கிப் போய் ஞானம் முற்றும்.

பொருள். சீடர்களைத் தானகவே அது இழுத்துக் கொள்ளும்.

* * *

பகவானுடைய அருளைப் பெருதவர்கள் பிரசாரம் செய்வது பயனற்ற சிரமமேயாகும். அது யாருடைய உள்ளத்தையும் தீண்டாது. பக்தியாலும் ஒழுக்கத்தாலும் ஆண்டவனை அடைந்து அவனுடைய பட்டயம் பெற்ருல் மட்டும் சீடர்களை அடைந்து ஆசிரியனாக வேலைசெய்ய முடியும். ஆண்டவனுடைய அருள் பெருத முயற்சி ஒன்றுக்கும் உதவாது.

நெருப்பு ஜொலித்தால் எங்கிருந்தோ திரள் திரளாகப் பூச்சிகள் வந்து அதில் விழுகிறதைப் பார்க்கிருேம்.



பூச்சிகளுக்கு யாரும் அழைப்புத் தருகிறதில்லை. ஞானம் பெற்றவர்கள் அந்த நெருப்பைப் போலாவார்கள். அதன் சக்தியே சீடர்களை இழுத்துக் கொள்ளும். எங்கிருந்து வருகிருர்கள் என்று சொல்லக்கூட முடியாது.

* * *

அருள் பெற்ற குரு எதைச் செய்தாலும் என்ன பேசினாலும் அது ஆண்டவனை ஆராதிக்கும் பூஜையாகவே இருக்கும். அதுவே உபதேசமுமாகும். தனியாக உபதேசமே வேண்டியதில்லை. தன் உள்ளத்தில் பகவானைக் கண்டு, பகவானுடைய நினைவில் ஒருவன் தன் மனதை நிறுத்தினல் அதுவே பிறருக்கும் உபதேசமாய் வேலை செய்யும். சம்ஸார பந்தங்களினின்று விடுதலை அடைவதற்காக ஒருவன் செய்யும் முயற்சியே மற்றவர்களுக்கு உபதேசமாகும். புஷ்பம் மலர்வதைப் போல் அவன் உள்ளம் தேன் நிறைந்து வண்டுகளை இழுத்து அவற்றுக்கு உணவு வழங்கும்.

* * *

பெரிய மண்டியில் தானியம் அளந்து விற்கப்படுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அளந்து போடுகிறவன் நிறுத்தாமல் அளந்துகொண்டே யிருப்பான். அளந்து போடப் போட ராசியிலிருந்து தானியம் சரிந்து விழுந்து குவிந்து கொண்டே யிருக்கும். அந்த மாதிரியே சத்குருவின் உபதேசமும். ஆண்டவனுடைய பெரிய மண்டியில் தானியம் அளந்து போடுகிருன். ஞானமும் உபதேசமும் வந்து குவிந்து கொண்டே யிருக்கும். வழங்கப்படும் தானியம் ஆண்டவனுடையது. சின்ன பல சரக்குக் கடையில் நடைபெறும் வியாபாரம் வேறு விதம். அங்கே நடைபெறும் வியாபாரத்தில் பண்டம் சீக்கிரம் தீர்ந்து போகும். நூல்களைப் படித்துச் செய்யும் உபதேசத்துக்கும் பக்தியினுல் ஆண்டவனுடைய அருளைப் பெற்றுச் செய்யும் உபதேசத்துக்கும் இதுவே வித்தியாசம். அருள் பெற்றுச் செய்யும் உபதேசத்தில் பண்டத்துக்குப் பஞ்சமில்லை. நூலைப் படித்துச் செய்யும் உபதேசத்தில் சரக்கு சீக்கிரம் தீர்ந்துபோகும்.

* * *


மழை பெய்யும்போது மாளிகைக் கூரையிலிருந்து ஜலம், பெருந் தாரையாகக் கீழே விழுகிறது. கோமுகமாகவும், புலிமுகமாகவும், ஆங்காங்கே



ராமகிருஷ்ண உபநிஷதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

10. பேச்சும் மௌனமும்



ஆண்டவன் அருளை அடைந்து ஒருவன் பக்தியாலும் ஒழுக்கத்தாலும் ஞானத்தைப் பெற்று விட்டால், ஒன்றும் சொல்லாமலே அவன் மற்றவர்களுக்கு வழி காட்டியாகி விடுகிறான். உள்ளத்தில் பக்தி பொங்கி ஆண்டவனை அனுபவித்தவர்களே, இந்த நிலையை அடைய முடியும். படித்துப் படித்துச் சாஸ்திர அறிவு மட்டும் பெற்றால் போதாது. இமயமலைப் பனியைப் பற்றிப் புத்தகம் படித்தோ, மற்றவர்கள் சொல்லக் கேட்டோ அடைந்த அறிவினால் ஒருவன் அதை விளக்கி மற்றவர்களுக்குச் சொல்ல முடியுமா? பனியைப் பார்த்தும், தொட்டும், வாயில் போட்டு ருசியும் கண்டவர்களுக்குத்தான் மற்றவர்களுக்கு அதைப்பற்றிச் சொல்லும் திறமை உண்டாகும்.

'முக்தி நெறியை நான் அறிந்து கொண்டேன்; மற்றவர்களுக்கும் உபதேசித்து, என்னைச் சுற்றி ஒரு தனிக் குழாம் உண்டாக்கிக் கொள்ளப் போகிறேன்' என்று ஒரு பக்தன் எண்ண ஆரம்பித்தால் அது அகங்காரத்தின் சேஷ்டை என்று அறிந்து கொள்ள வேண்டும். ஆண்டவனுடைய சீட்டு வந்தால் மற்றவர்களுக்குப் போதிக்கும் சக்தி ஒருவனுக்குத் தானாகவே வந்து சேருகிறது. ஆண்டவனுடைய பட்டயம் பெறாமல் ஞானம் புகட்டும் வேலை வெறும் ஆணவக் கூத்தே யொழிய வேறு எவ்விதப் பயனும் அளிக்காது.

* * *

புஷ்பங்களில் தேன் நிறைந்தால் வண்டுகள் தாமாகவே வந்து மொய்க்கும். வெல்லம் இருக்கும் இடத்திற்கு வர எறும்புக்குத் தனியாக ஒரு அழைப்பு அனுப்ப வேண்டியதில்லை. ஒரு மனிதன் உண்மையில் ஞானம் பெற்று அவனுடைய வாழ்க்கையானது ஞானம் ஊறிய வாழ்க்கையாகி விட்டால் யாரையும் கூப்பிட்டு அழைக்க வேண்டியதில்லை. அவனுடைய ஆத்ம சக்தி அமுத வெள்ளம் போல் நாலா பக்கமும் பாய்ந்து எல்லோரும் அவனைத் தாமாகவே தேடி வருவார்கள். எறும்பையும் தேனீக்களையும் இழுக்கும் இனிப்பு உள்ளத்தில் இருக்க வேண்டும். ஆண்டவன் படைத்த உலகத்தில் மனத் தூய்மையானது வெல்லத்தைப் போன்ற இனிப்பான





பாதிரிமார்களைப் போல மிஷன்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி ஸ்தாபனங்கள் முதலியவைகளை ஆரம்பித்து அவைகளின் மூலமாகப் பௌத்த மதப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்தலாமென்று டாக்டர் அம்பேத்கார் ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் கடிதம்

கொழும்பில் முகத்துவாரம் என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்ட முஸ்லிம் பொது வாசகசாலையின் காரியதரிசி சில புத்தகங்களை நன்கொடையாக அனுப்பி வைக்க வேண்டுமென்று அமெரிக்காவில் இந்திய ஸ்தானிகராயிருக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமிக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி எழுதியிருக்கும் பதிலில் பொது வாசகசாலைக்கு முஸ்லிம் வாசகசாலை என்று பெயர் வைத்திருப்பது தமக்கு வியப்பாயிருப்பதாயும் பொது ஜனங்களுக்கு உரிய வாசகசாலையில் குறிப்பிட்ட வகுப்புப் பெயரே இருக்கலாகாது என்றும் சொல்லிவிட்டு, "ஆயினும் தங்கள் கோரிக்கைப்படி சில புத்தகங்கள் அனுப்புகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த வாசகசாலையினர் கொழும்பிலுள்ள பல தேச ஸ்தானிகர்களின் உதவியைக் கொண்டு அருமையான பல புத்தகங்களைச் சேகரித்திருக்கிறார்கள்.

ஜவுளி ஆலைக்கு இந்திய மூலதனம்

கரூரிலுள்ள ஸ்வதந்திரா ஜவுளி ஆலையின் டைரக்டர்களில் ஒருவரான ஸ்ரீ கோபாலசாமி சமீபத்தில் இலங்கைக்கு வந்து இருபத்தைந்து லட்சம் ரூபாய் மூலதனத்தில் ஒரு பிரம்மாண்டமான ஜவுளித் தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டுப் போயிருக்கிறார். இலங்கையில் வெள்ளவத்தை மில்ஸ் என்ற ஓரே ஒரு ஆலையைத் தவிர பெரிய தோரணையில் ஜவுளி உற்பத்தி செய்யும் ஆலைகள் வேறு கிடையாது. உணவைப் போல உடைக்கும் அந்நிய நாடுகளையே இலங்கை அண்டி நிற்க வேண்டியிருக்கின்றது. பருத்தியை ஏராளமாகச் சாகுபடி செய்யவும் உடை விஷயத்தில் சுய தேவையைப் பூர்த்தி செய்யவும் அரசாங்கத்தின் ஆறு வருடத் திட்டத்தில் யோசனைகள் அடங்கியுள்ள பொழுதிலும் அவை இன்னும் ஏட்டளவிலேயே இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் பூராவும் அரசாங்கத்தினுடையதாய் இல்லாமல் அரசாங்கத்தின் ஐம்பத்தொரு சத விகித மூலதனத்துடன் ஒரு தனிப்பட்ட கம்பெனி ஜவுளி ஆலையை ஆரம்பிப்பது உத்தியோக வட்டாரங்களில் வரவேற்கப் படுவதாகவே தெரிகிறது. ஸ்ரீ கோபாலசாமியின் உத்தேசத்திலுள்ள ஆலைக்கு நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மட்டுமே இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுவார்களென்றும் நிபுணத்துவம் தேவையில்லாத வேலைகளுக்குச் சுமார் ஐயாயிரம் இலங்கையர்கள் நியமிக்கப்படுவார்களென்றும் இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்தத் திட்டம் ஓரளவு உதவி புரியுமென்றும் நம்பப்படுகிறது.

தூத்துக்குடிக் கப்பல்

இலங்கைக்கும் தூத்துக்குடிக்குமிடையில் ஓடிய பிரிட்டிஷ் கப்பலுக்குப் பதிலாக தேசபக்தர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளையின் பெயரைத் தாங்கிய ஒரு சுதேசிக் கப்பல் இப்பொழுது ஓடுகிறது. இக் கப்பலின் வெள்ளோட்ட வைபவம் ராஜாஜியினால் நடத்திவைக்கப்பட்ட பொழுது இந்தியர்கள் மிகுந்த பெருமையடைந்தார்கள். ஆனால் இப்போது இந்தக் கப்பல் போக்குவரத்தைப் பற்றிப் பல விதமான புகார்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. எல்லாக் கப்பல்களையும் போல இந்தக் கப்பலின் புறப்படும் நேரமும் வந்து சேரும் நேரமும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கப்படாதது மிகுந்த கஷ்டத்தை விளைவிக்கின்றது. சென்ற மாதம் 28-ம் தேதி இக்கப்பலில் மாலை 6 மணிக்குப் பிரயாணிகள் ஏற்றப் பட்டார்கள். ஆனால் மறு நாள் விடியற்காலை 4 மணிக்குத்தான் கப்பல் கொழும்பை விட்டுப் புறப்பட்டது. அது தூத்துக்குடியை அடைந்து பிரயாணிகள் அங்கு இறக்கப்படுகையில் நள்ளிரவாகிவிட்டது.

150 மைல் பிரயாணத்துக்குச் சுமார் 30 மணி நேரத்துக்கு மேல் பிடித்திருக்கிறது. கப்பலில் போதிய சாப்பாட்டு வசதியில்லாத படியினால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்துக்கு ஆளாகிவிட்டார்கள். கப்பல் புறப்படும் நேரத்தை முன்னதாகவே அறிவித்து சுமார் இரண்டு மணி நேரத்துக்கு முன் ஜனங்களைக் கப்பலில் ஏற்றியிருந்தால் இந்தக் கஷ்டம் ஓரளவு தவிர்க்கப்பட்டிருக்கலாம். இந்தக் குறை இனியாவது நிவர்த்திக்கப்பட வேண்டியது அவசியம்.

டாக்டர் அம்பேத்காரும் பௌத்த மதமும்

ரஜனி

கொழும்பு, மே 10

இம்மாத முடிவிற்குள் பிரஜா உரிமைச் சட்ட பரிஷ்காரத் தீர்மானத்தை இந்திய காங்கிரஸ் வாபஸ் வாங்கிவிடும். ஆதலால் அடுத்தபடியாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைப் பல்லாயிரக் கணக்கிலே பிரஜைகளாகப் பதிவு செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பிரஜா உரிமை கோரும் மனுவை, கொஞ்சம் படித்தவர்கள் கூடப் பிறர் உதவியில்லாமல் பூர்த்தி செய்ய முடியாது. மனுதாரின் பிறந்த தேதியைக் குறிப்பிடும் சர்டிபிகேட்டு, குழந்தைகளிருந்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு ஜனன சர்டிபிகேட்டு, இலங்கையில் சட்டம் கோரும் கால அளவு, வசித்திருந்ததை ருசப்படுத்தக் கூடிய அத்தாட்சிகள் முதலியவைகளை ஒவ்வொரு தொழிலாளியும் தயாரித்தாக வேண்டும். இவைகளை விஷய மறிந்தவர்களின் உதவியில்லாமல் தொழிலாளர் தயாரித்துப் பிரஜா உரிமை பெற முடியாது.

இதற்காக இந்திய ஹை கமிஷனர் காரியாலயமும் இந்திய காங்கிரஸும் ஒத்துழைத்து ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. இதன்படி சுமார் நூறு கௌரவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படுவார்களென்றும், அவர்கள் தோட்டம் தோட்டமாகச் சென்று தொழிலாளர்களுடைய மனுக்களைப் பூர்த்தி செய்து கொடுத்துத் தேவையான தஸ்தாவேஜுகள் சகிதம் அவைகளைப் பிரஜைப் பதிவுக் கமிஷனருக்கு மொத்தமாக அனுப்புவார்களென்றும், இவ்விதம் வரும் மனுக்களைக் கமிஷனர் உடனுக்குடன் கவனித்துப் போதிய யோக்கியதாம்சம் உள்ளவர்களைப் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொள்ளுவாரென்றும் கூறப்படுகிறது.

தொழிலாளருக்குப் பிரஜா உரிமை

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி இவ்வார கெஜட்டில் தொழில் சமூக சேவா மந்திரி வெளியிட்டிருக்கும் சில புள்ளி விவரங்கள் கவனிக்கத் தக்கவை. அவற்றின்படி 1949-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 31-ந் தேதி இலங்கைத் தோட்டங்களில் மொத்தம் 7,64,183 இந்தியத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 2,20,476 பேர் ஆடவர்கள்; 2,17,736 பேர் பெண்கள்; 3,25,971 பேர் குழந்தைகள். சுமார் அறுபது சத விகிதத்துக்கு மேற்பட்டவர்கள் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்களென்றும் பெரும்பாலோர் பத்து வருடங்களுக்குக் குறையாமல் இலங்கையில் வசித்தவர்களென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் கட்டுப்பாடான நடவடிக்கை எடுக்கப்படுமானால் பெரும்பாலான தொழிலாளரை இலங்கைப் பிரஜைகளாக்குவது கஷ்டமாக இராது.

டாக்டர் அம்பேத்காரின் யோசனை

இம்மாதக் கடைசி வாரத்தில் இலங்கையில் நடக்கும் அகில உலக பௌத்தர்கள் காங்கிரசுக்கு இந்தியாவின் சட்ட மந்திரி டாக்டர் பி. ஆர். அம்பேத்காரும் வருகிறார். அவர் தம்மை ஒரு பௌத்தர் என்று சொல்லிக் கொள்ளா விட்டாலும் பௌத்த மதக் கொள்கைகளில் நம்பிக்கை வைத்து அனுஷ்டிப்பதினால் அவர் பௌத்தர்தானென்றும் இந்தியாவிலுள்ள ஹரிஜனங்களெல்லோரையும் பௌத்தர்களாக்க அவர் ஒரு விரிவான திட்டம் தயாரித்து அனுப்பியிருக்கிறாரென்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரசின் தலைவர் டாக்டர் மலால சேகரா ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

வர்த்தக மந்திரி ஸ்ரீ அமரசூரியா புத்த ஜயந்தி தினத்தில் இங்கு பேசிய பொழுது வெகு சீக்கிரம் இந்தியாவில் கால்வாசிப் பேர் பௌத்தர்களாகி விடுவார்கள் என்றார். "ஹரிஜனங்களுக் கிடையிலும் இந்தியாவிலுள்ள மற்றவர்களிடையிலும் பௌத்த மதத்தை எவ்விதம் பிரசாரம் செய்யலாமென்பதில் இப்பொழுது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறதாம். கிறிஸ்தவப்

"அங்கத்தினர்களுக்குள் நடந்த பலமான விவாதத்தைப் பார்த்தால் அவர்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டு விடுமோ என்ற பயமாயிருந்தது." —பத்திரிகைச் செய்தி.

"விவாகச் சடங்கில் கைகலப்பு (பாணிக் கிரகணம்) முக்கியமாயிற்றே! இதில் பயம் எதற்கு?" என்று ஸ்ரீமான் கல்யாணராம சாஸ்திரிகள் கேட்கிறார்.

★

"மைசூரில் இட்டிலி தோசை போட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரிசியை உபயோகிக்கக் கூடாது."

—செய்தி.

"பேசலாம்; ஆனால் வாயைத் திறக்கக் கூடாது" என்று சொல்லுவதற்கும் இந்த அறிக்கைக்கும் வித்தியாசம் என்னவோ தெரியவில்லை!

★

"கொள்ளைக்காரர்களின் முகாம்கள் தொண்ணூற்றேழு கண்டு பிடிக்கப்பட்டன. ஐம்பதுக்கு மேற்பட்ட கொள்ளைக்காரர்கள் காயப்படுத்தப் பட்டனர். ஒருவரைக்கூடப் பிடிக்கவில்லை" —கோலாலம்பூர் செய்தி.

அவர்களைப் பிடிக்காததற்குக் காரணம் அவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பது தானே, என்னவோ?

★

"பாகிஸ்தான் பிரதம மந்திரி அமெரிக்க செனேட் சபைக்கு விஜயம் செய்தபோது சபையில் கோரம் ஏற்பட, அதாவது போதிய அங்கத்தினர்கள் வந்து சேர, அரை மணி நேரம் பிடித்தது."

—பத்திரிகைச் செய்தி.

அட கோரமே!

★

"நேற்றுப் பெய்த 2.38 இஞ்சி மழையினால் ஏரித் தேக்கத்தில் சிறிது தண்ணீர் கூடியிருக்கிறது." —கொழும்புச் செய்தி.

அத்தகைய இஞ்சி மழையினால் எத்தனை பேர் கண்ணீர் வடித்தால் ஏரித்தேக்கத்தில் நீர் மட்டம் உயரும் என்று கணக்குப் போடுகிறார் எங்கள் கணக்கு வாத்தியார் கணபதியாப் பிள்ளை.

★

"வாழ்நாளிலேயே காரில் பிரயாணம் செய்யாத வயோதிக ஸ்திரீ ஒருத்தி காரில் ஏற மறுத்து மழையில் நனைந்துகொண்டே போனாள்." —ஒரு செய்தி.

இப்பொழுது பத்திரிகைகளில் வரும் கார் விபத்துக்களையும், ரயில் விபத்துக்களையும் படித்த பிறகு யாருக்குத்தான் காரில் ஏறவும், ரயிலில் ஏறவும் துணிச்சல் வரும்?

"வங்கம் உலக அரங்கத்தில் இடம் பெற்று விட்டது." —பத்திரிகைச் செய்தி

அப்படியானால் வங்கத்துக்கு 'நாடகப் பிரவீணா' என்று பட்டம் கொடுக்கலாமா என்று கேட்கிறார் எங்களூர் நாடகசபைக் காரியதரிசி.

★

"கறுப்பு மார்க்கெட் ஒழியாமலிருப்பதற்குக் காரணம் கண்ட்ரோல்களே!"

—டாக்டர் பட்டாபி.

கண்ட்ரோல்கள் ஒழியாமலிருப்பதற்குக் காரணம் கறுப்பு மார்க்கெட்டே!

★

"கடந்த வாரம் மேற்கு வங்கம், அஸ்ஸாமில் வீசிய கடும் புயலில் ஒரு வீடு அப்படியே கவிழ்ந்து விட்டது." —கல்கத்தா செய்தி.

மேற்படி வீட்டுக்காரர் வீட்டை நிமிர்த்துவதற்கு அடுத்த புயலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கலாம்!

★

"13உ காலையில் கனம் கோபால் ரெட்டியார் தமிழ்நாடு பஸ் சொந்தக்காரர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார். அன்றிரவே சென்னைக்குத் திரும்புவார்." —செய்தி.

"பஸ்ஸில் திரும்புவாரா?" என்று கேட்கிறார் சென்னை பஸ்ஸில் பிரயாணம் செய்து தொல்லைப்படும் ஒரு என். ஜி. ஓ.

★

"சென்னைக்கு நல்ல தண்ணீர் சப்ளை செய்ய வேண்டுமானால், இயந்திர பில்டர்கள் அமைக்க வேண்டியது அத்தியாவசியம்" என்று மேயர் வற்புறுத்தினார்.

—பத்திரிகைச் செய்தி.

"பொடி இறங்காத பில்டராகப் பார்த்துப் போடச் சொல்லுங்கள்" என்கிறாள் காப்பிப் பிரியையான ஒரு பாட்டியம்மாள்.

★

"பஞ்சாபில் வானர வதம்: 36,000 குரங்குகள் சுடப்பட்டன: கொன்றதற்குச் சாட்சியாக வாலைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமாம்."

— தினப் பத்திரிகை.

வால் இல்லாக் குரங்காக இருந்தால் என்ன செய்வது என்று கேட்கிறான் எங்கள் வீட்டு அம்பி.

★

"கல்கத்தாவில் மழை."

—பத்திரிகைத் தலைப்பு.

எங்கள் சென்னையிலும் கூடத்தான் மழை! இங்குள்ள பிரபாத் டாக்கீஸில் மழை (பர்ஸாத்) பெய்யவில்லையா என்கிறார் சினிமாப் பித்தர் ஒருவர்.

அதற்குள் அந்த வாலிபனும் அவள் அருகே வந்து விட்டான்.

"ஏனம்மா! வழி தவறி விட்டீர்களா? எங்கே போக வேண்டும்?" என்று பரிவோடு கேட்டான், அவ் வாலிபன்.

மேரிக்கு அவனுடைய தோற்றமும் பேச்சும் சிறிது ஆறுதலளித்தன. "இல்லை, இல்லை எங்கள் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது. நான் போய்க் கொள்ளுகிறேன்!" என்று கூறி அங்கிருந்து எழுந்தாள்.

மறுநாளும் ஏதோ ஒரு சக்தி அவளை மீண்டும் அவ்விடத்திற்கு இழுத்துச் சென்றது. தானும் அப்படியே வந்ததாக அவ் வாலிபனும் சொன்னான்.



இப்படி இரண்டு நாட்கள் சென்றன, அன்றையதினம் பேச்சுக்கு நடுவில், "மேரி! உன்னுடைய கஷ்டங்கள் எனக்குத் தெரியும். என்னுடன் வந்து விடு!" என்று அவள் கைகளைப் பற்றி அவன் அன்போடு சொன்னான்.

மேரியின் மனம் ஒரு கணம் உணர்ச்சி வசப்பட்டது. ஆனால் அடுத்த கணம் அவள் கணவனின் சிரித்த முகம் அவள் மனக் கண் முன் தோன்றியது. தன் அருமைக் குழந்தை அழுவதைப் போன்ற சத்தம் அவளைத் திடுக்கிட வைத்தது.

வெடுக்கென்று அவ்வாலிபனிடமிருந்து கையை விடுவித்துக் கொண்டு பங்களாவை நோக்கி விரைந்தோடினாள். அச்சமயம் பங்களாவிற்குச் சிறிது தூரத்தில் அவளுடைய குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தையின் அருகில் தாதிகள் ஒருவரையும் காணவில்லை. ஒரு முரட்டு மாடு குழந்தையை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்ததை மேரி பார்த்தாள். வில்லிலிருந்து கிளம்பும் அம்பைப் போல விர்ரென்று சென்று குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு பங்களாவை நோக்கி ஓடினாள். பங்களாவின் வாசலை நெருங்கியதும் அப்படியே அடியற்ற மரம்போல் நிலைவற்று விழுந்து விட்டாள்.

மயக்கம் தெளிந்து கண் விழித்ததும் தன் அருமைக் கணவன் அருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். திடீரென்று உணர்ச்சிமேலிட்டு 'ஓ' வென்று கதறிக் கண்ணீர் விட்டாள்.

"மேரி! பயப்படாதே! குழந்தைக்கு ஒன்றும் நேரவில்லை. நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் நீ அங்கு இருக்க நேர்ந்ததினால் குழந்தை தப்பியது" என்று அவள் கணவர் அன்பு மொழிகளால் ஆறுதல் சொன்னார்.

அவருடைய அன்பையும் ஆதரவையும் கண்ட மேரி, தான் அசட்டுத்தனமாக நடந்து கொண்டதையும், ஏதோ ஒரு சக்தி தன்னை அவ்விபத்திலிருந்து காப்பாற்றியதையும் உணர்ந்தாள்.

எவ்வளவோ முயன்றும் அவளால் அந்தச் சம்பவத்தை மறக்க முடியவில்லை. அப்படியே தன் கணவனிடம் சொன்னால் ஒழிய அவள் மனது நிம்மதி அடையாது என்று தோன்றியது.

* * *

ராமநாதன் கதையைக் கீழே வைத்து விட்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவரைப் போல் மெதுவாக மூக்குக் கண்ணாடியைக் கழற்றினார். மோஹினி கணவரின் முகத்தையே ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தாள்.

"கதை ரொம்ப ஜோர்! முதல் முதலாக எழுதிய கதை என்றே சொல்லமுடியாது. பெண்களுடைய மனப் பான்மையை ஒட்டித்தானிருக்கிறது. ஆயினும் மேரியை எனக்கு ரொம்பவும் பிடித்தது. ஆமாம், கதையை ஏன் முடிக்காமல் விட்டிருக்கிறாய்? அவள் தவறைக் கணவனிடம் சொன்னாளா?" என்று கேட்டார் ராமநாதன்.

"கணவன் அதை எப்படி ஏற்றுக் கொள்வார் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை" என்றாள் மோஹினி.

"ஏன், இப்படிப்பட்ட ஒரு மனைவி தனக்கு இருப்பதைப் பற்றி அவன் பெருமை படத்தான் வேண்டும். அதிருக்கட்டும், நீ எதற்காக மேரியை வைத்துக் கதை எழுதியிருக்கிறாய்? அவர்கள் வாழ்க்கையைப் பற்றி உனக்கென்ன தெரியும்?" என்று கேட்டார்.

"பெண்களின் மனோபாவம் எல்லாருக்கும் ஒன்றுதான். மேரி என்று இல்லாவிட்டால் மோஹினி என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்!"

இதைக் கேட்டதும் ராமநாதன் திடீரென்று மின்சாரத்தினால் தாக்குண்டவரைப்போல் குதித்தெழுந்தார். பணத்தை வாரி இறைத்து விட்டால் எதை வேண்டுமானாலும் சாதித்து விடலாமென்று எண்ணியிருந்தது எவ்வளவு மடத்தனம் என்பதை அவர் அப்பொழுதுதான் உணர்ந்தார். சற்று முன்னால் மேரியை மிகவும் பிடித்தது என்று தன் மனைவியிடம் கூறியதை நினைத்ததும் அவருக்கே சிரிப்பு வந்தது.

மெதுவாக எழுந்து அவளருகே போய் நின்றார். மோஹினி பயத்தாலும் வெட்கத்தாலும் ஒரு குற்றவாளியைப் போல் தலை கவிழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

ராமநாதன் அன்போடு அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தார். அவமானமும் துக்கமும் ஒருங்கே சேர்ந்து கண்ணீர் வழிந்த கண்களுடன் அவரைப் பரிதாபத்துடன் பார்த்தாள் மோஹினி.

"என் அன்பே, என்னை மன்னித்துவிடு! இவ்வளவு நாட்களாகப் பணத்தையே பிரதானமாக நான் கருதியிருந்தேன். இனிமேல் என் வாழ்க்கையில் அன்புதான் பிரதானமான இடம் பெறும். நம் வாழ்வையே மாற்றிவிட்ட மேரி, உண்மையில் ஒரு அதிசயமான பெண்தான்!" என்று ஒரு புது உணர்ச்சியுடன் கூறி, மோஹினியை அன்புடன் தழுவிக் கொண்டார் ராமநாதன்.

அக்கப்போர்

"நம் நாட்டில் இன்று ராணிகள் மறைந்து விட்டார்கள்; ஆனால் எங்கும் நாட்டிய ராணிகள் நிறைந்து வருகின்றனர்" என்று நீதிபதி எ. எஸ். பி. ஐயர் சென்னையில் நடந்த ஓர் அரங்கேற்ற விழாவில் கூறினார்.

நாட்டில் எங்கும் 'நாட்டிய ராணிகள்' மலிந்து வருவதை வேண்டுமானால் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் ராணிகள் மறைந்து விட்டார்கள் என்று அவர் கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாது. 1947 ஆகஸ்டு 15க்குப் பிறகு எல்லாரும் இந்நாட்டு மன்னர் ஆகிவிட்டதால், அந்த மன்னர்களின் மனைவிமார் எல்லோரும் ராணிகள்தானே!

★

"அமெரிக்காவில் நாய்களையும் இன்ஷூர் செய்கிறார்களாம்."

—நியூயார்க் செய்தி.

இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகள் இனிமேல் நாய்களைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை; அதற்குப் பதிலாக நாய்கள் இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகளைக் கண்டு பயந்து ஓடலாம்!

★

"சில பிராணிகளிடம் மனிதர்களிடையே காணப்படும் குண விசேஷங்கள் இருந்து வருகின்றன என்பதை பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு, ஸ்விஸ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்."

—பாரிஸ் செய்தி.

சில மனிதர்களிடம் பிராணிகளிடையே காணப்படும் குண விசேஷங்கள் இருக்கின்றன என்பதை அந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து பார்த்தார்களா?

"இனி ஞாயிற்றுக்கிழமை தபால் இலாகாவுக்கு விடுமுறையாகும்......தபால்காரர்களுக்கு ஹிந்தி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்."

—ஒரு பத்திரிகைச் செய்தி.

இந்த ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தபால்காரர்கள் ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் செய்த சூழ்ச்சியாக இருக்குமோ என்று ஒரு சுயமரியாதைக்காரர் சந்தேகப்படுகிறார்.

★

"கவரை ஒட்ட நா நாக்கு உள்ள இயந்திரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது இவ்வருஷம் கைத்தொழில் கண்காட்சிச் சாலையில் இடம் பெறும்."

—லண்டன் செய்தி.

ஐயையோ! என்னையும் அந்தக் கண்காட்சிச் சாலையில் கொண்டுபோய் வைத்து விடுவார்களோ என்று பயப்படுகிறான் நாக்கினாலேயே தபால் பில்லைகளை ஒட்டும் ஓர் ஆசாமி.

★

"கணவனின் பல் தேய்க்கும் பிரஷை மனைவி பூட்ஸ் மீது வைத்து விட்டாள். அந்தப் பிரஷை எடுத்துப் பல் தேய்த்ததனால் கணவனுக்குப் பல் வலி ஏற்பட்டு மூன்று பற்கள் போய்விட்டன."

— ஒரு செய்தி.

பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன் என்று வீராப்புப் பேசியிருப்பார் கணவர்; அதன் பலன் அவருக்குக் கைமேல் கிட்டியிருக்கும் என்கிறார் ஒரு சம்சாரி.

"எப்பொழுதும் உன்னுடைய திறமைகளில் உனக்கு நம்பிக்கை கிடையாது! ஒன்றும் தெரியாதவர்களெல்லாம் பொதுக் கூட்டங்களிலும், விருந்துகளிலும் அட்டகாசம் செய்கிறார்கள்! நீ மட்டும்......" என்று வார்த்தையை முடிக்காமலேயே மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு படிக்கலானார்.

* * *

மேரி, ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். ஆனாலும் அவளுடைய இயற்கை அழகும் இணையற்ற கருகருப்பும் யாரையும் கவரக் கூடியதாக இருந்தது. ஒரு பெரிய பணக்காரர் அவள் அழகைக் கண்டு அவளை மணம் செய்து கொள்ள விரும்பவே, எல்லோரும் அதிசயித்தனர். மேரியின் எதிர்பாராத அதிருஷ்டத்தை நினைத்துச் சந்தோஷப்பட்டனர்.

கல்யாணம் முடிந்து புருஷன் வீட்டுக்கு வந்ததும் அவளுடைய நிலைமை மிகவும் சங்கடமாகி விட்டது. அந்தப் பெரிய வீடும், பல வேலைக்காரர்களும், விருந்தினர்களும் எல்லாம் அவளுக்கு ஒரு விதப் பீதியை அளித்தன.

எந்தச் சமயத்தில் எது வேண்டுமென்றாலும் ஒன்றுக்குப் பத்தாக வந்து குவிந்து கொண்டிருந்தன ஆயினும் மேரியின் உள்ளம் திருப்தி யடையவில்லை.

சிறிது காலத்துக்குப் பிறகு அவள் ஒரு குழந்தைக்குத் தாயானாள். அந்தச் சம்பவம் அவளுக்கு ஒரு புதிய உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கியது. குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கு ஒரு புது இன்பமும், தனிப்பட்ட சந்தோஷமும், நிம்மதியும் ஏற்பட்டது. இந்தக் குழந்தைதான் தனக்கென்று கடவுள் அளித்ததாகக் கருதினாள்.

ஆனால் அதிலும் அவளுக்கு ஒரு ஏமாற்றம் ஏற்பட்டது. செல்வச் சீமானுக்குப் பிறந்த குழந்தையாகையால் டாக்டர்களின் விருப்பப்படி குழந்தையைப் பராமரிக்கப் பல வேலைக்காரர்களும் தாதிமார்களும் அமர்த்தப்பட்டனர். அதனால் மேரிக்குத் தன் இஷ்டம் போல் குழந்தையைத் தூக்கவோ, சீராட்டவோ சுதந்திரம் இல்லாமல் போய்விட்டது.

இந்தமாதிரி சம்பவங்கள் எல்லாம் சேர்ந்து மேரிக்குத் தன் வாழ்க்கையிலேயே கசப்பு ஏற்படும்படி செய்து விட்டன. அவள் கணவரோ வீட்டிலேயே இருப்பதில்லை. அவருடைய புகைப் படங்களும், பிரசங்கங்களும், பத்திரிகையில் வெளியாயின. ஜனங்கள் எல்லோரும் அவரைக் கௌரவப்படுத்தி மதித்து



வந்தனர். வீட்டில் கேளிக்கைகளும் விருந்துகளும் அடிக்கடி நடந்தன. இந்த வைபவங்களில் எல்லாம் மேரியினால் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை. இரவெல்லாம் தூக்கமின்றிக் கண் கலங்கினாள். மற்றவர்களைப் போல் தானும் இதிலெல்லாம் கலந்துகொண்டு அனுபவிக்க முடியவில்லையே என்று நினைத்துத் தன்னையே நொந்து கொண்டாள்.

இந்த நிலையில் ஒருநாள் மாலை தோட்டத்திற்குப் பின்னால் ஓடிய வாய்க்கால் ஓரமாக நடந்து சென்றாள் மேரி. சற்றுத் தூரத்தில் இருந்த வயல்களில் பயிர்கள் கதிர்களின் பாரம் தாங்காமல் சாய்ந்து காற்றில் அழகாக ஆடிக்கொண்டிருந்தன. மஞ்சள் வெய்யில் பட்டு மரக்கிளைகள் தகதக வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. வாய்க்காலின் தெளிந்த நீரோட்டத்தில் மீன்கள் துள்ளி விளையாடுவது தெரிந்தது.

அற்புதமான இந்த இயற்கைக் காட்சிகளில் மெய் மறந்து அங்கே கிடந்த பாறை ஒன்றில் மேரி உட்கார்ந்து கொண்டாள். அருகே இருந்த மரத்தில் இரண்டு மாடப் புறாக்கள் உட்கார்ந்திருந்தன. அவை தங்கள் பாஷையில் காதல் மொழிகளைப் பேசுவதுபோல் தோன்றியது மேரிக்கு. சற்றுத் தூரத்தில் வயலில் வேலை செய்யும் விவசாயத் தம்பதிகள் ஒரு மேட்டின் மீது உட்கார்ந்து வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டு, சிரமப் பரிஹாரம் செய்து கொண்டு உல்லாசமாக இருந்தனர்.

மேரியின் கண்களில் அவளையுமறியாமல் கண்ணீர் நிரம்பியது. அப்பொழுது ஒரு வாலிபன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு வெட்கமுற்றுச் சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மோஹினியின் வெற்றி

ராஜேந்திர சங்கர்

மனிதன் தன்னுடைய சொந்த முயற்சியினாலும் சாமர்த்தியத்தினாலும் பல அரிய காரியங்களைச் சாதிக்கிறான். அதில் கஷ்டமானதும், அதே சமயத்தில் பெருமையையும் சந்தோஷத்தையும் சௌகரியத்தையும் கொடுப்பது பணம் சேர்ப்பதுதான். இதை நன்றாக உணர்ந்தவர்களில் ராமனாதனும் ஒருவர். செல்வத்தைப் பெருக்குவதற்கான குணங்கள் அவரிடம் பொருந்தி யிருந்தன. ஊக்கம், உழைப்பு, காரியங்களைச் சமயம் பார்த்துச் சாதிக்கும் திறமை எல்லாம் சேர்ந்து அவருக்கு மேலும் மேலும் வெற்றியையும் புகழையும் அளித்து வந்தன.

செல்வப் பெருக்கினால் அடையும் சந்தோஷத்தில் தான் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளைச் செய்ய மனிதன் சில சமயம் மறந்து விடுகிறான்.

ராமனாதன் அந்த இனத்தைச் சேர்ந்தவரல்ல. ஏழை எளியவர்களுக்கும் பல சமூக சேவைச் சங்கங்களுக்கும் கணக்கில்லாமல் தானம் செய்து நல்ல பெயர் வாங்கி யிருந்தார். வேலை நேரம் போக மாலை நேரங்களில் நண்பர்களுடன் சம்பாஷிப்பதிலும், நாடகம், சினிமா முதலிய உல்லாசக் காட்சிகளிலும் ஈடுபட்டிருப்பார்.

அவருடைய பிரும்மாண்டமான அழகிய மாளிகை ராமனாதனின் செல்வச் செழிப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாக நின்றது. இதற்கெல்லாம் எஜமானியாக அழகும் குணமும் உள்ள மனைவியையும் பெற்றிருந்தார். கல்யாணமான இரண்டொரு வருஷங்களுக்குள்ளாகவே அவருடைய செல்வத்துக்கு வாரிசாக ஒரு மகனும் பிறந்து விட்டான்.

தம் மனைவிக்கு எதிலும் எந்த விதமான குறைவும் ஏற்படாமல் ராமனாதன் கவனித்து வந்தார். தனக்காக அவள் சிறிதளவு சிரமப்படுவதைக்கூடப் பொறுக்க மாட்டார்.

ஒரு நாள் இரவு நேரம் கழித்துத் திரும்பியபோது, ராமனாதனின் மனைவி நாற்காலியில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள். வழக்கமாக ராமனாதன் வரும் வேளைக்கு அவள் தூங்கிப் போயிருப்பாள். இன்று அவள் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது அவருக்கு அளவிலா வியப்பை உண்டாக்கியது. ஆயினும் அவ் வேளையில் மோஹினியுடன் தனித்துப் பேசச் சந்தர்ப்பம் ஏற்பட்டது அவருக்குச் சந்தோஷமாகவேயிருந்தது. மெதுவாக ராமனாதனும் அவள் அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். "மோஹினி! நீ ஏன் இன்னும் தூங்கவில்லை? தூக்கம் வரவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை; உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிச் சற்றுத் தயங்கினாள். அவளுடைய முக பாவத்திலிருந்து அவள் ஏதோ சொல்ல விரும்புகிறவளைப்போல் தோன்றியது.

"ஏன் மோஹினி! ஏன் தயங்குகிறாய்? உன்னைப் பார்த்தால் ஏதோ சொல்ல விரும்புகிறவளைப்போல் தோன்றுகிறதே? என்ன வேண்டும்? ஏதாவது புது மோஸ்தர் நகைகளா, அல்லது புதிய மோட்டாரா? எதுவாயிருந்தாலும் தயங்காமல் கேள்!" என்றார்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை. நான் ஒரு கதை எழுதி யிருக்கிறேன். அதைப் படித்துப் பார்த்து உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும்!"

"என்ன! கதையா? பேஷ், பேஷ்! என் அருமை மனைவி கதாசிரியையாக ஆகிவிட்டாளா? இப்படிக் கொடு! படித்துப் பார்க்கிறேன்! அருமையான வர்ணச் சித்திரங்களுடன் புத்தகமாகப் போட்டு உன் சிநேகிதிகளுக்கெல்லாம் பரிசாக அனுப்புவோம்!"

"ஐயோ! அப்படி எல்லாம் செய்து விடாதீர்கள்!" என்றாள் மோஹினி.



விகட சாமர்த்தியம் செய்தாலும் பாடகர்களை மீறி வாசிக்கும் வழக்கமே இவருக்கு இருந்ததில்லை. இவ்வளவு சௌக்கியமும் நயமும் பரபரப்பும் வாய்ந்த வாசிப்பை விரும்பாத வித்துவான்கள் யார்? எல்லா வித்துவான்களும் தம் கச்சேரிக்கு இவரைப் பக்க வாத்தியமாய் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டதில் வியப்பில்லை. லக்ஷண விஷயமான நுணுக்கங்களில் இவரைச் சோதிக்கலாம், அல்லது ஏமாற்றலாம் என்பது நடவாத காரியம். ஒரு சமயம் ஒரு வித்துவான் விரிபோணி வர்ணத்தை ஆதி தாளம் மிச்ர நடையில் அமைத்துப் பாடினார். அப்போது மிருதங்கம் வாசித்த பிள்ளையவர்கள் இது மிச்ர நடையில் பாடப்படுகிறதே என்ற விஷயத்தில் கொஞ்சமும் சோர்வடையாமல் லக்ஷிய ஞான பலத்தால் கச்சிதமாய் வாசித்து முடித்து விட்டார். ஆகவே தாளம், நடை-இவற்றை மாற்றிப் பாடிய சிரமம் பாடகரைத்தான் அடைந்ததேயன்றி இவரை அணுகவில்லை.

கச்சேரிகளில் தம் வாத்தியத்தில் எதிர்பாராத கோளாறுகள் ஏற்பட்டால் அவற்றை வெளியே காட்டாமல் வாசித்து நிர்வகிப்பாரே, யன்றி சபையோர் அதை அறியும்படி ஒருபோதும் காட்டிக்கொள்ளவே மாட்டார். உதாரணமாக, பாதிக் கச்சேரியில் மிருதங்கத்தின் சோறு அதிகம் உதிர்ந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுவோம். இதனால் ஏற்படும் மீட்டுச் சாப்பு வித்தியாசத்தை வெளிக் காட்டாமலேயே அதற்கேற்ற சொற்கள், மூடி வாசிக்கும் முறைகள் இவற்றைக் கையாண்டு வாசித்து நிர்வகிப்பார். வாத்தியம் ஒருவேளை கலைந்து கோளாறு செய்தாலும், அதில் ஏறக்குறைய நன்கு சேரும் கண்ணை வைத்துக்கொண்டே கச்சேரியைப் பரிமளிக்கச் செய்துவிடுவார். சங்கீத கலாநிதி பழமார்நேரி சுவாமிநாத ஐயருக்கு பிள்ளையவர்களின் வாசிப்பில் அசாத்தியப் பிரேமை உண்டு. ஒரு சமயம் பண்ருட்டியில் நடந்த அவருடைய கச்சேரியில் பிள்ளையவர்களின் மிருதங்கம் ஏற்பாடாகி யிருந்தது. அன்று பிள்ளையவர்களின் வாத்தியம் கண்கள் சேராமல் இடைஞ்சல் செய்ய ஆரம்பித்தது. அதை ஓசை பண்ணாமல் மெதுவாய்த் தட்டிப் பார்த்துக்கொண்டு, சேர்ந்திருந்த கண்ணையே வைத்துக்கொண்டு வாசித்துக் கச்சேரியைச் சோபிக்கச் செய்துவிட்டார். இதைக் கண்டு ஆச்சரியம் அடைந்த சாமிநாதய்யர், "சபாஷ்! அழகநம்பி! பாக்கிப் பேருக்கு எட்டுக் கண் விட்டெறிந்தாலும் போதவில்லை. ஆனால் உனக்கு ஒரு கண்ணே போதுமப்பா!" என்று சிலேடையாகக் கூறி மகிழ்ந்தார்.



முதல் பிரமுகர்:— ஏன் ஸார்! நேற்று அந்த சங்கீத சபாவிலே பிடில் வாசித்தவர் யாரு?

இரண்டாவது பிரமுகர்:— அது தெரியாதா, உங்களுக்கு? பாகவதருக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருந்தாரே, அவர்தான்!

வாத்தியக் கச்சேரிகளில் இவர் அபாரமாய் வாசிப்பாரென்றாலும், கோவிந்தசாமிப் பிள்ளையின் தனிப் பிடில் கச்சேரியில் இவருடைய வாசிப்பின் நயம், அழகு முதல்யவை உச்ச நிலையில் விளங்கின. இவர்கள் இருவருடைய வாசிப்பையும் இணை பிரியாதவை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இவர்கள் இருவரும் வாசிப்பில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் இணைபிரியாதவர்கள். அநேகமாய் கோவிந்தசாமிப் பிள்ளை பக்க வாத்தியமாய் அமைக்கப்படும் கச்சேரிகளில் அழகநம்பியாப் பிள்ளை மிருதங்கந்தான் இருக்கும். தவிர, திருவையாற்றில் ஸ்ரீ கோவிந்தசாமிப் பிள்ளை முன்னின்று நடத்திய ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவத்திலும் அன்னாருக்கு வலது புஜம்போல் இருந்து பெரிதும் ஈடுபட்டு உழைத்துக் கைங்கரியம் செய்து வந்ததை யாரும் மறக்க முடியாது.

ஸ்ரீ பிள்ளையவர்கள் சுபாவத்தில் மிகவும் அடக்கமானவர். வாழ்க்கையில் டாம்பீகம் என்பதை இன்னதென்றே அறியாதவர். பெரிய குடும்பி. தொழில் நடத்தும் விஷயத்தில் அசகாய சூரர். பிறரைப் பற்றி அதிகம் பேசமாட்டார். தமது பரம சிநேகிதரான கோவிந்தசாமிப் பிள்ளை காலஞ் சென்ற சில மாதங்களுக்கெல்லாம் இவரும் இறைவன் திருவடி யடைந்தார். இசைச் செல்வரில் ஒருவராகிய இவர் இன்றும் அழியாப் புகழுடன் விளங்கி வருகிறார்.

தான் வாசிக்க வேண்டும் என்றும் அவர் கிளர்ச்சி செய்தார். இந்தக் கிளர்ச்சியில் மறைமுகமாய் ஒரு சுயநலமும் இருந்தது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். காலக்ஷேபத் துறையில் பெரிய புரட்சியை உண்டு பண்ணிப் பொது ஜனங்களிடையே கதா காலக்ஷேபங்களுக்கு அளவற்ற ஆவலை உண்டாக்கியிருந்தார் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர். அநேக பாகவதர்கள் கதை செய்யக் கிளம்பிய காலம் அது. அந்தச் சந்தர்ப்பத்தில், நாட்டியக் கலைக்கு க்ஷீணம் ஏற்பட்டு விடுமோ என்ற தீர்க்க தரிசனத்தோடுதான் ஸ்ரீமான் நெல்லையப்பப் பிள்ளை இந்தக் கிளர்ச்சியைத் தீவிரமாய் நடத்தினார். ஆனால் பஞ்சாபகேச சாஸ்திரிகளோ, இதற்கு இடமே கொடுக்கவில்லை. "அழக நம்பியைவிட என் கதைகளில் இன்னும் அழகாக வாசிக்கக் கூடியவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அப்படி யாராவது இருந்தால் இப்போதே வரட்டும். தவிர, கதைகளுக்கு வாசிப்பவர்கள் பெஞ்சியில் உட்கார்ந்து வாசிப்பதுதான் முறை என்பதை வெகு காலத்திற்கு முன்னதாகவே தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதர் ஸ்தாபித்து விட்டார். ஆகவே அவரைப் பின்பற்றும் நாங்கள் மிருதங்கம் வாசிப்பவர்களைப் பெஞ்சியில்தான் வைத்துக் கொள்ளுவோம். 'அவர்கள் நின்று கொண்டுதான் வாசிக்க வேண்டும்' என்று கட்டுப்படுத்த இது பரத நாட்டியம் அல்ல; அல்லது 'தரையில் உட்கார்ந்து வாசிக்க வேண்டும்' என்பதற்கு இது சங்கீதக் கச்சேரியும் அல்ல. ஆகவே தொழில் நடத்தும் விஷயத்தில் எங்களுடைய சௌகரியத்தைக் கவனிக்க வேண்டியதுதான் முக்கியம். இந்த அனாவசியமான கிளர்ச்சிக்கு இடங் கொடுக்க முடியாது" என்று கண்டித்துப் பேசி நெல்லையப்பப் பிள்ளையின் கிளர்ச்சியைத் தவிடு பொடியாக்கி விட்டார். அன்று முதல் சென்னை முதலான எல்லா இடங்களிலும் அழகநம்பியாப் பிள்ளையின் புகழ் பரவ ஆரம்பித்தது.

இவ்விதம் சாஸ்திரிகளின் கோஷ்டியில் இருந்த சுமார் ஐந்தாறு வருஷ காலத்திற்கிடையில் ஏற்படும் அநேக பிரசித்த வித்துவான்களின் கச்சேரிகளுக்கும் வாசித்து அழக நம்பியாப் பிள்ளை புகழடைந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. முக்கியமாய் மைசூர் வீணை சேஷண்ணா, சுப்பண்ணா, ராமநாதபுரம் ஸ்ரீனிவாசய்யங்கார், கோனேரி ராஜபுரம் வைத்திய நாதையர், பாலக்காடு அனந்த ராம பாகவதர், பல்லடம் சஞ்சீவிராவ், பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை ஆகியோரின் கச்சேரிகளுக்கு வாசித்தார். தவிர மகா மேதாவியாகிய கடவாத்தியம் கிருஷ்ணய்யருடன் இவர் சேர்ந்து வாசிக்க நேர்ந்தபோது இவருடைய லக்ஷிய ஞான விசேஷத்தால் ஆங்காங்கு அழகாய்ச் சேர்ந்து வாசித்து விடுவார். இதனால் பஞ்சாபகேச சாஸ்திரிகள் தம் கதைகளுக்கு எப்படி அவரைப் பெரிதும் விரும்பினாரோ அதுபோல் ஒவ்வொரு வித்துவானும் தங்கள் தங்கள் கச்சேரிகளில் இவர் வாசிப்பதைப் பெரிதும் விரும்பினார்கள். ஆகவே பிள்ளையவர்கள் மெதுவாகக் காலக்ஷேப கோஷ்டியிலிருந்து விலகிக்கொண்டு கச்சேரித் துறையில் தமது கவனம் முழுவதையும் செலுத்தினார். இதனால் ஏராளமான கச்சேரிகளும் வருமானமும் கிடைத்தன.

இவ்விதம் வித்துவான்களும் ரசிகர்களும் விரும்பத்தக்க முறையில் இவரிடம் என்னென்ன யோக்கியதாம்சங்கள் இருந்தன என்பதைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

பிள்ளையவர்களுடைய அருமையான வாசிப்பில் இடைவிடாத விருவிருப்பு இருந்ததால் இவர் வாசித்த கதைகள், கச்சேரிகள் எல்லாம் ஆரம்பித்தவுடனேயே களை கட்டிவிடும்.

இவருடைய லக்ஷிய ஞானம் நிகரற்றது. எந்த உருப்படிக்கு வாசித்தபோதிலும் அடுத்த சங்கதி அல்லது சுரக் கற்பனை இப்படித்தான் இருக்கும் என்ற நிச்சயமான ஞானத்துடன் வெகு நாள் வாசித்துப் பழகியவர்போல் அனுசரித்து வாசித்துவிடுவார். இதனால் கச்சேரியில் எந்த பாகமும் சளிப்புத் தட்டாது.

பாட்டோடு ஒட்டுதலாய் வாசிக்கும் இவருடைய ஞானம் இணையற்றது. பாடகர் எந்த வழியில் போனாலும் 'பதியைப் பின்பற்றும் சதி'யைப்போல், பாடகரை விட்டு அணுவளவும் விலகமாட்டார். இந்த அனுசரிப்பினால் பாடகர்கள் செய்யும் சிறிய தவறுகள்கூட வெளிப்படாது. ஆகவே இவர் வாசித்த கச்சேரிகளின் படித்தரம் ஒருபோதும் குறைந்ததில்லை.

வித்துவான்கள் கற்பனை சுரங்கள், கற்று ஆவர்த்தங்கள் பாடுகையில், பிள்ளையவர்களின் கைகளில் பேசும் சில சொற்கட்டுகள் மேற்படி வித்துவான்களின் கற்பனை விந்யாஸங்கள் எந்த வழியில் போனாலும் அவற்றைப் பெரிதும் பரிமளிக்கச் செய்யக் கூடியவையாயிருந்தபடியால் கரகோஷங்கள் தாமாகவே கிளம்பிவிடும்.

பிள்ளையவர்கள் தனிப்பட்ட கற்பனைகளிலும் கோர்வைகளிலும் கணக்குகளிலும் தம்முடைய காலத்தைச் செலவழிப்பதே இல்லை. ஏனெனில் எவ்வளவு அகட

மிருதங்கம்... அழகநம்பியாப் பிள்ளை

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

இசைச் செல்வர்களில் சிலர் மிருதங்கம் வாசிப்பதில் இணையற்று விளங்குகிறார்கள். அவர்களில் அழியாப் புகழைப் பெற்ற அழக நம்பியாப் பிள்ளை ஸ்ரீரங்கத்தில் இசை வேளாளர் வகுப்பில் உதித்தார். இவருடைய முன்னோர்கள் மைசூர் சமஸ்தானத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டு வந்தவர்கள் என்று தெரிகிறது. இவர் மிருதங்கம் அப்பியாசம் செய்வதற்காக 1895-ல் தஞ்சாவூருக்கு வந்தார். தஞ்சையில் சிவஸ்வாமி அப்பாவின் குமாரர் மாதுசாமி அப்பாவிடம் இவர் முதலில் குருகுல வாசம் ஆரம்பித்தார். இவருடன் அக்காலத்தில் பயின்றவர்களில் தஞ்சாவூர் பக்கிரி, கங்காராம்ராவ், ஹரிராவ் முதலியோரைக் குறிப்பிடலாம். அந்தக் காலத்தில் தஞ்சையில் மிருதங்கம் வாசிப்பதில் பிரசித்தர்களாய் விளங்கிய நாராயணசாமி அப்பா, துக்காராம் ராவ், ராம்தாஸ் ஸ்வாமிகள், சேதுராமராவ் ஆகியோரின் கீர்த்தியே நமது பிள்ளையவர்களைத் தஞ்சைக்கு இழுத்து விட்டது என்றால் மிகையாகாது.

தவிர பரத நாட்டியங்களில் மிருதங்கம் வாசித்து நல்ல பெயருடன் விளங்கிய சாமிநாத பிள்ளையிடமும், கண்ணுசாமி நட்டுவனார், வடிவேல் நட்டுவனார் ஆகியோரிடமும் பரத நாட்டியங்களுக்கு வாசிக்கும் முறைகளாகிய கவுத்துவங்கள், அடவு ஜாதிகள், சொற்கட்டுகள், தீர்மானங்கள் ஆகியவற்றை அழக நம்பியாப் பிள்ளை வெகு நன்றாய்ப் பயின்றார். இவருடைய கைகளில் அந்தச் சொற்கள் பரபரப்புடனும் விருவிருப்புடனும் இருந்தபடியால், இவர் பரத நாட்டியங்களில் வாசிப்பதை எல்லோரும் பெரிதும் விரும்பினர். அனேக பிரசித்தி பெற்ற பெண்மணிகளின் நாட்டியங்களில் வாசித்து வெகு சீக்கிரத்தில் நல்ல புகழ் பெற்றார். காரைக்கால் அம்மணி என்ற பெண்மணியின் பரத நாட்டியத்தில் இவர் ஒரு சமயம் இணையற்ற கற்பனைகளுடன் விருவிருப்பாயும் சுகமாயும் வாசித்ததைக் கேட்டு ஆனந்தித்த சில ரசிகர்கள் இவருடைய கைகளில் பன்னீரை ஊற்றித் தங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டு புகழ்ந்தார்கள்.

இப்படி சுமார் நான்கு ஐந்து வருஷங்கள் பெயரும் புகழும் பெற்று இருந்ததோடு மட்டும் திருப்தியடையாத பிள்ளையவர்கள், அந்தக் காலத்தில் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளில் அடிக்கடி வாசித்து வந்த நாராயணசாமி அப்பா, துக்காராம், ராம்தாஸ் ஸ்வாமிகள் ஆகியோரின் வாசிப்பிலும், பாகவதரவர்கள் ஸெட்டுடன் வாசித்து வந்த மைலாட்டூர் கிருஷ்ணய்யரவர்கள் வாசிப்பிலும் பெரிதும் ஈடுபட்டு, அம்மாதிரிக் கதைகளுக்குத் தாமும் வாசித்துப் புகழடைய வேண்டும் என்ற திடமான சங்கல்பத்தைக் கொண்டார். கதைகளுக்கு வாசிக்கும் முறைகளைத் தனிமையில் ஓயாமல் சாதகம் செய்து வந்தார். பிள்ளையவர்களின் ஆர்வத்தை அறிந்த தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர் அவரை அடிக்கடி நாராயணசாமி அப்பாவின் பஜனைகளில் வாசிக்கச் செய்தும் தனிமையில் கதை உருப்படிகளை அடிக்கடி பாடிக் காட்டி உற்சாகப்படுத்தியும் வந்தார். வெகு சீக்கிரத்தில் கதைகளில் வாசிக்கும் முறைகளில் தேர்ச்சி பெற்றார் அழக நம்பியாப் பிள்ளை. பிறகு, அவர் பரதநாட்டியங்களில் வாசிப்பதை மட்டுப்படுத்திக்கொண்டு கும்பகோணம் போய்ச் சேர்ந்தார். ஆகவே இதுவரை "தஞ்சாவூர் அழகநம்பி" என்று அழைக்கப்பட்ட இவர் "கும்பகோணம் அழக நம்பி"யாக மாறினார்.

கும்பகோணத்தில் ஒரு சமயம் திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகளின் கதையில் இவர் வாசிக்க நேர்ந்தது. அப்போது இவருடைய வாசிப்பில் அளவில்லா பிரமையை யடைந்த சாஸ்திரிகள் அழகநம்பியாப் பிள்ளையைத் தம் கோஷ்டியில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார். சாஸ்திரிகளின் கோஷ்டியோடு முதன் முதலில் இவர் சென்னையில் வாசிக்கப் போனபோது அங்கு எதிர்பாராத ஓர் கிளர்ச்சி ஏற்பட்டது. அதாவது, அந்தக் காலத்தில் பரத நாட்டியக் கலையில் பேராசிரியராய் விளங்கிய சென்னை செல்லையப்பபிள்ளை என்பவர்தான் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தார். பாகவதர்கள் நின்று கொண்டும் மற்றப் பிரமுகர்கள் கீழே உட்கார்ந்து கொண்டும் கதைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது இசை வேளாளர்களைப் பெஞ்சியில் உட்கார்ந்து வாசிக்க அனுமதிக்கவே கூடாதென்றும், வேண்டுமானால் அழக நம்பியாப் பிள்ளை நின்று கொண்டோ. அல்லது கீழே உட்கார்ந்து கொண்டோ

னும் வணங்கக் கூடிய பெரியவருக்குச் சிசுருஷை செய்யும் பேறு கிடைக்கவே என்று எண்ணி இவர்கள் இறும்பூது கொள்ளவில்லை. ஏசுவையும், சோக்ரதரையும் கஷ்டப் படுத்தியவர்கள் அறியாமையில் மூழ்கியவர்கள் ஆனால் காந்திஜி எத்தகையவர் என்பதை அவருடைய எதிரிகள் கூட உணரும்படி உலகப் பிரமுகர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆகவே காந்திஜியைச் சிறையில் கஷ்டப் படுத்தும் இந்த அற்ப அதிகாரிகளுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது இந்தப் பெரும் பொறுப்பை இந்த அற்ப புத்தியுள்ள சிறை அதிகாரிகளிடம் ஒப்புவித்து விட்ட சர்க்காரைப் பற்றித்தான் என்னவென்று கூறுவது!

"காந்திஜி தம்முடைய சொந்தப் படுக்கையை உபயோகிக்கவும் அநுமதிக்கப் படவில்லை. சிறையில் கொடுக்கும் கம்பளியில் படுத்துக் கொள்கிறார். தலையணை கூடக் கொடுக்கவில்லை.

"காந்திஜி பெரும்பாலும் பழ உணவு அருந்தி வாழ்கிறவர் என்பது பிரசித்தம். ஆயினும் சிறையில் அவருக்கு இரண்டு ஆரஞ்சுப் பழம் எண்ணிக் கொடுக்கிறார்கள். கொஞ்சம் ரொட்டியும் வெள்ளாட்டுப் பாலும் அளந்து கொடுக்கிறார்கள். இந்தச் சொற்ப உணவைக் கொண்டே காந்திஜியும் வற்றி உலர்ந்து போன உடம்பைக் காப்பாற்றிக் கொள்வார். அவருக்குப் போதிய உணவு தரவில்லையே என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் சிறை அதிகாரிகள் இந்தத் தெய்வ மனிதரை அறிந்து நடக்கத் தெரியாத குருடர்களாயிருக்கிறார்களே என்றுதான் வருந்துகிறேன்.

"தூக்குத் தண்டனைக் கைதிகளைத் தனி அறையில் அடைத்திருப்பது போல் மகாத்மாஜியையும் அடைத்து வைக்கிறார்கள். இரவில் அறையில் போட்டுப் பூட்டிவிடுகிறார்கள். வராந்தாவில் படுக்கும்படி விட்டால் ஓடிப் போய்விடுவார் என்ற பயம் போலும்! பக்கத்தில் பேச்சுத் துணைக்கு ஒரு மனிதரும் கிடையாது. அவர் வழக்கமாகப் பாராயணம் செய்யும் மத நூல்கள் வேண்டுமென்றால் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டுமாம்! படிக்கப் புத்தகமும் இல்லாமல் பேச்சுத் துணைக்கு ஆளும் இல்லாமல் தனி அறையில் மகாத்மாஜியை வைத்திருப்பது என்றால், இதை வெறுங்காவல் என்று சொல்ல முடியுமா? கடுங்காவலை விடக் கேடானது ஆகாதா?

"இதெல்லாம் ஏமாற்றமாயும் துயரமாகவுமே இருக்கிறது. ஆயினும் நம்முடைய பெருந் தலைவரை இந்தக் கஷ்டங்கள் எல்லாம் ஒன்றும் செய்து விட மாட்டா என்று நாம் ஆறுதல் அடையலாம். அரசாங்கத்தின் அற்பத்தனத்தைக் கண்டு நாம் கோபம் கொள்ளக் கூடாது. அது நம் தலைவரின் போதனைக்கு மாறானது. பொறுமையைக் கடைப் பிடித்து மகாத்மாவின் கட்டளைகளைக் காரியத்தில் நிறைவேற்ற வேண்டும். அதுதான் நமது கடமை."

இவ்விதம் ராஜாஜி விடுத்த அறிக்கையானது தேசமெங்கும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது. அதிகார வர்க்கத்தின் தூங்கும் மனச் சாட்சி கூட விழித்து எழுந்தது. மகா வீரனைப் நெப்போலியனை ஸெண்ட் ஹெலீனா என்னும் தீவில் சிறைப் படுத்தித் துன்புறுத்திய பழிச் சொல் பிரிட்டிஷாரை ஏற்கனவே அடைந்திருக்கிறது. மகாத்மாவைச் சிறையில் கேவலமாக நடத்தினார்கள் என்னும் அபகீர்த்தியும் தங்களை வந்து அடைவதற்குப் பிரிட்டிஷார் விரும்பவில்லை. உடனடியாக மகாத்மாவை நடத்தும் விதத்தில் சில நல்ல மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனால் செய்த தவறை ஒப்புக் கொண்டால் அதிகார வர்க்கத்தின் மதிப்புக்குப் பங்கம் வந்துவிடுமல்லவா? ஆகையால் ராஜாஜியின் அறிக்கையில் கண்ட விஷயங்களை மறுத்துச் சர்க்கார் அறிக்கை ஒன்றும் வெளி வந்தது அதில், காந்திஜிக்குச் சிறையில் செய்து கொடுத்திருக்கும் சௌகரியங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆனால் இம்மாதிரி முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் காரியம் ராஜாஜியிடம் பலிக்குமா? மீண்டும் ராஜாஜி விடுத்த அறிக்கையில், சர்க்கார் அறிக்கையை வரிவரியாக எடுத்துப் பிய்த்து வாங்கி விட்டார். அந்த அறிக்கையில் குறிப்பிட்ட வசதிகள் எல்லாம் தாம் மகாத்மாவைச் சந்தித்த பிறகு செய்து கொடுத்தவையாகவே இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டினார்.

ஆக முடிவில் காந்திஜியைச் சிறையில் நல்லபடியாக நடத்துவதற்கு ஏற்பாடு ஆயிற்று. இதை அறிந்து தேச மக்கள் ஒருவாறு மன அமைதி பெற்றனர்.

* "மாந்தருக்குள் ஒரு தெய்வம்" இரண்டாம் பாகம் முற்றுப் பெற்றது.


★ இந்தத் தலைப்பின் கீழ் சென்ற இரண்டு ஆண்டுகளாகக் 'கல்கி'யில் வெளியாகிக் கொண்டிருந்த காந்தி மகான் சரித்திரம் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. மீண்டும் உசிதமான சமயத்தில் மூன்றாம் பாகம் ஆரம்பிக்கப்படும்.

மகா பாக்கியம் கிடைத்திருக்கிறது என்பதை உணர்ந்து நடப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம். அற்பத்தனமான பழி வாங்கும் நோக்கத்துடன் காந்திஜியைச் சிறையில் நடத்தமாட்டார்கள் என்று நம்பினோம். இப்படியெல்லாம் எதிர்பார்த்ததில் மிகப் பெரும் ஏமாற்றம் அடைந்தோம்.


“காந்திஜியின் கடைசிப் புதல்வர் ஸ்ரீ தேவதாஸும் நாமும் மகாத்மாவின் விசாரணையின்போது கோர்ட்டில் இருக்கக் கொடுத்து வைக்கவில்லை. எங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தோம். ஆகையால் ஏப்ரல் மீ 1உ மகாத்மாவைச் சிறை விதிகளின்படி பேட்டி கண்டு வருவதற்காகச் சென்றோம். சிறை வாசலில் நின்று இரும்புக் கம்பிகளின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். சில நிமிஷத்துக்கெல்லாம் அரைத் துணி மட்டும் உடுத்த அந்த மெலிந்த உருவம் குதித்தோடி வந்ததைக் கண்டதும் எங்கள் இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. ஜெயில் சூபரிண்டெண்டின் அறைக்குள் அவரை இட்டுச் சென்று, எங்களையும் அங்கு வரச் சொல்லி அழைத்துச் சென்றார்கள். அதிகார வர்க்க அமுல் சட்டத்தின் பிரகாரம் சிறையின் அரசராகிய சூபரிண்டெண்ட் துரை தம்முடைய சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். மகாத்மாஜியோ நின்று கொண்டே எங்களுடன் பேசும்படி நேர்ந்தது. பேச்சின் நடுவே ஜெயில் சூபரிண்டெண்டும் ஜெயிலரும் அடிக்கடி குறுக்கிட்டபடியால் எங்களுடைய சம்பாஷணையின் நேரமும் எதிர்பார்த்ததைவிட நீண்டு விட்டது.

“என்னதான் மூடி மறைக்கப் பார்த்தாலும் எங்களுக்கு உண்மை இன்னதென்பது தெரிந்து விட்டது. அதனால் அளவில்லா ஏமாற்றமும் உண்டாயிற்று. சிறை அதிகாரிகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பு எவ்வளவு மகிமை வாய்ந்தது என்பதை உணர்ந்து கொள்ளவில்லையென்பதைக் கண்டோம். நீதிபதி புரூம்பீல்டின் பண்பாடு இவர்களுக்கில்லை. ஆகையால் காந்திஜி எப்படிப் பட்டவர் என்பதையும் இவர்கள் கண்டு கொள்ளவில்லை. கெயிஸரையும், நெப்போலியனையும்விட எத்தனையோ மடங்கு உயர்ந்த மகான் என்பதை இவர்கள் அறியவில்லை. உலகமே போற்றி வணங்கக்கூடிய அவதார புருஷர் நம்முடைய பொறுப்பில் விடப்பட்டிருப்பது நம் பூர்வ ஜன்ம பாக்கியம் என்று இவர்கள் பெருமையடையவில்லை. சோக்ரதர் என்ன, கௌதமபுத்தர் என்ன, ஏசுநாதர் என்ன, இப்படிப்பட்ட மகாபுருஷர்களின் வரிசையில் சேர்த்து மண்ணுலகும் விண்ணுல

நாட்டுக்கு வந்தால்!



காட்டிலுள்ள மிருகங்கள்....



மரியாதையுடன் நடத்தவேண்டும் என்று சொல்லவும் வேண்டுமா?

ஆம்; சொல்ல வேண்டியதில்லைதான். இந்திய அதிகார வர்க்கத்தார் எவ்வளவு மோசமானவர்களாயினும் அவர்களுக்குக் கூட இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டியதில்லை என்றே எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் எல்லாரும் நினைத்தது தவறு என்று சீக்கிரத்திலேயே தெரிய வந்தது! அந்த விஷயத்தை அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லவேண்டிய அவசியம் நேரிட்டது. இந்த அவசியத்தை நேரில் பார்த்து வற்புறுத்திச் சொன்னவர் நம்முடைய தலைவர் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்.

* * *

காந்திஜியின் விசாரணை நடைபெற்ற சமயத்தில் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் வேலூர் சிறைச்சாலையில் இருந்தார். காந்திஜி சிறைப்பட்ட சில தினங்களுக்கெல்லாம் ராஜாஜி விடுதலையடைந்தார். அவரும் மகாத்மாவின் கடைசிப் புதல்வரான ஸ்ரீ தேவதாஸ் காந்தியும் மகாத்மாவைப் பேட்டி காண்பதற்காகப் பூனாவுக்குப் போனார்கள். சிறையில் மகாத்மாவைக் கண்டு பேசினார்கள். அங்கே கண்டதும் கேட்டறிந்ததும் அவர்களுடைய மனதைப் பெரிதும் புண்படுத்தின. மகாத்மாவைச் சிறையில் சரியானபடி நடத்தவில்லையென்பதை அவர்கள் கண்டறிந்தார்கள். மறுநாள் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்தார். "யங் இந்தியா"வில் ஒரு கட்டுரையும் எழுதினார். உண்மையுடனும் உணர்ச்சி வேகத்துடனும் எழுதப்பட்ட அக்கட்டுரையின் சாராம்சம் பின்வருமாறு:—

"கைதிக் கூண்டில் நின்ற மகாத்மாவைப் பார்த்து நீதிபதி ப்ரூம்பீல்டு மிக அழகான சில வார்த்தைகளைச் சொன்னார். 'இதுவரை உங்களைப்போன்ற ஒருவரை நான் விசாரித்ததுமில்லை; இனி விசாரிக்கப் போவதுமில்லை. இந்த தேசத்தின் கோடிக்கணக்கான மக்கள் உங்களை ஒரு மகா தேசபக்தராகவும் மாபெருந் தலைவராகவும் எண்ணிப் போற்றுகிறார்கள். உங்களுடன் அரசியலில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும் உங்களை உத்தம இலட்சியங்களையுடைய சத்புருஷர் என்று மதிக்கிறார்கள்.'

"இவ்விதம் நம்முடைய எதிரி என்று நினைக்கக் கூடியவர் பகிரங்கமாகச் சொன்னதிலிருந்து மகாத்மாவின் உடலைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள சிறை அதிகாரிகள் தங்களுக்கு எப்பேர்ப்பட்ட

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

41. சிறை வாழ்வு

பூனாவுக்குச் சமீபத்தில் எரவாடா என்ற பெயரையுடைய ஊர் ஒன்று இருக்கிறது. அந்த ஊரைப் பற்றியாவது அதில் உள்ள பெரிய சிறைச் சாலையைப் பற்றியாவது அதற்கு முன்பு பலருக்குத் தெரியாது. தெரிந்த சிலரும் அந்த ஊரைப் பற்றி அதிகமாகச் சிந்தித்ததில்லை. திடீரென்று எரவாடா சிறை இந்தியா தேசத்தின் கவனத்தைக் கவர்ந்தது. சரித்திரத்திலே தனக்கு ஓர் இடத்தையும் சம்பாதித்துக் கொண்டது.

காந்திஜியின் விசாரணை, தீர்ப்பு எல்லாம் முடிந்ததும் அவரைச் சபர்மதி சிறையிலிருந்து எரவாடாவிலிருந்த பெரிய சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

சிறைக் கதவு மூடியதும் மகாத்மாவின் உள்ளத்தில் நீண்ட காலமாக அவரை விட்டுப் பிரிந்திருந்த சாந்தி மீண்டும் வந்து குடிகொண்டது. அவ்வாறே வெளியில் இந்தியா தேசத்தின் நாடு நகரங்களிலும் அமைதி குடி கொண்டிருந்தது.

காந்திஜி ஆறு வருஷம் தண்டனை அடைந்த செய்தி மக்களின் உள்ளத்தில் பெருங் கலக்கத்தை உண்டாக்கியது. ஆயினும் அதன் காரணமாக நாட்டில் எங்கும் கலகம் அல்லது குழப்பம் ஏற்படவில்லை. கடையடைப்பு. ஊர்வலம் முதலியவையும் நடைபெறவில்லை.

இது விஷயத்தில் காந்திஜியின் இறுதிக் கட்டளையை நாட்டு மக்கள் பரிபூரணமாக நிறைவேற்றி வைத்தார்கள்.

"நான் சிறைப்பட்டால் கடை யடைப்பு வேண்டாம்; கூட்டமும் வேண்டாம்!" என்று காந்திஜி திருப்பித் திருப்பி வற்புறுத்தி யிருந்தது மக்களின் மனதைப் பண்படுத்தி யிருந்தது. அதைக் காட்டிலும் சௌரி சௌரா சம்பவங் காரணமாக மகாத்மா மேற்கொண்ட பிராயச்சித்தமும் மக்களின் கண்களைத் திறந்திருந்தது.

'அஹிம்சை' என்று மகாத்மா சொல்வது ஏதோ காரணார்த்தமாக வெளிக்குச் சொல்லும் விஷயம் அல்ல வென்பதையும், அஹிம்சை அவருடைய ஜீவிய தர்மம் என்பதையும் மக்கள் அறிந்து கொண்டு விட்டார்கள். அவ்விதம் அறிந்துகொண் டிருந்ததைக் காந்திஜி சிறைப்பட்ட சமயத்தில் நிரூபித்தும் காட்டி விட்டார்கள்.

* * *

தென்னாப்பிரிக்காவிலிருந்து மகாத்மாஜி திரும்பி வந்ததிலிருந்து அவர் விஷயத்தில் இந்திய அரசாங்கத்தார் தனி மரியாதையுடனேயே நடந்து வந்தார்கள். அவருடைய நடவடிக்கைகளைத் தடை செய்ய நேர்ந்த காலங்களிலும் சர்வ ஜாக்கிரதையுடன் காரியம் செய்தார்கள். இரண்டு மூன்று தடவை அவரைக் கைது செய்து உடனே விட்டு விட்டார்கள். கோர்ட்டில் விசாரணை நடந்து மகாத்மாவைத் தண்டித்துச் சிறைக்கு அனுப்பியது இதுதான் முதல் தடவை! இந்த விசாரணையின்போது நீதிபதி புரூம் ஃபீல்டு வெகு கண்ணியமாக நடந்துகொண்டார். மகாத்மாவை மிக்க மரியாதையுடன் நடத்தினார். தீர்ப்பிலேயே "மகாத்மா மற்ற சாதாரணக் கைதியைப் போன்றவர் அல்ல" என்பதையும் குறிப்பிட்டார்.

இதனாலெல்லாம் சிறையிலும் மகாத்மாவைச் சரியாக நடத்துவார்கள் என்றும் அவருக்கு அவசியமான சௌகரியங்களைச் செய்து கொடுப்பார்கள் என்றும் அனைவரும் எதிர்பார்த்தார்கள். முப்பத்தைந்து கோடி மக்களின் ஒப்பற்ற தலைவரைச் சிறையிலே அடைத்தாலும், அங்கேயும் சம அந்தஸ்துள்ள அரசரை நடத்துவது போல் அல்லவா நடத்தவேண்டும்! உலகத்தை உய்விக்க வந்த அவதார புருஷர் என்று கோடிக்கணக்கான மக்கள் கொண்டாடும் தலைவரை எவ்வளவு மரி

கன் சிவபெருமான் செவிகுளிர மொழிந்த உபதேசத்தைக் கேட்டோம்; கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசி மொழிகளைக் கேட்டோம்; நாரத முனிவருடைய தம்புரா சுருதியைக்கேட்டோம்; இராவணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்து வாசித்த கானத்தைக் கேட்டோம்; கானப் பறவைகளின் கலகல த்வனியைக் கேட்டோம்; கோலக் குயில்களின் குரல் இனிமையைக் கேட்டோம்......

இவ்விதம் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை தோடி வாசித்துக் கொண்டிருந்த வரையில் நம்முடைய உள்ளமும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் களித்துக் கொண்டிருந்தது. அவர் வாசிப்பை நிறுத்தியதும் நாமும் இந்தப் பூவுலகத்துக்கு வந்து இத்தனை நேரமும் நாம் அனுபவித்த இன்பங்கள் எல்லாம் கனவோ, நினைவோ என்ற வியப்பில் மூழ்கினோம்.

• • •

கர்நாடக சங்கீதத்தில் தோடி ஓர் அபூர்வமான ராகம். அந்த ராகத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு பூரண ஸ்வரங்களுடன் ஜீவகளை தோன்றப் பாடுவதும் வாத்தியத்தில் வாசிப்பதும் அபூர்வமான சாதனை. ஆகையினாலேயே தோடி ராகத்தை விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொன்னோம். அந்த ராகத்தை அவ்வளவு அற்புதமாக ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை கையாளுகிறார் என்றால், அவர் மற்ற ராகங்களை எப்படி விந்தைகள் தோன்ற வாசிக்கிறார் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கல்யாணி, காம்போதி போன்ற பழமையான ராகங்களை வாசித்தாலும் சரி, அல்லது ஜகதலப்பிரதாபப் பிரியா, ஜவாஹர்லால் மனோகரி போன்ற புதிய ராகங்களை வாசித்தாலும் சரி, ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தனி மெருகு வாய்ந்த கற்பனைத் திறனையும் இனிய மழலை ஓசையையும் அவருடைய வாசிப்பில் காண்போம்; கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து உலகத்தை மறப்போம்.

• • •

ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் நண்பர்கள் அவருக்கு 'அகில உலக நாதஸ்வர ஏக சக்ராதிபதி' என்ற பட்டத்தைச் சூட்டியிருக்கிறார்கள். இதை ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையும் ஏற்றுக் கொண்டு கடிதத் தலைப்புகளில் அச்சடித்திருக்கிறார். இவ்வளவு படாடோபமான பட்டத்தைக் குறித்து 'நாஸூக்' மனிதர்கள் புன்னகை புரிவார்கள். நாமும் அந்தப் பட்டங்களை அவ்வளவாக ரஸிக்கவில்லைதான். ஏனெனில், இந்தக் காலத்தில் 'ராஜா' 'மன்னர்' 'சக்கரவர்த்தி' முதலிய பட்டங்கள் அவ்வளவு மதிப்புப் பெற்றிருக்கவில்லை. மதிப்பை இழந்த பட்டங்களுக்கும் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையினால் அல்லவா அசாவசியமாக மதிப்பு உண்டாகி வருகிறது?


மற்றபடி, 'ராஜா' 'சக்கரவர்த்தி' என்னும் பட்டங்களுக்கு மதிப்புள்ள காலமாயிருந்தால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை 'அகில உலக நாதஸ்வர சக்கரவர்த்தி' என்ற பட்டத்துக்குப் பொருத்தமானவர் என்பதில் ஐயமில்லை. கர்நாடக சங்கீத உலகத்தில் நாதஸ்வர வாத்தியம் ராஜ சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறது. அந்த ராஜ வாத்தியத்தை இணையில்லா கற்பனைத் திறனுடன் கையாண்டு அந்த வாத்தியத்துக்கு முன் எப்போதுமில்லாத பெருமையை ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அளித்திருக்கிறார். அப்படியிருக்கும் போது 'நாதஸ்வர சக்கரவர்த்தி' என்று அவரை ஏன் சொல்லக் கூடாது?

• • •

சமூக வாழ்க்கையை யொட்டிய லௌகிக விவகாரங்களில் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையைப் பற்றிச் சில குறைகள் சொல்லப்படுவதுண்டு "கச்சேரிக்கு ஒப்புக் கொண்டு வராமலிருந்து விடுவார்" என்பார்கள். "வந்தாலும் சரியான சமயத்துக்கு வந்து சேர மாட்டார்" என்பார்கள். "சரியான சமயத்துக்கு வந்தாலும் மனது வைத்து வாசிக்க மாட்டார்; ஏமாற்றிப் போடுவார்!" என்பார்கள்.

இந்த மாதிரி குறைகள் சொல்வதற்கு இடமில்லாதபடி ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை நடந்து கொண்டால் நல்லதுதான். ஆனால் இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையிடம் அவருடைய கலை மேதையும் கற்பனைத் திறனும் இல்லாமலிருந்தால் நாம் திருப்தியடைய முடியுமா? ஒரு நாளும் இல்லை. "பூலோகத்துக்கு வரும் போது அவரிடம் இம்மாதிரி குறைகள் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் சங்கீத உலகில் சஞ்சரிக்கும்போது அவர் கற்பனையின் உச்சியில்—கலையின் சிகரத்தில்,-இப்போதுள்ளதுபோல் எப்போதும் இருக்கவேண்டும்" என்றுதான் ரஸிகர்கள் ஒருமுகமாய்க் கூறுவார்கள். அவ்விதமே நாமும் சங்கீத தேவதையிடம் விண்ணப்பம் செய்து கொள்கிறோம்.

நாதஸ்வர சக்கரவர்த்தி



தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நெடுங்காலம் நடந்து வந்த போர்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அதே மாதிரியாக ஸ்வரங்களுக்கும் அபஸ்வரங்களுக்கும் நீடித்த பெரிய யுத்தம் ஒரு காலத்தில் நடந்தது. இந்த யுத்தத்தில் அபஸ்வரங்களின் கட்சி ஜயித்து விடுமோ என்று ஒரு சமயம் பீதி யுண்டாயிற்று. ஏனெனில் ஸ்வரங்களின் சைன்யம் கணக்குக்கும் வரையறைக்கும் உட்பட்டது. இத்தனை வீரர்கள்தான் என்று எண்ணி விடலாம். அந்த வீரர்கள் இன்னின்ன ஸ்தானத்திலே நிற்க வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. ஆனால் அபஸ்வரங்களின் சைன்யமோ இராவணனுடைய மூலபலத்தைப் போல அளவிட முடியாத எண்ணிக்கை கொண்டதாயிருந்தது. புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப் போல அபஸ்வர சேனா வீரர்கள் முடிவில்லாமல் வந்து கொண்டிருந்தார்கள். வரை துறை, ஒழுங்கு, கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் நினைத்த நினைத்த வேளைகளிலெல்லாம் கிளம்பிக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் புகுந்து தாக்கினார்கள். ஸ்வரங்களின் பாடு மிக ஆபத்தாய்ப் போய்விட்டது. இந்தப் பூவுலகத்திலிருந்து அடியோடு அழிந்து போக வேண்டியதாக நேருமோ என்று ஸ்வரங்கள் பீதியுற்றுத் தங்களுடைய தாயாகிய சங்கீத தேவதையிடம் சென்று முறையிட்டன. சங்கீத தேவதையும் அபஸ்வரங்கள் படுத்திய பாட்டினால் மிகவும் நொந்து போயிருந்தாள். "வாருங்கள்; குழந்தைகளே! நாதப் பிரம்மமாகிய நம் இறைவனிடம் போய் முறையிடுவோம்!" என்று ஆறுதல் சொல்லி அழைத்துப் போனாள். நாதஸ்வரத்தின் சந்நிதிக்குச் சென்று சங்கீத தேவதையும் அவளுடைய குழந்தைகளாகிய ஸுஸ்வரங்களும் முகாரி ராகத்தில் தங்களுடைய சோகக் கதையைச் சொல்லிப் புலம்பினார்கள். அதனால் மனமிரங்கிய நாதப் பிரம்மம் தமது சந்நிதானத்தில் நின்ற வீரர்களில் சிலரைப் பார்த்து, "நீங்கள் பூவுலகத்தில் போய்ப் பிறந்து அபஸ்வரங்களை அதம் செய்து ஸுஸ்வரங்களின் ஆட்சியை நிலை நாட்டி வாருங்கள்!" என்று அருள் புரிந்தார்.

அவ்வாறு நாதப் பிரம்மத்தின் கட்டளைக்கு உட்பட்டுப் பூலோகத்தில் பிறந்த கான வீரர்களில் ஒருவர் 'கல்கி'யின் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறார். அந்த கானவீரரின் பெயர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை.

* * *


இந்த நாளில் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள் பல விதங்களில் கொடுத்து வைத்தவர்கள். சிறப்பாக, சங்கீத உணர்ச்சி வாய்ந்தவர்களுக்குத் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வர கானத்தைக் கேட்பது வாழ்வில் ஒரு மிகச் சிறந்த அநுபவமாயிருக்கும். அவருடைய வாசிப்பைக் கேட்டு ஆனந்திக்கக் கொடுத்து வைத்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். நம்மைக் காட்டிலும் கர்நாடக சங்கீதக் கலை அதிக அதிர்ஷ்டசாலி. கர்நாடக சங்கீதத்திலும் தோடி ராகத்தின் அதிர்ஷ்டத்தை இவ்வளவென்று சொல்லி முடியாது.

இதற்கு முன்னால் தென்னாட்டில் எவ்வளவோ வித்வான்கள் தோடி ராகத்தைச் சிறப்புறக் கையாண்டு புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையோ தோடி ராகத்தைச் சக்கரவர்த்தியின் சிம்மாதனத்திலேயே ஏற்றி வைத்து விட்டார். மற்றப் பெரிய வித்வான்களெல்லாம் தோடி ராகத்தைக் கையாண்டதனால் தாங்கள் புகழ் பெற்றார்கள். ஆனால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை தோடியைக் கையாண்டதனால் தோடி ராகம் புகழ் பெற்றது.

ஆஹா! ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தோடி ஆலாபனையை முதன் முதலில் கேட்ட போது, அவருடைய கற்பனையை விட்டுத் தள்ளுங்கள்,—நம்முடைய மனதில் என்னென்ன இன்பமயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன!

குழந்தை தாயிடம் கெஞ்சும் குரலைக் கேட்டோம்; அன்னை குழந்தையிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம்; ரதியும் மன்மதனும் பேசிக் கொண்ட காதல் மொழிகளைக் கேட்டோம்; முரு

எங்கும் உஷ்ணம்!


ஐ. நா. சபை பொதுக் காரியதரிசி டிரைகிவ் லீ ஸ்டாலினின் மனம் குளிரும்படி செய்து அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள உஷ்ணத்தைத் தணிப்பதற்காக மாஸ்கோ சென்றுள்ளார்.
சர்ச்சிலின் கண்டனத் தீயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள என்ன வழி என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி தவித்துக் கொண்டிருக்கிறார்.
கண்டனத் தீர்மானம்
கண்டனம்
டில்லி உஷ்ணம் தாங்க முடியாமல் சர்தார் வல்லபாய் பட்டேல் குளிர்ந்த கடலின் வழியாகக் கொச்சிக்கு யாத்திரை சென்றார்.
ஐ. என். எஸ். டில்லி
உணவு மந்திரிசபையின் உஷ்ணம் தாங்க முடியாமல், அதாவது உணவுப் பிரச்னை-யைச் சமாளிக்க முடியாமல் இந்திய சர்க்கா உணவு மந்திரி ஜெயராம்தாஸ் தௌலத் ராம் அஸ்ஸாமிலுள்ள குளிர்ந்த மலைக்குப் பிரயாண-மானார்.
உணவு மந்திரிசபை

அவை அற்ப சொற்ப மானவை அல்ல; இந்தியாவின் எதிர்கால விதியையே நிர்ணயிக்கக் கூடிய பிரச்னைகள் ஆகும். அவை, அன்னியர்கள் இந்த நாட்டில் சிருஷ்டித்துச் சென்ற பிரச்னைகளைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகச் சிக்கலானவை.

பாரதநாடு பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பது, மேற்படி பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்ப்பதில் ஜனங்களுக்குள்ள சக்தியையே பொறுத்திருக்கிறது.

* * *

பாரத நாட்டு மக்களுக்கு அத்தகைய சக்தி இருக்கிறதா?

சென்ற வாரம் திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானத்துக்கு விஜயம் செய்த நமது மாபெரும் தலைவர் சர்தார் பட்டேல் அந்தக் கேள்விக்குத் தகுந்த விடை யளித்திருக்கிறார்.

டில்லியி லிருந்து பம்பாய்க்குச் சென்று, அங்கிருந்து கப்பலில் கொச்சிக்குப் புறப்பட்ட சர்தார் பட்டேலின் பிரயாணம் மிகவும் அமைதியாகவும் திருப்திகரமாகவும் இருந்ததாம்.

அவருடைய கடல் யாத்திரை கவலைக் கடலிலிருந்து அவருக்குத் தற்காலிகமாக விடுதலை அளித்ததாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அதாவது, தங்களுடைய வாழ்க்கையைத் தேசத் திருப்பணிக்காக அர்ப்பணம் செய்து, சர்வபரித் தியாகம் செய்து, நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த அரும் பெரும் தலைவர்கள் அமைதியுடனும் ஆனந்தமாகவும் இருக்க முடியவில்லை; தேசம் சுதந்திரம் பெற்ற பின்தான் அவர்களுடைய கவலைகள் அதிகமாகி யிருக்கின்றன; தேசத்தின் கஷ்டங்கள் எல்லை கடந்திருக்கின்றன; மக்களின் துன்பம் சகிக்க முடியாததாக இருக்கிறது என்றால், அத்தகைய துக்ககரமான நிலைமைக்கு யார் பொறுப்பாளி?

திருவனந்தபுரத்தில் நடந்த பதினைந்து லக்ஷத்துக்கும் அதிகமான ஜனங்கள் அடங்கிய பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் சர்தார் பட்டேல் பேசியபோது, ஜனங்களின் சக்தியை எடுத்துக் காட்டினார். இந்தியாவை ஆக்குவதோ அல்லது அழிப்பதோ ஜனங்களின் கையில் இருக்கிறது என்பதை வலியுறுத்தினார். இனிமேல் காங்கிரஸையோ, தலைவர்களையோ, சர்க்காரையோ தூற்றுவது எவ்வளவு அர்த்தமற்ற காரியம் என்பதையும் ஆதாரங்களுடன் எடுத்து உரைத்தார்.

"புதிய அரசியல் அமைப்பின்படி இந்தியர்கள் சர்வ ஜன வாக்குரிமை பெற்றிருக்கிறார்கள். இந்திய மக்கள் இத்தகைய ஜீவாதார உரிமை பெற்றது இந்திய சரித்திரத்திலேயே இது தான் முதல் தடவை.

"வயது வந்த சகலருக்கும் வாக்குரிமை உண்டு என்பதற்கு, தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லோருக்கும் தேச நிர்வாகத்தில் பங்கு உண்டு என்பதே அர்த்தம்.

"அதாவது, யாதொரு தங்கு தடையுமின்றி உங்களுடைய சொந்த சர்க்காரை நீங்கள் அமைத்துக் கொள்ளலாம்; உங்களுடைய சொந்த மதத்தை நீங்கள் பின்பற்றலாம்; உங்களுடைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் அனுஷ்டிக்கலாம்; உங்களுடைய சொந்த பாஷையைப் பேசலாம்; உங்களுடைய சொந்த வாழ்க்கையையும் தொழிலையும் நடத்தலாம்.

"உண்மையான ஜனநாயகம் என்பது இதுதான். இதை விடுத்துக் கொள்ளை, கொலை போன்ற பலாத்காரமான குற்றங்களைச் செய்வது ஜனநாயகம் ஆகுமா?

"அத்தகைய காரியங்களைச் செய்வோர் ஜனநாயக வாதிகள் ஆகமாட்டார்கள். அவர்களால் நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்து நேரும். அத்தகையோருக்குச் சுதந்திரம் அளிப்பதால் சமூகத்துக்கு ஆபத்து நேரும்."

இவ்வாறு சர்தார் பட்டேல் ஜனங்களின் சக்தியையும் பொறுப்புகளையும் கடமைகளையும் விவரித்தார். ஜனநாயக விரோதிகளின் விபரீதமான காரியங்களைக் கண்டித்தார்.

சுதந்திர இந்தியக் குடியரசுத் திட்டத்தின்படி ஜனங்கள் தங்கள் இஷ்டப்படி கட்சிகளை நிறுவிக் கொள்ளலாம்; தங்கள் விருப்பத்துக்கு இணங்க சர்க்காரைச் சிருஷ்டிக்கலாம்; மாற்றி அமைக்கலாம்; வீழ்த்தவும் வீழ்த்தலாம்!

அவ்வாறாக ஜனநாயகத்துக்கே ஜீவநாடியான சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கும்போது பலாத்கார முறைகளிலோ, சூழ்ச்சி வேலைகளிலோ, நாச காரியங்களிலோ ஈடுபட்டுத் தேச நலன்களைக் குட்டிச்சுவராக்குவது பெரும் குற்றம் அல்லவா?

அதிலும் ஜனநாயகத்தின் பெயரால் அத்தகைய குற்றத்தைச் செய்வது மகா கொடிய மோசடி அல்லவா?

ஆக்கவும் ஆக்கலாம்: அழிக்கவும் அழிக்கலாம்!

பாரத நாட்டில் மாசு மறுவற்ற உண்மையான ஜனநாயகம் நிலவ வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை; அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோரை யாரும் தடுக்கவில்லை.

ஆனால், ஜனங்களைக் கொள்ளையிட்டும் கொன்றும் தேசத்தைப் பல விதத்திலும் பாழ்படுத்தி ஜனநாயகத்தைச் சிருஷ்டிக்கப் போவதாகக் கூறும் ஜகஜாலப் புரட்டைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

சுதந்திர இந்தியாவிலே அரசியல் கட்சிகள் இருக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை; அரசியல் கட்சிகள் அமைவதற்கு யாரும் முட்டுக் கட்டை போடவில்லை.

ஆனால், ஜனநாயக வரம்புக்கு உட்பட்டு நேர்மையான முறையில் அரசியல் கட்சிகள் அமைய வேண்டும். புரட்டையும் சதியையும் பலாத்காரத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளின் லட்சியம் எவ்வாறு சிறந்ததாக இருக்க முடியும்?

இந்த நாட்டு மக்கள் யாவரும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்பதை எவரும் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால், பாரதநாடு பல்லாண்டு பல்லாண்டாகப் பாடுபட்டுத் தியாகம் புரிந்து பெற்ற பெறுதற்கரிய சுதந்திரத்தை உருக்குலைப்பதற்குச் சுதந்திரம் வேண்டும் என்றால், அதற்கு யாராவது இசைய முடியுமா?

கோடிக்கணக்கான ஏழை மக்களும் தொழிலாளர்களும் நித்திய தரித்திரர்களாக இருக்க வேண்டும் என்றோ, நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் போய்க் குவிந்து கிடக்க வேண்டும் என்றோ யாரும் விரும்பவில்லை.

தேசத்தின் செல்வத்தை அனுபவிக்க எல்லாருக்கும் சம உரிமை உண்டு என்பதை நேர்மையான புத்தியுள்ள யாரும் மறுக்க மாட்டார்கள்.

எனினும் பொருளாதார ஏணியின் முதல் படியில் அல்லலுற்று அவதிப்படும் பாரத நாட்டின் செல்வத்தைப் பெருக்கிய பிறகு அல்லவா அதைப் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற கேள்வி எழ முடியும்?

இன்றுள்ள நிலையில் இந்தியாவின் செல்வத்தைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பது, இந்தியாவின் துன்பத்தை, வறுமையை, பசியை, பிணியைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஒப்பாகும்!

ஒரு சில செல்வவந்தர்களைக் கீழே இறக்கு முன் பல கோடிக் கணக்கான ஏழைகளை மேலே உயர்த்த வேண்டும்.

வெகுகாலமாக சர்வ மத சம்மதமான கொள்கையைக் கடைப்பிடித்து வரும் பாரத நாட்டில் எந்த மதத்துக்கும் எவ்வித ஆபத்தும் நேருவதை யாரும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

ஆகவே ஹிந்து மதத்துக்கோ, மற்றெந்த மதத்துக்கோ ஆபத்து என்ற வகுப்புவாதக் கூக்குரலை யாரும் ஒப்புக் கொள்வதற்கில்லை.

"மதத்துக்கு ஆபத்து" என்னும் ஆபத்து நம் நாட்டை அணுகாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

• • •

இவ்வாறாக, சுதந்திர இந்தியா சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் நாளடைவில் ஒன்று பத்து நூறாகப் பெருகிக் கொண்டே போகின்றன.


பாரதநாடு சுதந்திரம் அடைவதற்கு முன் நாம் ஒரே ஒரு பிரச்னையைத்தான் சமாளிக்க வேண்டியிருந்தது.

அடிமை விலங்கைத் தகர்த்துச் சுதந்திரம் பெற வேண்டும் என்பதுதான் அந்த ஒரே பிரச்னை.

அந்தப் பிரச்னை தீர்ந்து விட்டால் பாரத நாட்டை அல்லல் படுத்தும் மற்றத் தொல்லைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் தானாக மாயமாய் மறைந்து விடும் என்று எல்லோரும் எண்ணினார்கள்.

ஆனால் சுதந்திரம் பெற்ற பின் இந்தியாவை யாரும் எதிர்பாராத விதமாக எண்ணிக்கையற்ற பிரச்னைகள் எதிர்நோக்க ஆரம்பித்து விட்டன.

ஏமாற்றம்!



உணவுப் பஞ்சத்தினால் கஷ்டப்பட்டு வரும் ஆசிய நாடுகள் அமெரிக்காவின் உதவித் திட்டத்தினால் தங்களுக்குக் கதி மோட்சம் ஏற்படலாம் என்று நம்பி வந்தன. ஆனால் அந்தத் திட்டத்தை அனுசரித்து மலாயா, இந்தோ சீனா முதலிய நாடுகளுக்கு அமெரிக்கா யுத்த தளவாடங்களை அனுப்பத் தீர்மானித்திருக்கிறது.


கும் பதினாலு அவுன்சு கொடுப்பதற்கு வழி இருக்கிறதா? அவ்வாறு கிடைப்பதற்கு உடனடியாக என்ன செய்ய வேண்டும்? இவ்விஷயமாக அவர்களுடைய அறிக்கையில் யாதொரு பேச்சு மூச்சும் இல்லை. சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும்! எட்டு அல்லது பத்து அவுன்சுக்காவது பஞ்சம் ஏற்படாமல் ஜனங்கள் வாழ முடியுமா என்ற கலக்கம் ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், சுத்தமான அரிசி குறைந்த பட்சம் பதினாலு அவுன்சாவது அளிப்பதற்கு சர்க்கார் எங்கே போவார்கள்?

உருவான யோசனை, ஆனால் ....

மேற்படி கமிட்டியாரின் அறிக்கையில், உணவு தானியங்களுக்கு அரசாங்கம் விற்பனை வரி விதிக்கக் கூடாது என்பது ஒரு சில உருவான யோசனைகளில் ஒன்றாகும். இந்த யோசனை நமது மாகாண நிதி மந்திரி கனம் கோபால் ரெட்டிக்கு மிகுந்த கோபத்தை உண்டு பண்ணும் என்பது நிச்சயம்! விற்பனை வரியின் மூலம் இந்த மாகாண சர்க்காருக்கு 1946—47ம் வருஷத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. ஆனால் அதே விற்பனை வரியின் மூலம் 1949—50ல் பதினைந்து கோடி ரூபாய்க்குமேல் வருமானம் கிடைத்திருக்கிறது. இதிலிருந்து இந்த மாகாணத்திலே சென்ற மூன்று நாலு வருஷங்களுக்குள் ஏழைகளையும் நடுத்தர வகுப்பாரையும் பாதிக்கும் விற்பனை வரி நூறு சத விகிதத்துக்குமேல் அதிகமாகியிருக்கிறது என்பது தெரிகிறது அல்லவா?

அப்படியிருந்தும், சில தினங்களுக்கு முன் கனம் கோபால் ரெட்டி என்ன சொன்னார் தெரியுமா? கோயம்புத்தூர் இந்திய வர்த்தக சங்கத்தினர் அவரிடம் சமர்ப்பித்த மகஜரில் சிற்சில இனங்களையொட்டி விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அந்தக் கோரிக்கைக்கு அவர் அளித்த பதிலில், "உணவுப் பொருள்களுக்கே நான் விற்பனை வரி விதித்திருக்கும்போது மற்றப் பண்டங்களுக்கு விதித்திருக்கும் விற்பனை வரியைக் குறைப்பது பற்றி ஆட்சேபணையே எழுவதற்கில்லை" என்று கூறிவிட்டார். இந்த நிலையில் உணவு தானிய விசாரணைக் கமிட்டியார் கூறியுள்ள உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்கக் கூடாது என்ற உருவான யோசனை எங்கு உருப்படப் போகிறது?

அழைப்பும் மறுப்பும்



இந்திய சர்க்காரில் மந்திரி பதவி ஏற்கும்படி உத்தரப் பிரதேசப் பிரதமர் பண்டித பந்தை ஜவாஹர்லால்ஜி அழைத்துள்ளார். ஆனால் அவரைப் புது டில்லி மந்திரி சபைக்கு அனுப்ப முடியாதென்று உ. பி. காங்கிரஸ் கட்சியினர் மறுத்து வருகிறார்கள்.

கல்கி

மலர் 9

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

இதழ் 42

என்ன சேதி?

ஏட்டுச் சுரைக்காய்........

கண்ட்ரோல்கள் இருக்க வேண்டுமா அல்லது ஒழிய வேண்டுமா? இந்த விஷயத்தில் அரசியல் நிபுணர்களுக்கும் பொருளாதாரப் பண்டிதர்களுக்கும் இருக்கும் அபிப்பிராய பேதத்தைப் போல வேறு எந்த விஷயத்திலும் இல்லை' எனலாம். எனவே, இந்தப் பிரச்னையையும் உணவு தான்யங்கள் பற்றிய நிலைமையையும் தீர ஆராய்ந்து ஒரு முடிவு காண்பதற்காக இந்திய சர்க்கார் சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் உணவு தான்ய விசாரணைக் கமிட்டி என்ற ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் சென்ற ஒன்பது மாதங்களாக ஆராய்ச்சி செய்து இப்போது தங்களுடைய அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலுள்ள நிபுணர்கள் முக்கால் வருஷமாக முனைந்து பரிசிலனை செய்து கண்டு பிடித்துள்ள முடிவு என்ன என்கிறீர்கள்? அவர்களுடைய அறிக்கை கண்ட்ரோல்கள் இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை ஆதரிப்பதாக இருக்கிறது; கண்ட்ரோல்கள் எடுபட வேண்டும் என்ற கருத்தையும் ஆதரிப்பதாக இருக்கிறது! இதனால் இரண்டு விதமான அபிப்பிராயம் உடையவர்களும் திருப்தி அடையலாம் அல்லவா?

"கண்ட்ரோல்களை முற்றிலும் எடுத்து விட இன்னும் காலம் பக்குவம் அடையவில்லை. எனினும் 1951-ம் வருஷத்துக்குள் இந்தியா உணவுப் பொருள்கள் விஷயத்தில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியிருப்பதால், இப்போது முதற் கொண்டே கண்ட்ரோல்களைக் கை விட்டுச் சகஜமான நிலைமை ஏற்படுவதற்கு நாட்டு மக்கள் தயாராகி வர வேண்டும்" என்பதுதான் அந்தக் கமிட்டி கண்டுள்ள முடிவாகும்.

கண்ட்ரோல்களைக் கை விட தேசம் தயாராகி வர வேண்டும் என்று கூறியுள்ள கமிட்டியார், அவற்றைக் கைவிட வழி என்ன என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் கண்ட்ரோல்களை எவ்வாறு அமுல் நடத்த வேண்டும்? உணவு தான்யங்களை எவ்வாறு விநியோகிக்க வேண்டும்? இவை போன்ற பல காரியங்களைப் பற்றியும் சுவாரஸ்யமான யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். கமிட்டியாரின் யோசனைகள் ஏட்டளவில் நன்றாகத்தான் இருக்கின்றன.

....இலைக்கு உதவுமா?

கைத் தொழில் பிரதேசங்கள், பற்றுக் குறை அதிகமாக உள்ள இடங்கள், பெரிய நகரங்கள் இவைகளில் ரேஷன் முறை தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியம் என்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் பகிர்ந்து அளிப்பதில் கட்டுப்பாடு இருப்பதுடன், விலைவாசிகள் உயராமல் தடுப்பதற்காக மற்றொரு புறம் வேண்டிய அளவு உணவு தான்யங்களை விற்கும் சுதந்திர மார்க்கெட்டுகளும் இருக்க வேண்டும் என்று யோசனை கூறியிருக்கிறார்கள்.

ரேஷன் முறை அமுலில் இருக்கும் பிரதேசங்களில் முக்கிய தான்யங்கள் வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும் தினசரி பதினாறு அவுன்சுக்குக் குறைவில்லாமலும், ஒவ்வொரு குழந்தைக்கும் எட்டு அவுன்சுக்குக் குறைவில்லாமலும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், ரேஷன் தான்யங்கள் புழு, பூச்சி, மண், கல் மயமாக இராமல் சுத்தமானவையாக இருக்க வேண்டும் என்றும் அந்தக் கமிட்டியார் கூறியிருக்கிறார்கள்.

தென்னிந்தியா சம்பந்தப்பட்ட வரையில் அரிசி பதினாறு அவுன்சுக்குக் குறைவில்லாமல் கிடைக்க வேண்டும் என்று சிபார்சு செய்துள்ள கமிட்டியை ஜனங்கள் வாழ்த்துவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், தினசரி ஒவ்வொருவருக்

புதிய "எச். எம். வி" வெளியீடு!





ஸ்ரீமதி எம். வி. நவநீதம் &
ஸ்ரீ எம். எல். பதி
(காமிக்)
N. 28168
குதிரை பந்தயம்
(2 பாகங்கள்)

" ஆர்கேஸ் பிக்சர்ஸ் தயாரித்த "
"தேவமனோஹரி"
பாட்டுகள்

N. 28171
ஸ்ரீமதி பி. பானுமதி
சேலை கட்டிய மாதரை
மதனா நீ வா

N. 28172
ஸ்ரீமதி பி. பானுமதி
இந்திரனோ சந்திரனோ
ஸ்ரீ சி. ஹொன்னப்பா பாகவதர்
தாயே பராசக்தியே



ஜுபிடரின்
விஜயகுமாரி
பாட்டுகள்
N. 28169
ஸ்ரீமதி ஏ. பி. கோமளா & ஸ்ரீ புளிமூட்டை ராமசாமி
வா வவ்வா
ஸ்ரீமதி ஏ. பி. கோமளா & பார்டி
தையத்தான்
N. 28170
ஸ்ரீமதி ஏ. பி. கோமளா
லாலு லாலு
ஸ்ரீமதி ஏ. பி. கோமளா & ஸ்ரீமதி ஜமுனா
ஆணவத்தினாலே

"HIS MASTER'S VOICE"

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்
கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 42 — மே 21 — விக்ருதி ௵ வைகாசி 8

"கல்கி"யில் வெளியாகும் கதைகளின் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



எவர்ஸில்வர் பாத்திரங்கள்

ஏராளமாக வந்து குவிந்துள்ளன

○●○

கலியாண காலங்களுக்கு

வேண்டிய பாத்திரங்கள்
செட்டாகக் கிடைக்கும்

○●○

என். காசிவிஸ்வநாத அய்யர்


ருக்மணி குக்கர், எவர்-ஸில்வர் பித்தளைப் பாத்திர வியாபாரம்

38, கீழ மாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்

பிராஞ்சு :

எவர்ஸில்வர் எம்போரியம்

1-72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்



எக்ஸிமா

சரும வியாதிகளுக்கு, முக்கியமாக எக்ஸிமாவுக்கு ஜைமாக்ஸ் மிகவும் சிறந்தது. சருமத்தின் மேல் ஏற்படும் எரிச்சலை மாயமாய்ப் போக்குகிறது. சருமத்தை இயற்கை நிறத்துக்கும் தன்மைக்கும் கொண்டு வருகிறது. என்றும் ஒரு பாட்டில் உங்கள் வசம் இருக்கட்டும்




ZIMAX
AN ECZEMA CURE



தந்த சுகாதாரம்


சொத்தையான பற்கள் சீரான தேக ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. தைமோஸின் பற்களையும் ஈறுகளையும் பாதுகாருங்கள். பயோரியா, கிருமிகள் நோய்களையும் சுவாசத்தில் துர் நாற்றத்தையும் தவிர்க்கிறது. உங்கள் குடும்பத்துக்கு அவசியமானது தைமோஸின்



THYMOCIN
FOR DENTAL HYGEINE

டி. எம். தாகூர் & கோ., 9, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்

உஷ்ணமாயிருக்கும் வேளையில்



ஓவல்டின் கலந்த குளிர்ந்த பானம்

புத்துணர்ச்சியும் போஷாக்கும் தரும்.



அதிகரித்த உஷ்ணம் உங்கள் ஜீவசக்தியைக் குறைத்து, அமைதியின்மையும், அசௌகரியமும் உண்டாக்கும்.

உஷ்ண வேளையில் 'ஒவல்டின்' கலந்த குளிர்பானம் பருகலாம். அது குளிர்ச்சியும் புத்துணர்வும் அளிக்கும். அதைவிட முக்கியமாக புதிய ஜீவசக்தியளிக்கும் சத்தான போஷணைத்துக்கு உதவி புரிவதான மதிப்பு வாய்ந்த அதிகப்படி உணவாகவும் விளங்குகிறது.

ஒவல்டின் ஆரோக்யத்திற்கு இவ்வளவு உதவிபுரிவது ஏனெனில் அதில் பழுத்த பார்லி மால்டிலுள்ள புஷ்டியும், ஜீவசக்தியும் தரும் குணங்களும் சுத்தமான கட்டுப்பாலும், விசேஷமாகத் தயாரித்த கோகோவும். இயற்கை பண்டங்களிலுள்ள விடமின்களும் நிறைந்த அளவு அடங்கியுள்ளன.

'ஒவல்டின்' என்று பெயர்கொண்டது ஒன்றுதான். அது இணையற்ற பிரத்யேக வகையைச் சார்ந்தது.

'OVALTINE'



ஓவல்டின்

உலகில் மிகப் பிரசித்திபெற்ற உணவு பானம்.

விநியோகஸ்தர்கள்:— ரொஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி.
(இந்தியா) லிட்.,

OV. 304.

1875

தி கடாவ் மில்ஸ்

75

வருஷங்களாக
ஒரே அதிகாரத்
தின் கீழ்

1950



கடாவ்
அழகு குணம் வாய்ந்த
வாயில்கள்


75 வருஷ உழைப்பின் ஒரு சின்னம்.


தீ கடாவ் மில்ஸ், பைகுலா, பம்பாய் 27. ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்டு பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜி ஜேதா மார்க்கெட், கோவிந்த் சௌக், பம்பாய் 2.

SISTA'S-KM (S)-18-TAMIL

டன்லப்

ஆர்.எச்.எஸ் ட்ரக் & பஸ் டயர்கள்





கனமும் பலமும் கொண்ட ரிப்புகள் ஸைட்வால் பழுதடையாமல் காக்கின்றன. புது ட்ரெட் மாடல்—டன்லப் முதல் முதலாக டயர்களுக்குப் பற்கள் ஏற்படுத்தியதிலிருந்து இடைவிடாது செய்த ஆராய்ச்சியின் பலன்—பத்திரமாக நீங்கள் ஓட்டுவதற்கு உத்தரவாதமளிக்கிறது.

பெரியவை-கனமானவை-பத்திரமானவை-

லேடக்ஸ் இணைப்புள்ளவை.



கட்டிட நிருமப்பின்
உறுதியான அம்சம்
சூலம் IC மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட்
ஸிமெண்ட்
தென்னிந்தியா முழுவதும் இந்தியா
ஸிமெண்ட்ஸ் ஸ்டாக்கிஸ்டுகளுள்ளனர்
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்

இரட்டிப்பு ஆகாரம்



குழந்தையின் வளர்ச்சி அவனுடைய ஆயுட்காலம் பூராவும் இருக்கும் சரீரத்தின் அமைப்பை ஸ்தாபிக்கின்றது. அதனால்தான் ஓர் தாயானவள், எந்த ஆகாரங்கள் குழந்தை பிறப்பதற்கு முன்னும் மற்றும் அவளுக்குப் பாலூட்டி வரும்பொழுதும் குழந்தைக்குத் திடகாத்திர வளர்ச்சியைக் கொடுக்குமோ அந்த ஆகாரங்களை முக்கியமாகச் சாப்பிடவேண்டும். தற்சமயம் கிடைக்கும் உணவுப்பொருள்களில், உடல்வளர்ச்சிக்கு அத்தியாவசியமான விடமின்கள் விசேஷமாகக் குறைந்திருக்கின்றன. ஆதலால், ஓர் தாய் அதிகப்படியான விடமின்களை உட்கொள்ளாவிடில், அவளுடைய குழந்தை நோஞ்சானாகப் பிறந்து அதைப் பராமரிப்பதற்கு மிகச் சிரமமாக இருக்கும். எம். ஜி. பி. (மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட்) ஷார்க் லிவர் ஆயிலில் ஓர் ஆளின் நித்திய தேவைக்கு அத்தியாவசியமான பூர்ண அளவு A & D விடமின்கள் நாளொன்றுக்கு ½ அணா செலவில் கிடைக்கும். ஓர் குழந்தைக்கு ¼ அணா செலவில் நித்தியமும் தேவையாயுள்ள இந்தப் பாதுகாப்புச் சத்துப்பொருள்கள் கிடைக்கும்.

மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட்

MADRAS GOVERNMENT BRAND

MGB

ஷார்க் லிவர் ஆயில்

ஒரு ஆளுக்குச் செலவு : நாளொன்றுக்கு ½ அணா.

- விடமின் 'A' :— உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சாதகமானது. நுரையீரலும், சின்னம்மை, நீர்க்கோர்வைகள், கக்கை நீக்கட்டி முதலிய நோய்களைத் தடுத்து — வெட்டுக்காயம் பிளவுபட்டகாயம் இவற்றினின்று விஷம் பரவாமல் பாதுகாக்கின்றது.

- விடமின் 'D' :— கணச்சூட்டைத் தவிர்க்கிறது. உறுதியான எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கும் சதைக்கும் இன்றியமையாதது.

கொழுப்புகள் :— விடமின்களை பூர்ணமாய் ஜீரணிக்கத் தேவையானதும், அதிகப்படி சக்தியை கொடுப்பதற்காகவும் வேண்டிய அளவு கலோரிகள் உள்ளது.

அடமின்

மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட் ஷார்க் லிவர் ஆயிலிலுள்ள கொழுப்புகள், மென்மையான ஜீரண சக்தியுடைய சமீபத்தில் பிறந்த சிசுக்களின் ஜீரணத்தைச் சிறிது பாதிக்கலாம். அப்படியானால், ருசி சாரமுள்ள அடமின் கொடுக்கவும். தினம் சில துளிகளே தேவை; அது எவ்விதமான தொந்தரவும் கொடுக்காது.

தயாரிப்பாளர்கள் :—

கவர்மெண்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் & காமெர்ஸ்

கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்

பாரி & கோ., லிட்., மெட்ராஸ்.

MTA'S-OO


ஜூன் 2உ முதல் எல்லா முக்கிய இடங்களிலும் வெளிவருகிறது
கப்பல் தீப்பற்றி விதி
வசத்தால் தனித்து
மனித சஞ்சாரமற்ற
தனித்தீவில் விடப்பட்ட
இரு சிறு உள்ளங்களின்
உணர்ச்சிகள் பிரதிபலிக்கும்
ஒர் உன்னத
சித்திரம்
J. ARTHUR RANK'S
நீலக் கடல்
முதல் தமிழ்
டெக்னிக்கலர் படம்
ஈகில்-லயன் வெளியீடு